


# மனிதன் படும் பாடு

(சிறுகதைகள்)



ஆக்கம் :

திருமதி கி. தவபாக்கியம்



# மனிதன் படும்பாடு

(சிறுகதைகள்)



ஆக்கம்

திருமதி தவபாக்கியம் கிருஸ்ணராசா

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் | : மனிதன் படும்பாடு |
| நூல் ஆசிரியர் | : திருமதி தவபாக்கியம் கிருஸ்ணராசா |
| முதற்பதிப்பு | : 2013 ஒகஸ்ட் |
| பக்கம் | : 84 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| பதிப்பு | : மெகா டியிற்றல், கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 7538305 |

# பொருளடக்கம்


1. வேலி எனக்கு
2. சிறீதனம் வேண்டும்!
3. தீர்பு அல்ல, தீர்ப்பு!
4. அம்மனின் கருணை
5. மாத்தியோசி!
6. அவன் வருவானா?
7. “கலை” தந்த பரிசு
8. அம்மன் உதவி
9. அதிகாரம்
10. சொல்பவனுக்கு வாய்ச்சுமை
11. சேறு பூசும் குணம்
12. பூவைப் போடுங்கோ
13. ஒருநாய் போதாதோ?
14. ஏன் எரிகிறார்கள்?
15. குட்டி வட்டன்கள்
16. அப்பனா சுப்பனா?
17. சுவீட்டிக்கற்
18. கூட்டப்போட்டாரோ?
19. இங்கேயுமா!
20. அவள் பாவம்!
21. கண்ணிலை காட்டவில்லையே!
22. வெளிநாட்டுச் சங்கிலி
23. நாற்பது ரூபாய்கள்
24. ஐயகோ! ஏதுசெய்வேன்
25. தெரியவேயில்லையே
26. இலட்ச (ண) வீடு
27. முட்டைப்பெட்டி
28. கேட்கவேமாட்டார்
29. அங்கேயுமா!
30. நடந்ததும் நடப்பதும்
31. இரண்டு(செகிடுகள்)செவிடுகள்!
32. புரியாமை!
33. காந்தம் இழுக்கிறதா?
34. லைசென்சு வேணுமாம்!
35. கிழவனின் கனவு
36. நல்ல காலம் பிறக்குது!
37. கண்ணீர்
38. அச்சு அகம்
39. மனிதஉரிமை
40. இது பைத்தியம் தான்
41. வெறுப்பான செருப்பு
42. சிறுமியின் பண்பாடு
43. அநித்தியம்
44. ஓடி வருவார்
45. இனி வருவேனோ?
46. எவரின் வேலையோ?

# அணிந்துரை

“மனிதன்படும் பாடு” என்னும் நூலுக்கு திருமதி.தவபாக்கியம் அவர்கள் அணிந்துரை கேட்டபோது யான் கூறினேன், தங்கள் நூல்களுக்கு மிகக்காத்திரமான விமர்சனம் கொடுக்கிறது ஊடகப்பகுதி அதுவே போதுமே! யானும் இன்றையோ நாளையோ என்றிருக்கிறேன். ‘மேலே’ போவதற்கு ‘வீசா’வுடன்! என்று கூறிச்சிரித்தபோது,

பரவாயில்லை! தாங்கள் ‘மேலே’ போவதற்கு வைத்திருக்கும் ‘வீசா’வை என்னிடம் தந்து விடுங்கள். யான் அந்த ‘வீசா’வில் மேலே போகிறேன். அதன்பின்னர் தாங்கள் ‘வீசா’ எடுத்து மேலே வாருங்கள்! அங்கும் வந்து தங்களிடம் அணிந்துரை கேட்பேனே!! என்று புன்முறுவலுடன் கூறினார் திருமதி.தவபாக்கியம் அவர்கள். அந்தப்புன்முறுவலின் பின்னும் அணிந்துரை எழுதாமல் இருக்கமுடியுமா என்ன?

கிழவனின் கனவு, மனிதனெனப்பட்டவன் தனது நாக்கைச் சுழற்றிவிட்டு கோபாலு போல் எவ்வளவு அவத்தைப்படுகிறார்கள் என்பது அப்பட்டமாகக் காட்டப்படுகிறது. குழந்தைகள் தானே எப்படியும் பேசலாம் என்று நினைப்பது பெரும் தவறு.

நல்லகாலம் பிறக்கிது! சோதிடத்தில் நம்பிக்கை மனிதனுக்கு என்பது இக்கதை மூலம் தெளிவாகிறது. இக்கதையைப் படிப்பவர்கள் தாங்களும் சோதிடத்தை சோதனை செய்து பார்க்கலாம்! (நம்பிக்கையிருந்தால்)

சிறுமியின் பண்பாடு, ஓடிவருவார், ஒரு பிழை நூறு பிழைக்குச் சமன் ஏன் வந்தீர்கள்! என்னும் சிறுகதைகள் நூலுக்குச் சுவையூட்டுகின்றன. பல்வேறு விதமான உணர்ச்சிகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் ‘மனிதன் படும்பாடு’ என்னும் நூல் வாசகர்களுக்கு பெரும் விருந்தாகும்.

திருமதி.தவபாக்கியம் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

திருக்குறட்செம்மல்
வே. பேரம்பலம்.பி.ஏ
கல்வி வெளியீட்டு திணைக்களம்
முன்னைத்துத் தலைவர்
தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்
முன்னை இணைப்பதிப்பாசிரியர்

# எனதுரை

மனிதனை இந்த மனமானது என்னபாடு படுத்துகிறது பாருங்கள்! அப்பப்பா! சொல்லி மாளாது போங்கள்!! சும்மாயிரு மனமே என்றால் என்றால் கேட்குதா? ஒருவிநாடி கூட சும்மாயிருக்காதே? இதனை யோசித்தபோது "மனிதன்படும்பாடு" என்னும் நூல் எழுதத்தூண்டியது மனிதனும்

மனமும் பின்னிப்பிணைந்தவை ஆச்சே!

திருக்குறள் செம்மல் உயர்திரு.வே.பேரம்பலம் அவர்கள் கூறுவது போன்று எனது வாசகர்கள் இந்நூலை விரும்பி வரவேற்பர் என நம்புகிறேன்.

அணிந்துரை செய்த உயர்.திரு.வே.பேரம்பலம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியுடன் வாழ்த்தி வணங்குகிறேன்

திருமதி.தவபாக்கியம்

# 1. வேலி எனக்கு

யாழ்ப்பாணத்தான் கெட்டிக்காரன் என்று வாங்கியவன்! அத்துடன், இடம் கொடுத்தால் மடத்தையும் பிடுங்குவான்! தயாராணிக்குச் சிரிப்பு வந்தது. “வேலி தனக்காம்” நடராசு சொல்லுறான் என்று மகேசுவரி சொன்னதைக் கேட்டு, தயாராணி வேலை நிமிர்த்தமாகக் கணவனுடன் அயலூர் போய்விட அவளின் வீட்டை அண்ணன் வீட்டார் பாரத்துக் கொண்டனர். பின்பு அண்ணன் வீட்டாரும் வெளிநாடு என்று சென்று விட்டனர். பிள்ளைகளுடன் வாழ்வதற்கு,

அவர்கள் தங்களது வீட்டை அயலிலுள்ள நடராசுவிடம் குடியிருப்பதற்கு விட்டுச் சென்றனர். நடராசா குடும்பம் வறுமைப் பட்டதென்று வாடகை எதுவும் வாங்கவில்லை. இரண்டு வருடத்தில் வீட்டை விட்டுவிட வேண்டுமென்பது உடன்படிக்கையில் எழுதப்பட்டது. தயாராணியும் அதற்கு முன்பே இன்னொரு குடும்பத்திற்குத் தனது வீட்டைக் கொடுத்திருந்தாள். வீட்டைப் பராமரித்துக் குடியிருப்பதற்கு, உடன்படிக்கையில் ஐம்பது ரூபா வாடகை என்று எழுதப்பட்டது ஆனால் தயாராணி அவர்களிடம் வாடகை வாங்குவது கிடையாது, அவர்களும் வறுமைப்பட்டவர்கள் தான். ஒரு வருடத்தின் பின் அவர்கள் வேறிடம் போனபோது தயாராணியின் அண்ணரின் வீட்டிலிருந்த நடராசு கேட்டான். நான் காணிக்குள் ஆடுமாடு கட்டி மேய விட்டு, வீட்டையும் பார்த்துக் கொள்கிறேன் என்று, தயாராணியும் சரியென்று ஒப்புக் கொண்டாள். இரண்டு வருடத்தின் பின் வீட்டை வேறு யாருக்கோ விற்று விட்டாள். அப்போது மகேசுவரி வேலிகட்டவென்று சென்ற போது, அதுதான் அடைச்ச வேலியென்றும், தனக்குத் தான் வேலி உரிமையென்றும், நீங்கள் தொடப்படாது என்றும் மகேசுவரியிடம் கூறினான் நடடேசு.

அண்ணர் வீட்டுக்கும், தயாராணி வீட்டுக்கும் இடையில் உள்ள அந்தவேலி தயாராணிக்கு உரியது. ஆடுமாடு மேய விடுகிறேன் என்று கூறிவிட்டு, இப்போ வேலி தனக்குரிமை என்கிறான் நடராசு, அவன் கூலிக்கு வேலியடைத்து விட்டு வேலி தனக்கு என்கிறான். அப்போ வீடு கட்டும் கூலியாளர்களும் தாங்கள் கட்டிய வீடு என்றும் தமக்குரிமையான வீடு என்றும் உரிமை கோரலாமா! அடேங்கப்பா! உரிமைச்சட்டம் எப்படிக் காற்றில் படபடக்கிறது!

பின்னர் மகேசுவரி தயாராணியின் அண்ணருக்கு அறிவித்து விடயத்தைக் கூறிய போது அதில் தலைவிட வேண்டாம் என்று அண்ணர்

நடராசுவுக்கு அறிவித்தார். நடராசு இருக்கும் வீடு அண்ணருடையது. அப்படியிருக்க வேலி உரிமை பெற அவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது! நடராசு, அண்ணர் வீட்டையும் தயாராணி வீட்டையும் விலைக்குக் கேட்டிருந்தான் கருவாட்டு விலைக்கு! அதாவது அரைவிலைக்கு. அயலில் பரப்பு எழுபத்தைந்து போகிறது, நடராசு கேட்பது முப்பதுக்கு! தயாராணி வீட்டை மகேசுவரிக்கு விற்றுவிட்டாள். அதுதான் நடராசு வேலையில்லாமல் வேலியில் சுரண்டிப்பார்த்தவன். மனிதருள் மாணிக்கம் என்றால் நடராசு வைத்தான் கூற வேண்டும்! மாணிக்கம் சிறிது சிறிதாகத் தண்ணீர் பட்டுக் கரையுமாமே! அப்படியே நடராசுவும்.......!

## 2. சிறீதனம் வேண்டும்!

வெளிநாட்டிலிருந்து லீவில் வந்திருந்தான் மகன் பத்தராசா.வேலை கிடைத்துவிட்டால் பையனுக்குத் திருமணம் செய்து வைப்பதென்பது பெற்றாரின் பழக்கத்திலும் வழக்கத்திலும் உள்ள முறையாகும். தங்கநாயகி தனது கணவன் தருமராசாவிடம் அதுபற்றிக் கதைத்தாள். அதற்கு அவன் கூறினான், ஒவ்வொரு வீட்டிலும் போய், ‘பெம்பிழை’ இருக்கோ? என்று நான் கேட்கட்டே என்று அசுவாரசியமாய்,

எல்லாரும் அப்படிக்கேட்டே பிள்ளையளுக்குத் திருமணம் செய்து வைக்கினம்? என்று திருப்பிக் கேட்டாள் தங்கநாயகி. பின்னர் ‘புறோக்கர்’ ஒருவரிடம் விடயத்தைக் சொல்லி விட்டாள். சில நாட்களின் பின் ‘புறோக்கர்’ வந்து தர்மராசாவிடம் கேட்டான். பெண்ணுடைய குறிப்பு ஒன்று வந்திருக்கு, பெண்ணுக்கு எவ்வளவு கேட்கிறீர்கள் என்று,

அடேய்! நான் மகனை விற்கவே போகிறேன்? போய் உன் வேலையைப் பார் என்று புறோக்கரை அனுப்பி விட்டான் தர்மராசா.வெளியே போயிருந்த தங்கநாயகி வந்ததும் நடந்ததைச் சொன்னான் தர்மராசா.

ஆகாகா! எவ்வளவு கெட்டிக்காரன்! நீங்கள் சீதனம் வாங்காமலே என்னைக் கலியாணம் செய்தனீங்கள்! பத்துலட்சம் சீதனம் வாங்கிக் கொண்டு ஐந்துலட்சம் தந்ததென்று உறுதியிலை எழுதினனீங்கள்? ஏனென்றால் நான் சிலநேரம் பணம் கேட்க நேர்ந்தாலும் என்றுதான் ஐந்துலட்சம் பொய்க்கணக்கு எழுதி வைச்சதைப் பார்த்தனான். எல்லாரும் அதுவேணும் இது வேணும் என்று கேட்டுத்தானே வாங்குகினம். எங்கையாவது நூற்றுக்கு இரண்டு பேர் தான் பெண்ணுக்கு நீங்கள்

கொடுப்பதைக் கொடுங்கோ என்று பெருந்தன்மையுடன் நடந்து கொள்வர் என்று தங்கநாயகி கூறினாள்.

பையன் பத்தராசாவும் கொழும்பு சென்றுவிட்டான். சில வருடங்கள் கழித்துத் திரும்பவும் வந்தான். பத்தராசா லீவில் அம்மாவை கொழும்பு வரும்படியும், திருமண விடயம் முடிவு செய்யவும் என்று, தங்கநாயகியும் கொழும்பு போக ஆயத்தமானாள்.

அச்சமயம் கணவனிடம் கேட்டாள் ஏதும் சரிவந்தால் கலியாண வீட்டுக்குக் கொழும்பு வருவீர்களா? என்று, நான் வரமாட்டேன், சீதனப் பணத்தை வாங்கிக் கொண்டு வா, என்றான் தர்மராசா, அவனுக்குத் தேவை சீதனப்பணம்! கொழும்பு சென்றபோது மகன் கேட்டான், அம்மாவிடம் கலியாண வீட்டுக்கு அப்பா வருவாரா? என்று

"கூ" என்று கூப்பிட வந்துவிடுவார்! என்று கூறிச் சிரித்தாள் அம்மா. திருமணம் முடிந்து விட்டது. வீட்டுக்கு வந்த மனைவியிடம் கேட்டான் தர்மராசா, சீதனம் என்ன மாதிரியென்று, மகன் சீதனம் வாங்காமல் தான் திருமணம் செய்தவன் என்று கூறிச் சிரித்தாள் தங்கநாயகி. பின்பு கூறினாள் உங்களுக்குப் பணம் வேணுமென்றால், என்னை டிவோசெடுத்து விட்டு இன்னொரு கலியாணம் செய்யுங்கோவன்! பிறகும் அதையும் டிவோசெடுத்து விட்டு இன்னொரு கலியாணம் செய்யலாம் சீதனங்களுடன்! இப்படி முன்பே அடிக்கடி கலியாணங்கள் செய்து வந்திருந்தால் இப்போ நீங்கள் "கோடீசுவரன்" பட்டத்தை எட்டியிருப்பீர்கள்! என்றாள் தங்கநாயகி பொங்கி வந்த சிரிப்புடன்.

அச்சமயம் நண்பர் யோகராசன் சோதிடர் ஒருவரைக் கூட்டி வந்தான். எனக்குக் கொள்ளி வைக்கப் பிள்ளை இல்லை வேறு கலியாணம் செய்யலாம் என்று யோசிக்கிறன்! எப்படிப்பலன் சொல்லுங்கோ, என்று சோதிடரிடம் கேட்டான் தர்மராசா. சோதிடரும் சாதகம் பார்த்து விட்டுக் கூறினார். இந்த ஐப்பசி முடிய நல்ல பலன் இருக்கிறது என்று கூறிவிட்டு கூலியும் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார் சோதிடர். அருகே மனைவியும் மகளும் சிரித்துக் கொண்டனர்! பின்னர் தங்கநாயகியும், மகளும் சேர்ந்து அப்பாவுக்கு ஒரு கலியாணம் செய்து வைப்பம். கண்ணுக்கு ஒரு 'கூலிங்கிளாஸ்' போடவேணும் கண் பக்கம் கொஞ்சம் தோல் சுருக்கம்! அதை மறைக்கத்தான் மற்றது பெருஞ்சீதனம் காரும் கேட்டு வாங்குவம், காரும் பணமும் எங்களுக்கு பெண் அப்பாவுக்கு! சரிதானே, என்று ஏகமனதாக நிறைவேறியது திருமணப்பேச்சு!

இனியென்ன எங்கடை பாடு பெரிய பாடு! சோக்கெல்லோ!! அப்பருக்குச் சைக்கிள் நிக்கிது அதிலை ஓடித்திரியட்டும், நாங்கள் காரிலை ஓடித்திரிவம்! என்று கூறிக் கொண்டே தங்கநாயகி இரவுச் சமையல் இடியப்பம் அவிக்கச் சமையலறை சென்றாள்!

## 3. தீர்பு அல்ல, தீர்ப்பு!

பன்னிரண்டரை மணி என்று கடிகாரம் நேரத்தை உறுதி செய்தது. தமயந்திக்கும் வயிற்றைக் கிள்ளியது. காலையில் தேனீருடன் இரண்டு துண்டு பாண் சாப்பிட்டது. ஏய்! பசியே கொஞ்சம் பேசாமலிரு என்றால் கேட்குமா? கேட்காது! எதையாவது வயிற்றுக்குள் தள்ளு என்று தான் கூறும். இப்போதெல்லாம் கூடுதலாகச் சமைத்து குளிர்சாதனப்பெட்டியில் வைத்துக் கொள்வது வழக்கமாகி விட்டது வெளிநாட்டில் வேலை செய்வோர் போன்று!

நேரமும் மிச்சம், எரிவாயு கறன்ற் என்று அவையும் மிச்சம் ஆகிறது, செலவும் குறைகிறது தானே! தமயந்தியும் சோறு, கறி என்று குளிர்சாதனப்பெட்டியில் வைத்திருந்தாள். இப்போது சுடவைத்துச் சாப்பிட வேண்டும். சட்டியைக் கழுவி அடுப்பில் வைத்த பொழுது, மூத்த மருமகள் அருகே வந்து கூறினாள் கருணைநாதன் வருகிறாராம் என்று,

எப்பவாம்? என்றாள் தமயந்தி. இப்பவே வருகிறார் என்று பதில் கூறிய மருமகள் லீலா அயலிலுள்ள கடைக்கு விரைந்து சென்றாள். தமயந்தியும் தனது கிழிந்த உடையை மாற்றிக் கொண்டு முன் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தாள். லீலா சோடா வாங்கப் போகிறாளா? ஏன் சோடா வாங்குவான்? வீட்டில் பசன் பழம் இருக்குத்தானே? அதைக் கரைத்துக் குடுக்கலாம் தானே, என்று யோசித்த போது மருமகள் சீனியும் அங்கர் மாவும் வாங்கி வந்தாள்.

சில நிமிடங்களில் ஓர் பெண் சிறுகைப்பையுடன் முற்றத்தில் வந்து கொண்டிருந்தாள். யாரோ? என்று யோசனை செய்தபோது, ‘கேற்றுக் குள்ளால் ஒருவர் மோட்டார்ச்சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். ஓ! கருணைநாதன் தம்பதிகள்! முகங்கள் வித்தியாசப்பட்டு விட்டன. எத்தனை வருடங்களாகி விட்டன. வெளிநாட்டில் வேலை!

வாருங்கோ என்று வரவேற்ற தமயந்தி, ஆட்கள் யாரென்று தெரியாது மாறிவிட்டீர்கள் என்று சிரித்தாள். கருணைநாதன் தனது அரை வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே அப்படியா! என்று சிரித்தான். அவன் தமயந்தியின் அண்ணன் மகன். அவனுக்குப் பெரிய கண்கள்! கண்கள்

மட்டும் அவனை இன்னாரென்று காட்டிக் கொடுக்கும்! மனைவியாரும் இப்போது உடல் எடை கூடியிருந்தாள், முகமும் அகன்று இருந்தது. வயது போகப் போகக் கோலங்கள் மாறுவது இயற்கைதானே!

சுகநலன்கள் விசாரிக்கப்பட்டன. இடையில் லீலா பழரசத்துடன் வந்து நின்றாள். அதைப் பருகிய இருவரும் தொடர்ந்து அளவளாவினர். ஓ! மறந்து போனேன் கிரிநாதனின் விடயம் கணினியில் மருமகள் காட்டினவ என்ற தமயந்தியிடம், ஆமாம் நேற்று எல்லாம் முடிந்தது. 'கோமா' சுகம் வராது போய்விட்டது என்றான் கருணைநாதன். கிரிநாதன் கார் ஓடிச் சென்ற போது விபத்து ஏற்பட்டு 'கோமா'வில் இருந்தான் பலவருடங்களாக, இப்போது அவனுக்கு விடிவு, அதாவது முடிவு, எல்லாமே கணினியில் போட்டிருந்தது.

அவன் சிறுவயதில் என்னிடம் ஒட்டிப் பழகியவன், பாசம் மிகுந்தவன் என்று கண்கலங்கினாள் தமயந்தி. எல்லாரும் இப்படியே ஒவ்வொருவராகப் போக வேண்டியது தான் என்று வேதாந்தம் பேசினான் கருணைநாதன். தமயந்தி தனது கணவனின் நினைவிதழ் ஒன்றைக் கொண்டு வந்து கருணைநாதனிடம் நீட்டினாள். நினைவிதழை வாங்கிக் கொண்டவன். எலக்சன் கேட்டவராமே? வென்றவரா? என்று கேட்டான்.

ஓமோம் வெண்டவர் தான். இப்போ உந்தச் சபைகளில் அடிபிடி நடக்கிறதாம் ஒருவர்க்கொருவர் கதிரைகளையும் தண்ணீர்ப் போத்தல்களையும் தூக்கி எறியினமாம்! என்று கூறிச் சிரித்தாள் தமயந்தி. செயலாளர் தன்னிட்டப்படி நடக்கிறார் என்று குற்றச்சாட்டு வேறு, எங்கேயும் இரண்டு கன்னையாகப் பிரிந்தால் இப்படித்தான் அடிபிடி நடக்கும்! அதுசரி, ஏதோ புத்தகம் அடித்ததாம் கேள்விப்பட்டேன் என்று கூறிய கருணைநாதனிடம் தனது முதுகின் பின்னால் வைத்திருந்த சிறுகதைத் தொகுதிகளை எடுத்துக் கொடுத்தாள். தமயந்தி புன்னகையுடன், அதைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த போது மருமகள் லீலா கூறினாள். புத்தகம் அடிச்சு விலைப்படயில்லை, வீட்டிற்கு வாறபோறவைக்கெல்லாம் குடுத்துக் கொண்டிருக்கிறா என்று கூறிவிட்டு புத்தகம் அடிக்கிறதாலே காசும் செலவு தானே! என்று ஒரு தூக்கணத்தையும் அத்துடன் தூக்கி விட்டாள்!

நான் இப்ப எல்லாம் கனக்கப் புத்தகம் அடிக்கிறதில்லை. ஐம்பது, இருபத்தைஞ்சு என்று தான் அடிக்கிறனான். முதல் அடிக்கயிக்கை அச்சுக்காரன் தான் கூட அடிச்சவன். நான் சொன்னது நூறுபுத்தகம் போதுமென்று, அது விக்கலாமென்று கூறினான். உவவிட்டையும் ஐம்பது புத்தகம் கொடுத்தனான், கனடாவுக்கு அனுப்பவில்லை. அனுப்புற

செலவுகாசும் கொடுத்தனான்- இரண்டு ஆயிரம் ரூபா, அதுவும் தரயில்லை! பிரதேசசபை எடுக்குது எண்டு கடைக்குக் குடுத்த புத்தகத்தையும் திருப்பி வாங்கினன். இப்ப சொல்லுகினம் புத்தகம் வாங்கக்காசு இல்லையாம். அப்ப ஏன் வாங்கப் போறம் என்று சொன்னவை? ஒரு திட்டமும் இல்லாமல் ஏதோ செய்யினம், சொல்லுகினம். இவைதான் ஊரை அபிவிருத்தி செய்யப்போகினம்! என்றாள் தமயந்தி கேலியாக,

வேறு யார் யார் வீட்டுக்கு வந்தினம்? என்று கேட்டான் கருணைநாதன். சுப்பிரமணியம், மச்சான் ராசன், இரண்டு பேரும் வந்தினம். சுப்பிரமணியம் கொழும்பிலை தான் இருக்கிறவர். கேள்விப்பட்டு வந்தவர். சின்னம்மாவின் மகன் மல்லாகத்திலிருந்து வந்தார். பேப்பரில் பார்த்தவராம். வேறு இவற்றை அக்கா, அண்ணாவை கிளிநொச்சியில் வயது வந்து போய்ச் சேர்ந்து விட்டினம். நானும் விசாவுக்குப் போட்டிருக்கிறேன் மேலே போவதற்கு! என்று கூறிச் சிரித்தாள் தமயந்தி.

நேரமாகிது நாங்கள் வரப்போகிறோம் என்று விடை பெற்ற கருணைநாதன் சில ரூபா நோட்டுக்களை தமயந்தியிடம் கொடுத்துக் கொண்டே இனி இந்தப் புத்தகம் அடிக்கிற வேலையை விடுங்கோ என்று ஞாபகமாய்க் கூறினான்! லீலா புகார் கூறினது நினைவுக்கு வந்து விட்டது போலும்!

தம்பதிகள் விடை பெற்றபின் தமயந்தி யோசனையில் இருந்தாள்.

நான் ஏன் புத்தகம் எழுதத் தொடங்கினேன் என்று யாரும் யோசிக்கவில்லை! காரணங்கள் எதுவாக இருந்தபோதும் இந்த 'நைன்ரி' வயதில் முகட்டைப் பார்த்துக் கொண்டு எத்தனை மணிநேரம் உட்கார்ந்து கொண்டிருக்க முடியும்? அது பற்றி யாரும் சிந்திப்பதாயில்லை. பலரும் எழுதுவதால் தானே பொதுநூலகத்தில் நூல்களைப் படிக்க முடிகிறது? எழுத்துக்கள் மனித வாழ்க்கையைச் சீராக்குகின்றன என்பது தெரியாமல் தான் "எழுதுவதை விடுங்கோ" என்கின்றனரோ? இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பர். ஆமாம் பொதுநூலகத்தில் இருக்கும் நூல்கள் பச்சையாய்த் தெரிகின்றன. 'தீர்ப்பு' வழங்கியாய் விட்டது இனிப்புத்தகம் எழுதுவதை விடவேண்டியது தான்!

# 4. அம்மனின் கருணை

திருமணம் என்ற பந்தத்தால் எதுவித பலனும் இல்லை. பிள்ளைச் செல்வத்தைச் தவிர. நிமிடத்திற்கு நிமிடம் அவள் மனம் நிம்மதியற்றுத் தவிக்க வைத்துக் கொண்டிருந்தனர் அவளின் புத்தகத்தார். திருமணத்திற்கு முன்பே அவர்கள் பெரிய திட்டம் ஒன்றைப் போட்டிருந்தனர். அதற்குப் பலராமன் உடன்பட்டே திருமணம் செய்தான் போலும். அவன் எவ்வளவு கொடுமைகள் செய்தும் மனைவி பல்லவி அசையவேயில்லை! இது என்ன சென்மம் அப்பா! என்று நினைத்திருப்பார்கள். தாங்கள் செய்யும் இம்சைகளால் அவள் தொலைவாள் என்று நம்பியிருக்க இடித்த புளிபோல் அசையாமல் இருந்தாள் பல்லவி!

அவள் தொலைந்து விட்டிருந்தால் பலராமுக்குச் சீதன 'றேற்' கூட்டி இன்னொரு திருமணம் செய்து அந்தப் பணத்தையும் வாரிச்சுருட்டும் எண்ணத்தில் இருந்த புக்ககத்தாருக்கு இடிவிழுந்தது போலிருந்தது தொலைந்து போகாதிருந்த பல்லவியைப் பார்த்து,ஆனால் வேறுபெண்கள் இதுவரையில் தொலைந்துதான் போயிருப்பர். பல்லவி குடும்பத்தை விட்டு அகலாமல் உடும்புப்பிடியாக இருந்தாள். மழலைச் செல்வங்களின் சிரிப்பில் தனது கவலைகளை மறந்து வாழந்தாள். அவள் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளுக்கு எல்லாம் அம்மனின் அருளை நாடினாள். வெற்றி பெற்றாள்.

ஒருமுறை சோதிடரும் கூறியிருந்தார். காயத்திரி மந்திரம் சொல்லி வாருங்கோ என்று, சாதகப் கொப்பியிலும் காயத்திரி மந்திரத்தை எழுதியும் விட்டிருந்தார். அத்துடன் இன்னொன்றும் முக்கியமாகக் கூறினார். நீங்கள் மனம்வருந்தி ஏதாவது கூறினால் அது கட்டாயம் பலிக்கும் என்று, அவள் வாழ்க்கையில் உண்மையாகவே நடந்தது அம்மனின் உதவியுடன்.

பிள்ளைகள் படித்து முன்னேறித் திருமணமும் செய்து விட்டனர். இனியும் இந்தக் "குடும்பம்" என்னும் வட்டத்தினுள் நிற்காமல் கோயில் குளம் என்று போய்விட வேண்டும். காலம் வந்து விட்டது என்று நினைத்துச் செயற்பட முனைந்த போது, ஓர் கைரேகைச் சோதிடரை அழைத்து வந்தான் பலராமன். அவர் பல்லவியின் கைரேகையைப் பார்த்து விட்டு நீங்கள் இல்லற வட்டத்தை விட்டுக் கோயில் குளம் என்று போகப்பார்க்கிறீர்கள் ஆனால் போகமாட்டீர்கள்! என்று கூறிவிட்டுப் பலராமின் கைரேகையைப் பார்த்தபின்பு கூறினார். உங்களுக்குச் சுற்றம், சூழல் என்று பலர் இருந்தாலும், உமது மனைவி தான் கடைசி காலத்தில் உதவி செய்வார் என்று கூறினார்.

சோதிடர் கூறியது போலவே பல்லவி இல்லற வட்டத்தை விட்டுக் கிளம்ப முடியாது போயிற்று. காரணம் சின்னஞ்சிறு பேரப்பிள்ளைகள் பல்லவிப் பாட்டியாரிடம் வந்து சேர்ந்தனர் தஞ்சமென்று! அவர்களை உதறி விட்டுப் போக அவளுக்கு மனம் வரவில்லை. இல்லற வட்டத்துள் நிற்க வேண்டியதாயிற்று. ஆனாலும் ஆரம்ப முதலே போய் வந்து கொண்டிருந்த தெல்லிப்பளை அம்மன் கோயிலுக்குப் போய் வருவதை நிறுத்தவில்லை. கடைசி காலம் பிள்ளை, பேரப்பிள்ளைகளுக்கு தங்கியிருப்பதற்கு ஓர் வீடுவேணுமே என்று வீடொன்றை வாங்கினாள். அந்த வீட்டில் பரவலாகக் குறுணிக்கற்களும்,கடிஎறும்பும் காணப்பட்டன. கால் நிலத்தில் வைத்தால் போதும் கடியெறும்புகள் மொய்த்து விடும்! நெருப்பு எறும்பு என்று அதைக் கூறுவர். குறுணிக்கற்களும் காலைப்பதம் பார்க்கும்.

ஏனம்மா இப்படியொரு வீட்டை எனக்குத் தந்தாய்? என்று பலமுறை அம்மனைக் கேட்டாள். இறுதியில் விடை கிடைத்தது! அவளுக்கு வரும் பென்சனில் தெல்லிப்பளை போய்வர வாகனத்திற்கு ஐந்நூறு ரூபாவரை முடியும் கொடுக்கக்கட்டாது. இலங்கை போக்குவரத்து சபையில் போவது என்றால், “பழசு” ஆன இந்தவசயதில் ஏற இறங்க முடியாது, விழுந்து எழும்ப வேண்டியிருக்கும்! அதனால் தானோ அம்மன் தன்னை விரும்பிய நேரமெல்லாம் வந்து வழிபடட்டும் என்று அந்த வீட்டைக் கொடுத்தாரோ?

ஆம்! பல்லவியின் வீட்டுக்குக் கூப்பிடு தூரத்தில் மாரியம்மன் கோவில்! முழு நேரமும் கோவில் என்று இருக்கலாமே? இது அம்மனின் கருணை அல்லவா?

## 5. மாத்தியோசி!

கிரிசாம்பாள் சமையலில் ஈடுபட்டிருந்தாள் மும்முரமாக மதியச்சமையல் வேலை கூடத் தானே! சமையலுக்குத் தேங்காய் துருவித் தரும்படி கூடக் கேட்க மாட்டாள், தானே எல்லாவற்றையும் செய்து கொள்வாள். அவள் கேட்டுப் பழக்கமுமில்லை. மற்றவர் உதவி செய்ததுமில்லை! நேரம் ஒருமணி சமையலும் முடிந்தது. கணவருக்கு உணவு போட்டுக் கொடுத்துவிட்டு மகள் சின்காவைச் சாப்பிட அழைத்தாள்.

எனக்குச் சாப்பாடும் வேண்டாம் ஒண்டும் வேண்டாம். நான் இப்படியே கிடந்து செத்துப் போகிறேன் என்று கூப்பாடு போட்டாள். தாய் கிரிசாம்பாள் எதுவும் கூறாது சமையல் அறையுள் சென்று தனக்குரிய உணவை எடுத்துப் போட்டுச் சாப்பிடத் தொடங்கினாள்.

வீடொன்று வாங்கினது தான். சின்கா பன்னிரண்டு லட்சமும் மிகுதி கிரிசாம்பாளும் போட்டு வீடு வாங்கிச் சின்கா பேரில் எழுதப்பட்டது. மூத்தமகன் ஏதும் பணம் கொஞ்சம் கொஞ்சமாக அனுப்புவான் என்றே நம்பிக்கையில் தான் வீடு வாங்கியது. ஆனால் அவன் அதற்கு முன்பே பலதடவை பணம் அனுப்பியிருந்தான். செலவுக்கு என்று இப்போது ஏது பணம் உடனும் அவனிடம்!

ஐயோ! நான் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டிச் சம்பாதிச்சு வைச்சதெல்லாம் போச்சிது என்ன செய்வேன்? மனிசனும் மனிசியும் சேர்ந்து சதிவேலை செய்திருக்கினம். வீடு வாங்குவம் என்று கூறி, தாங்களும் கொஞ்சம் காசு தாறம் நீயும் மிகுதிக்காசு தா, என்று நானும் பணம் என்று ஒரு தொகை கொடுத்தன் திரும்பத் தருவினம் என்று, ஒருவருடம் ஆச்சு, சல்லிக்காசு தரயில்லை. ஏமாத்திப் போட்டுதுகள். மோன் லட்ச லட்சமாய்ப் பணம் அனுப்ப வங்கியிலை போட்டிருக்கினம், அது எனக்குத் தெரியாது எண்டே நினைக்கினம் ஆத்தையும், அப்பவும்! நாசமாய்ப் போவார்! இப்பிடியும் பெத்தபிள்ளையை ஆகும் ஏமாத்துவினமே?

சின்கா அழுது புலம்பிக் கொண்டு இருந்தாள்.

கிரிசாம்பாள் எதுவும் பேசாமல் தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தாள். என்னத்தைப் பேசுவது? மகன் லட்ச லட்சமாய் பணம் அனுப்பவில்லை என்று சின்காவுக்குச் சத்தியம் பண்ணுவதா? பொய் சொல்பவர்தான் சத்தியம் பண்ண வேண்டும். நான் சத்தியம் பண்ணத்தேவையில்லை. எப்போதாவது பணம் வந்து சேர்ந்தால் கொடுப்பது என்னும் யோசனையுடன் கிரிசாம்பாள் கருமமே கண்ணாக இருந்தாள்.

உடனடியாகப் பணம் தேவையென்றால் வீட்டை விற்றுப் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். வீடும் சின்கா பேரில்தானே இருக்கிறது என்று எண்ணமிட்டாள் கிரிசாம்பாள். சிலமாதங்களின் பின் எப்போதோ வங்கியிலிருந்து எடுத்து வைத்த இரண்டு லட்சத்தையும் சின்காவிடம் கொடுத்துவிட்டு வீடு விலைக்குக் கேட்டால் கொடுத்து விட்டு எங்காவது வாடகைக்கு வீடு பார்க்கலாம் தானே? என்று மெல்லக் கூறினாள் சின்காவிடம்.

வீட்டையார் வாங்கப் போகினம்? என்ற சின்காவுக்கு ஏன் எங்களைப் போல யாரும் வாங்குவினம் தானே என்றாள் கிரிசாம்பாள். அதன்பின் வீட்டுக்கு வெள்ளை அடித்தும் பூங்கன்றுகள், பழக்கன்றுகள், மரக்கறித்தோட்டம் என்று வீடு அமர்க்களப்பட்டது. அயலில் ஒரு வீடு எழுபது

லட்சம் பத்திரிகையில் வெளிவந்தது. அதுவும் இரண்டு பரப்புத்தான். அதன் விலையைப் பார்த்தால் இந்தவீடு மலிவாக அல்லவா இருக்கிறது? இது நாற்பது தானே! இப்போ புதுவீடு என்று கட்டத் தொடங்கினாலும் வீட்டில் இப்போதைக்கு எந்த மரமும் இருக்காது. காணிகளில் இனி தென்னை, மா, பலா என்று வைத்து அவை வளர்ந்து எப்போ வீட்டுக்கு நிழல் தரும்!

எங்கேயோ எப்போதோ படித்த ஞாபகம் மூளையில் தட்டுகிறதே! "மாத்தியோசி" என்று ஒருவசனம் ஓ! அதை அன்று என் மகனுக்கு அறிவுரையாகக் கூறினேன். இப்போ அதை சின்காவுக்குக் கூற வேண்டிய சந்தர்ப்பம் ஆமாம்!

சின்கா! இந்த வீட்டைப் பற்றிச் சிறிது "மாத்தியோசி"ச்சுப்பார் நீ செலவழித்தது ஒரு பன்னிரண்டு லட்சம். இந்தப் பன்னிரண்டு லட்சத்திற்கு ஒருவீடு வாங்க முடியுமா? உனக்குப் பன்னிரண்டு லட்சத்திற்கு ஒரு வீடு. நாங்கள் வேறுபணம் தரவில்லை. சரிதானே? பன்னிரண்டு லட்சத்திற்கு ஒருவீடு கிடைத்தது பற்றிச் சந்தோசப்படு, மனது நிம்மதியடையும்.

எதையும் மாத்தியோசிச்சுப் பழக வேணும் கண்டியோ!

## 6. அவன் வருவானா?

ஞானகலா காலைச்சமையல் முடித்து ஆறுதலாக இருந்தாள். அப்போது நாத்தனார் சந்திரகலா நடுத்தர வயதுடைய கறுவல் தடியன் ஒருவனுடன் வந்து சேர்ந்தாள். அந்த மனிதர் மாந்திரீகமும் செய்வார். சோதிடமும் கூறுவார் என்று தெரிவித்தாள் சந்திரகலா நாத்தனார். அத்துடன் அவர் சோனகர் என்றும் அம்பாள் வாலாயம் செய்பவர் என்றும் கூறிவிட்டு அவன் தம்பிக்குப் பார்வை பார்க்கத் தான் அழைத்து வந்தனான் என்றாள். தம்பி பராந்தகன் வேண்டா வெறுப்பாக வந்து அமர்ந்தான். அரிசி பரவி ஏதோ மந்திரம் சொன்னார். மாந்திரீகர் செம்பில் தண்ணீர் விட்டு மந்திரம் ஓதிவிட்டு அந்தத் தண்ணீரில் வீட்டிலுள்ளவர்கள் முகம் கழுவ வேண்டும் என்று கூறிவிட்டுத் தனது கூலியைப் பெற்றுக் கொண்டு கிளம்பிவிட்டார்.

பராந்தகன் தயாரிடம் கேட்டான், யார் மந்திரவாதியை அழைத்தது? அவன் இல்லாததையும் செய்து விட்டுப் பிரச்சினை உண்டாக்கிக் காசு பறிப்பான். நான் உந்தச் செம்புத் தண்ணீரில் முகம் கழுவ மாட்டேன் என்று கூறினான். மற்றவர்கள் செம்பு நீரில் முகம் கழுவினர். ஒரு மாதத்துள் அம்மன் கனவில் தோன்றுவார் என்று முன்பு சோதிடர் கூறியபடி மாத முடிவில் ஞானகலாவின் கனவில் மாமியார் வந்து சாமியறையில் இருந்த

சாம்பிராணித் தட்டில் இருந்து ஒரு மோதகமளவில் கரிநிற உருண்டை ஒன்றை எடுத்து வந்து ஞானகலாவுக்கு காட்டியபடியே இதுதான் எடுக்க வந்தேன் என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

ஞானகலாவுக்கு ஒரு சந்தேகம், ஒரு சமயம் அவளின் அக்காள் தேவிராணி வல்லிபுரக் கோயிலில் மோதகம் அவித்தனாங்கள். பன்னாலைக்கும் மாமியார் வீட்டுக்குப் போய்க் கொடுத்து விட்டு வழியில் இப்படி வந்தோம் என்று கூறி மோதகம் கொடுத்து விட்டுச் சென்றாள். ஒருவேளை அந்த மோதகத்தில் ஏதும் மந்திர செய்வினை இருக்குமோ? அதுதான் மாமியார் கனவில் காட்டியதோ? என்று நினைத்தாள் ஞானகலா. மாமியார் அம்மனை ஆராதிப்பவர்.

இதைவிடச் சந்திரகலாவின் மகளுக்கும் சோதிடர் கூறினாராம் காட்டில் ஒருவகைக் கொடி இருக்கிறது. அதைக் கழுத்தில் மாலையாகப் போட்டால் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயம் நடைபெறும். நான் அந்த மாலையுடன் திரும்பி வருவேன் என்று, அதன் பின்னர் நாட்டுப் பிரச்சினை தோன்றியது. சோனகச்சோதிடர் எங்கு சென்றாரோ! அவர் காட்டுக் கொடியுடன் வரவேயில்லை. கன்னியும் பலவருடங்கள் காத்திருக்கிறாள் கொடியுடன் வருவார் என்று, காலம் அவளை முதிர் கன்னியாக்கிப் பாட்டியும் ஆக்கிவிட்டது! காட்டுக் கொடியை நம்பி இருந்த பேதையான பாட்டிக்கு ஒரு பாட்டனைத் தேடித் திருமணம் செய்வதா? ஏன் செய்யக் கூடாதா?

ஒருவருக்கொருவர் துணையாயிருக்கலாம் தானே! ஆங்கிலத்தில் 'கம்பனி' கொடுப்பது என்பார்கள்! ஓர் வெளிநாட்டு ஆண்மகன் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்தான் கம்பனிக்காக, பெண் அவனை நெருங்கிய போது ( ! ) அவன் இரவு உடையுடன் அவளை நெருங்க விடாமல் வீட்டைச் சுற்றி ஓடித்திரிந்தானாம். என்னை விட்டு விடு என்று! விடயம் என்னவென்றால் அவன் கம்பனி கொடுக்கத்தான் சேர்ந்ததே அல்லாது வேறு ( ! ) எதற்கும் அல்ல என்று கூறினான். அதாவது, சமைப்பது, சாப்பிடுவது, அளவளாவுவது, உதவி செய்வது என்றிப்படி அல்லாது அந்தப் பெண் நினைத்தது போன்று அல்ல என்பது தெளிவாகியது!

# 7."கலை" தந்த பரிசு

ஒரு நாள் நரசிங்க வைரவர் கோயில் பூசாரி என்று ஓர் நபரைக் கூட்டி வந்தான் கோபால கிருட்ணன். அவர் சில விடயங்கள் கோபால கிருட்ணனுடன் கதைத்து விட்டு சுவாமியறைக்குள் தம்பதியரை அழைத்துச் சென்றார். சில நிமிட நேரம் கண்களை மூடி நின்றார்.

திடீரென "டேய்! அவள் வள்ளியடா" என்று பெருஞ்சத்தத்துடன் கூறிய படியே படாரென கையால் ஓங்கி அடித்தார் கோபால கிருட்ணனின் நெஞ்சில்! கோபால கிருட்ணன் அடியை எதிர்பார்க்காததால் திடுக்குற்று அதிர்ந்துவிட்டான். சுகுமாரியும் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் மனதுள் எனக்கு அடித்தால் திருப்பி அடிப்பேன் என்று நினைத்துக் கொண்டாள்.

பின்பு பூசாரி கூறினார், நரசிங்க வைரவருக்குப் பொங்கல் போடு என்று கூறிவிட்டுப் பூசாரி சென்று விட்டார். கோபால கிருட்ணனுக்கு நெஞ்சில் பெரும் அதிர்ச்சி! கோபால கிருட்ணன் அடிக்கடி நிமிடத்திற்கு நிமிடம் சுகுமாரியை வேதனைப்படுத்துவது, "கலை" வந்த பூசாரிக்குத் தெரிய வந்தது போலும்! அதனால் " அவள் வள்ளியடா" என்று தடாலடி அடித்தாரோ?

கோபால கிருட்ணன் எத்தனை தடவைகள் மனைவிக்கு அடித்திருப்பான்? அவனுக்கு எங்கே கணக்குத் தெரியப் போகிறது? அவர் பாவம் என்று மனைவி மனதுள் நினைத்துக் கொள்வாள். அவள் திருப்பி ஒரு அடிபோட்டாள் என்றால் அவன் தாங்குவானா? என்பது சந்தேகமே,

யாரோ எப்போதோ கூறியது ஞாபகம் வருகிறது அடிப்பவனிலும் பார்க்க அடிவாங்குகிறவன் பலசாலி என்று! அது உண்மை தான் போலும்! கோபால கிருட்ணன் மிகவும் பயந்த சுபாவம். அதனால் மற்றவர்களை அடித்துப் பயப்படுத்தி அடக்கப் பார்க்கிறான்! அவனுடைய மகன் அடி உபாதை தாங்காது பத்தொன்பது வயதிலேயே படிப்பை விட்டு விட்டு வெளிநாடு போனான் வேலைக்கு,

கோபால கிருட்ணன் அடித்துவிட்டுப் பெரிய "வீரவான்" போன்று வெளியேறுவதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்! தனக்கு அடிப்பதற்கும் ஒருவன் உளன் என்பதைத் தற்போது உணர்ந்திருப்பான்.

மனைவி கணவனுக்கு அடி கொடுத்தால் உடனே, "அடங்காப்பிடாரி " என்று பட்டம் கொடுக்கப்படும்! கணவன் அடித்தால் "அடங்காப்பிடாரன் " என்று பட்டம் கொடுத்தால் என்னவாம்? எனச் சிலர் முணு முணுப்பது காதில் கேட்கிறது!

# 8. அம்மன் உதவி

பகீரதி செவ்வாய்க்கிழமைகளில் தெல்லிப்பளை அம்மன் கோயிலுக்குப் போவது வழக்கம். அப்படியே கோயில் போய் வந்து சுன்னாகத்தில் இருக்கும் தனது தாயாரின் தங்கை வீட்டிற்கும் சென்று சிறிது நேரம் அளவளாவி விட்டு வருவாள். வீட்டுக்கு நடையில். ஊரெழு அம்மன் கோயிலடியில் அவள் வீடு உள்ளது. அன்று நேரம் போவது தெரியாமல் இருந்து கதைத்து விட்டாள். பொழுதாகிவிட்டது. வாகனங்களும் போய்விட்டிருந்தன.

போகும் வழியில் தோட்டவெளி, ஐயோ! என்று கத்தினாலும் கேட்பதற்கு யாரும் இல்லை. பயத்துடன் யெய யெய துர்க்காதேவி சரணம், தாயே சரணம், அம்மா சரணம் என்று திரும்பத் திரும்பப் பகீரதி பிரார்த்தனை செய்து கொண்டே நடந்தாள். அவள் எப்போதுமே அப்படிப் பிரார்த்தனை செய்வது வழக்கம். இருட்டாக இருந்தது. தோட்டவெளி வந்துவிட்டது கூடவே பயமும் வந்தது. ஆள் நடமாட்டமே இல்லை.

யாரோ ஒருவர் சைக்கிலில் மிக மிக வேகமாக வந்து கொண்டிருந்தார். அந்த வேகத்தைப் பார்த்ததும் தன்னை நெருங்கத் தான் அப்படி வேகமாக வருவதாகப் பயந்தாள் பகீரதி. ஆனால் அவரின் வாயிலிருந்து வந்த அவளுடைய பிராத்தனைச் சொற்கள் அவளை நிம்மதியடைய வைத்தன. தோட்டவெளியும் கடந்து ஊர் மனைக்குள் வந்து விட்டாள். திரும்பிப் பார்த்தாள் சைக்கிலில் வந்த ஆளைக்காணவில்லை. எல்லாம் அம்மன் செயல் என்று நினைத்துக் கொண்டாள் பகீரதி.

ஒரு சமயம் அரிமாக்கழகக்கூட்டம் அதற்குப் போய் வந்து சாப்பிட்டு விட்டுப்படுத்துக் கொண்டாள் வரவேற்பறையில். பாயை விரித்து படுத்த பின்பு தான் கழுத்தில் போட்ட சங்கிலியைக் கழற்றி வைக்கவில்லை என்பது தெரிந்தது. இனியார் எழுப்புவது? என்று நினைத்துக் கொண்டே சங்கிலியைக் கழற்றி தலையணையின் கீழ் வைத்து விட்டு நித்திரையானாள். பின்னர் விடிகாலை ஐந்து மணிக்கு எழுந்து தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்தாள். கோயிலுக்குப் போன கணவனும் வந்து விட்டான்.

இருந்தாற்போல் சங்கிலி நினைவு வர ஓடிப்போய் வரவேற்பறையில் பார்த்தாள் சங்கிலி இல்லை, அத்துடன் அங்கு சிலர் வந்தும் போயிருந்தனர் ஏதோ அலுவலாக கணவனிடம் சங்கிலி யார் கையில் அகப்பட்டதோ? என்ன செய்வது? வழக்கமான கடமைகளைச் செய்து கொண்டிருந்தாள். செவ்வாய்க்கிழமை கோயில் போக வேண்டும்.

தாயே! துர்க்கையம்மா நான் உன்னிடம் வரவேண்டும். அதற்கு எப்படியாவது எனக்குச் சங்கிலி தரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள் இரவு. விடிந்துவிட்டது. கணவன் கோயிலுக்குப் போய் வந்தான், சிறிது நேரத்தில் கையில் சங்கிலி ஒன்றுடன் வந்து, இங்கே பார்! இந்தச் சங்கிலி கதிரைக்குக் கீழே கிடந்து எடுத்தேன் என்று மனைவியிடம் கொடுத்தான், அது அவளின் சங்கிலி தான்!

இது படுக்கும் போது கழற்றித் தலையணைக்குக் கீழே வைத்து விட்டுப் படுத்தது எழும்பும் போது மறந்து போயிற்று என்றாள் பகீரதி.

அப்போ இவ்வளவு நாளும் ஒன்றும் சொல்லவில்லையே என்று கணவன் கூறிய போது அவள் எதுவும் பேசாமல் அம்மன் கோயிலுக்குப் போவதற்கு ஆயத்தமானாள்!

## 9. அதிகாரம்

உருளைக் கிழங்குத் தோல் சீவிக் கொண்டு இருந்தபோது தலைவர் பார்த்து விட்டு உந்தத்தோலைக் குப்பைவாளிக்குள் போடு என்று கூறித் தனது குப்பைப் பெட்டியை எடுக்கச் சென்றார். சமையலறையில் வரும் கழிவுகள் போடுவதற்கென்று அருகில் வாளி இருக்கிறது. அதனுள் தான் குப்பைபோடுவது வழக்கம். தலைவிக்குத் தெரிந்த விடயம் தனது அதிகாரத்தனத்தைக் காட்டத் தான் எப்போதும் தலைவர் ஏதாவது சொல்லிக் கொள்வதும் தலைவிக்குத் தலைவலி ஏற்படுவதும் உண்டு!

கிழங்குத் தோலின் மேல் பிட்டுப் பாத்திரத்தை எடுத்து வைத்து விட்டாள் அவள், தலைவர் திரும்ப வந்து பார்த்த போது குப்பை வாளிக்குள் கிழங்குத்தோல் இல்லை! எங்கே கிழங்குத்தோல்? என்று கேட்டார். அதைக் குழம்பு வைக்கப் போட்டு விட்டேன்! என்றாள் பதிலுக்கு தலைவி.

சமையல் முடிந்தவுடன் அறையைக் கூட்டினாள். பின்பக்க இணைப்புத்தரையில் நாலு ஐந்து இலைகள் விழுந்திருந்தன அதையும் கூட்டிப் பக்கத்தில் இருக்கும் நாயின் அறைக்குள் தள்ளிவிட்டாள். நாய் அறையைப் பின்னர் கூட்டுவம் என்ற எண்ணத்தில் அவள் திரும்பி வந்தபோது தலைவர் கேட்டார் குப்பை எங்கே? என்று, குப்பை என்பது அந்த நாலைந்து இலைகளே தான்! அதிகாரம் தூள் பறக்க சில தமாசும் வரும். அவள் கூறிய பதில், வாய்க்குள் போட்டு விட்டேன் என்பது தான்!

ஏன் தான் இந்தத் தலைவர்கள் (தலையில்லாவர்கள்) இப்படி

அதிகாரம் பண்ணிப் பெரும்பாடுபடுகிறார்களோ தெரியவில்லை! ஆண் என்பவன் அதிகாரம் பண்ணப் பிறந்தவன் என்ற நினைப்போ? அதெல்லாம் அந்தக் காலம் இப்போ பெண்களும் அதிகாரிகளாக, வந்து விட்டனர்! ஆண்கள் இனிமேல் பரம சாதுக்களாக வாழ்ந்தால் சரி, இல்லையேல் தலை இல்லாமல் போனாலும் போகாலாமல்லவா? தலையுள்ள ஆண்கள் மன்னிக்கவும். எல்லா ஆண்களையும் குறை கூற வில்லை!

## 10. சொல்பவனுக்கு வாய்ச்சுமை

மழை பெய்து கொண்டிருந்தது. ரத்னா சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். இடையே கூடத்துப்பக்கம் வந்தாள். ஈ.சி சேரில் அமர்ந்திருந்த ரட்ண கோபால் மனைவி ரத்னாவைக் கண்டதும் அந்தத் தண்ணீரை விளக்கு மாற்றினால் தட்டிவிடு என்றான். ரத்னா மழை நீரைப் பார்த்தாள். தண்ணீர் கூடத்திற்கு வந்து அடுத்த பூசை அறையினுள்ளும் போயிருந்தது.

சென்ற வருடம் ஓடுகள் மாற்றி அமைத்த பின் வீட்டினுள் மழை வருவது நின்றிருந்தது. அதன்பின்பு "அன்ரனா" பூட்டினார்கள். மின்சாரம் கிடைத்த பிறகு இப்போ மழை பெய்தவுடன் தண்ணீர் வீட்டினுள் ஓடிக் கொண்டிருக்கிறது. மழைகாலமாதலால் அடிக்கடி தண்ணீர் தட்ட வேண்டியிருக்கிறது. செய்கிற வேலையோடு இதுவும் ஒரு வேலை அவளுக்கு, உதவிக்கு யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. எந்த வேலையையும் அவளே செய்ய வேண்டியுள்ளது. அலுப்பு இருக்காதா என்ன? அவனுக்கென்ன சமைத்தவுடன் சாப்பிடுவான்! ரட்ணகோபால் தண்ணீரைத் தட்டி விடக்கூறிய போது அலுத்துக் கொண்டே தண்ணீரைத் தட்டினாள்.

காலையில் தான் தண்ணீர் தட்டினனான் அதற்கிடையில் இப்போ இவ்வளவு தண்ணீர் வந்து விட்டது என்று தண்ணீர் தட்டிக் கொண்டே கூறினாள் ரத்னா, கூறிக்கொண்டே மனதுள் தீர்மானித்தாள். இதற்கு ஒரு வழி இன்று பார்க்க வேண்டும் என்று, ரட்ண கோபால் மனைவிக்குக் கட்டளை போட்டதுடன் தன் வேலை முடிந்துவிட்டது என்னும் எண்ணத்துடன் "பேப்பர்" படிப்பதில் மூழ்கிவிட்டான். அவன் கட்டளை இடுவதும் அவள் தண்ணீர் தட்டுவதும் வழக்கத்திலும் பழக்கத்திலும் வந்துவிட்டது!

அன்று தண்ணீர் தட்டியபின் மேல் கூரையை ஆராய்ந்தாள் ரத்னா, அங்கிருந்து தண்ணீர் வருவதற்கான வழி ஏதுமில்லை. பின்பு யோசித்து

விட்டு "வயர்" எங்கே போகிறது எனப் பார்த்தாள் அது யன்னல் வழியாக வருகிறது அதிலிருந்து மழைநீர் உள்ளே வருகிறது என்பதைக் கண்டாள். அதன்பின் ரட்ணகோபாலிடம் கூறினாள். அந்த அன்ரனா வயரை வெளிப்பக்கமாக இழுத்துக் கட்டிவிடும்படி, அப்போது பக்கத்து வீட்டுப்பையன் வந்தான். அவனைக் கொண்டு வயர் வெளியே இழுத்துக் கட்டப்பட்டது. இனித் தண்ணீர் வெளியேதான் வடியும், பிரச்சினை தீர்ந்தது. மனமும் நிம்மதி பெற்றது.

இதுதான் "பெண் புத்தி பின் புத்தி" என்பதோ? ரத்னா இதைக் கவனிக்காது விட்டிருந்தால் மழைக்காலம் முழுக்கத் தண்ணீர் தட்டியபடியே தான் இருக்க வேண்டும்! அருமைக் கணவன் என்றால் ரட்ணகோபாலைத் தான் கூற வேண்டும்! அவன் பாவம் அவனுக்கு வாய்ச்சுமை சொல்லியாவது வேலைகளைச் செய்விக்கிறானே? தண்ணீர் தட்டச் சொல்லி, சொல்வதற்கும் ஒரு ஆள் தேவை தானே, சொல்லாவிட்டால் ரத்னா தண்ணீர் தட்டிவிடுவாளா என்பது சந்தேகம் தான்!

## 11. சேறு பூசும் குணம்

பல ஆண்களுக்குச் சிறப்பான ஒரு குணம் உண்டு! அது என்னவென்றால் பெண்கள் மீது சேறு பூசுவது. குற்றம் குறை ஆண்களில் இருக்க அதை மறைத்து விட்டு, பெண்களின் மேல் குற்றத்தைச் சுமத்துவது! பெண்ணின் தலமையில் இல்லமிருந்தால் கொடிகட்டிப்பறக்கும் ஐயா, அதேதான் குடாநாட்டுச் சிறப்பும் சனாதிபதி தொடங்கி ஓட்டோ டிறைவர் வரை கொடி நாட்டிவிட்டனரே பெண்கள்!

இராமன் காடேகியது தசரதன் விட்ட பிழையேயன்றி கைகேயியின் பிழையன்று, கைகேயி ரதம் ஓட்டிய பொழுது பெருமிதமடைந்த தசரதன் தான் ஏதோ பெரிய கடவுள் என்று நினைத்து வரங்கேள் தருகிறேன் என்றான்! தன்னைக் கடவுளாக நினைத்ததே தவறு.

அடுத்து கோவலன் செய்த தவறே மாதவி கற்பிழந்தது. கண்ணகியிருக்க மாதவியின் மேல் மையல் கொண்டது கோவலனின் தவறு. இராமாயணத்தில் இலட்சுமணன் விட்ட தவறு தான் சீதை கடத்தப்பட்டது. பாரதப் பாஞ்சாலியில் ஆண்கள் விட்ட தவறு வெள்ளிடைமலை செஞ்சோற்றுக் கடனுக்காகவே, வாயைமூடி மௌனிகளாக இருந்தனர் பாஞ்சாலி கேள்வி கேட்ட போது ஆனால் பெண்கள் மேல் தான் சேறு பூசினர்.

தட்டிக் கேட்க ஆளில்லை என்னும் எண்ணம் ஆண்களுக்குத் தலையில் முளை விட்டிருக்கிறது!

பெண்ணொருத்தி தனது மருமகள் வீட்டில் தங்கியிருந்த பொழுது உடல் துவட்டும் துவாய்க்குப் பதிலாக கைதுடைக்கும் சிறுதுவாய் பாவித்ததைப் பார்த்த பன்னிரண்டு வயதுப் பேரன் பாட்டியார் வீட்டுக்கு ஒருமுறை சென்ற போது வேறு பொருட்களுடன் உடல் துவட்டும் துவாயும் கொண்டு சென்று கொடுத்தான். நான் துவாயே பாவிப்பதில்லையே! என்று பாட்டியார் சிரித்துக் விட்டு, ஏன் பாவிப்பதில்லை என்ற விடயத்தை மகனுக்கும் பேரனுக்கும் விளக்கினாள் பெண்.

கணவன் ஒருசமயம் அவள் அணியும் சட்டை எடுத்து அழுக்குத் துடைத்து விட்டுப் போட்டதைப் பார்த்திருக்கிறாள். பின்பு உடுப்புக்களைப் பெட்டியில் பூட்டி வைத்திருக்கிறாள். இன்னொரு சமயம் அவன் வெளிக்கிட்டு வெளியே போக இருந்த சமயம் அறையினுள் மெல்ல எட்டிப் பார்த்தாள். அங்கே அவளின் துவாயை எடுத்து மூக்குச் சீறித்துடைக்க லாவகமாகக் கையில் பிடித்தபடி நின்றதைக் கண்டாள்! அவளைக் கண்டதும் துவாயை அப்படியே எடுத்த இடத்தில் கொழுவி விட்டுப் போனதைப் பார்த்தாள்.

கணவனின் துவாய் முன்னுக்கு இருந்தது. அதை எடுக்காமல் மனைவியின் துவாய் எடுத்து மூக்குச் சீறி ( ! ) சேறு பூசும் குணம் தானே! அவன் செம்மறியாடுபோல் அடிக்கடி மூக்குச்சீற வேண்டும். மூக்குச்சீற வேறு துணியல்லவா வைத்துக் கொள்ள வேண்டும்! கணவன் போனபின்பு தனது துவாயை எடுத்து ஆறு துண்டுகளாக வெட்டி சாப்பாட்டு மேசை மற்றும் கணவன் செல்லும் இடம் என்று ஒவ்வொன்றாகப் போட்டு வந்தாள்! அறையுள்ளே துவாய் போடுவதை விட்டு வெளியில் துணிகாயப்போடும் இடத்தில் தனது துவாயைப் போட்டு வைத்தாள்.

அன்று காலை கணவன் வெளியே செல்லப் புறப்பட்டவன் பதுங்கிப் பதுங்கி அந்தக் கொடியருகே செல்வதை சமையலறைக் கண்ணாடி யன்னலுக்கால் மனைவியார் பார்த்தாள். வெளியே போக கேற் அங்கே, இங்கே ஏன் போகிறார்? கொடியில் அவரின் துவாய் போட்டது இருக்க, மனைவியின் துவாயை எடுத்து மூக்குச் சீறுகிறான்! அவன் சீறிவிட்டுத் திரும்பவும் சமையல் அறையில் உள்ள கழிவுநீர் ஊற்றும் அழுக்கு வாளியைத் தண்ணீருடன் கொண்டு சென்று தனது துவாயை எடுத்து வாளியில் அமுக்கிக் கொடியில் போட்டாள்.

அன்றுடன் அவள் துவாய் பாவிப்பதில்லை! குளிக்கப்போகும் போது

போட்டிருந்த உடுப்பினாலேயே வேணுமென்றால் துடைத்துக் கொள்வாள். இப்படியும் ஒருவனா? என்று திகைக்காதீர்கள். இருக்கிறானே, ரே என்று மரியாதைவேறா? அதுதான் பெண்கள் மேல் சேறு பூசும் குணம்.

# 12. பூவைப் போடுங்கோ

கல்யாணராமனின் நண்பன் சிவராமன் திருமண அழைப்பிதழ் ஒன்றைத் தனது நண்பனிடம் கொடுத்து விட்டுச் சென்றான். பெண் யாரென்று பார்த்தால், சிவானந்தா குருக்களின் மகள் சிவலக்சுமி, வங்கியில் வேலை செய்பவள். பிராமணக் பெண். சிவராமன் கிறீத்தவ சமயத்தைச் சேர்ந்தவன். மதங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை! மனிதர்கள் தான் சண்டை போட்டுக் கொள்வார்கள்!! இருவரிடையேயும் காதல் பூத்தது. இருபக்கத்துக் குடும்பத்தவர்களும் சம்மதிக்க மாட்டார்கள் திருமணஞ் செய்வதற்கு,

அதனால் சந்நிதி கோயிலில் நண்பர்கள் சகிதம் திருமண விழா நடத்த ஏற்பாடு. பெண்ணின் விருப்பம் தாலி கட்டவேண்டும் என்பது, அதிகமான ஆண்கள் தங்கள் எண்ணப்படி நடக்க வேண்டும் என்று அதிகாரம் காட்டுவர். ஆனால் இவன் சிவராமனோ, மனைவி மகிழ்ச்சியடைவது தான் குடும்பவாழ்க்கைக்கு அடித்தளம் என்னும் ஆழ்ந்த கருத்துப்படி நடந்து கொண்டான். இப்படியான கணவர்கள் இல்லறம் சொர்க்கமாயிருப்பதில் எதிர்மாறு கிடையாதே!

சிவராமன் புத்திசாலி தான் என்பது அவனது அணுகுமுறையில் தெற்றெனப்புலப்படுகிறதே! செல்வச்சந்நிதி கோயிலுக்குப் போவதற்குக் கல்யாணராமனின் மனைவி அதிகாலையில் எழுந்து காலைச்சமையல் முடித்து விட்டு உடை மாற்றிக் கொண்டாள். கல்யாணராமன் தனக்கு முக்கிய வேலையிருப்பதால் தான் வரவில்லையென்றான். அதனால் கல்யாணி விடைபெற்றுக் கொண்டு வாகனத் தரிப்பிடம் சென்ற போது வாகனம் வந்து கொண்டிருந்தது. கையைக் காட்டி அதில் ஏறிக் கொண்டாள்.

அரைமணித்தியாலத்தின் பின் செல்வச்சந்நிதியை அடைந்தாள். அங்கு ஏற்கனவே நண்பர் கூட்டம் குழுமி இருந்தது. முகூர்த்த நேரத்திற்குப் பெண் அழைத்து வரப்பட்டாள். மாப்பிள்ளையும் வந்துவிட்டார். தாலிகட்டிய பின்பு, "பூக்களைப் போடுங்கோ" என்ற குரல் கேட்டது.

முன்பே எல்லார் கையிலும் பூக்கள் கொடுக்கப்பட்டிருந்தது.

மணமக்களுக்குப் போடுவதற்கு என்று, கொடுத்த உடனேயே பலர் விடயம் தெரியாமல் தங்களுக்கே பூக்களைச் சூடிக் கொண்டனர்!

விடயம் தெரிந்த ஒரு சிலர் மட்டும் கையில் வைத்திருந்த பூக்களை மணமக்களுக்குப் போட்டு வாழ்த்தினார்! எதையும் தெரிந்து கொள்ள வேண்டுமே, முன்பெல்லாம் "ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றிப் பதினாறு செல்வமும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" வென்று வாழ்த்துரைப்பர். அதெல்லாம் இப்போது அருகி விட்டது. கையைக்குலுக்கி ஆங்கிலத்தில் இசு புசு என்று ஏதோ சொல்கிறார்கள்!

## 13.ஒருநாய் போதாதோ?

அருட்செல்வி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். பகல் முழுக்கச் செமவேலை அவளுக்கு, மூன்று நேரமும் சமைப்பது பூக்கன்றுகளுக்கு வாழைகளுக்கு நீர் பாய்ச்சுவது என்று தொடர் வேலை அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. வீட்டு வேலைகள் பெண்கள் தான் செய்ய வேண்டும் என்பது பல ஆண்டகைகளின் மமதைக்குணம்! அதில் அவள் கணவன் விவேகன் விதிவிலக்கல்லவே! தான் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு தான் செய்ய வேண்டிய வேலைகளையும் அவள் மேல் சுமத்தி விடுவான்.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்னும் நிலையில் அருட்செல்வியும் செயல்பட்டுக் கொண்டிருந்தாள். இந்தப் "புல்லானாலும்" என்ற பழமொழிக்கு ஒவ்வொருவர் தாம் நினைத்தபடி அர்த்தம் கூறுவர்! ஆனால் அருட்செல்வி எந்த அர்த்தத்தில் செயல்படுகிறாள் என்று யாருக்கும் தெரியவில்லை. இல்லறம் நல்லறமாகப் போகட்டுமே என்ற நல்லெண்ணம் போலும் அவளுக்கு, அதனால் எதையும் தாங்கும் இதயம் படைத்தவள் ஆனாள்.

ஒருசமயம் சோதிடர் வந்தபோது கூறினார், நெஞ்சுப்பலம் அருட்செல்விக்குக் கூடுதல் என்று. அதைக்கேட்ட அருட்செல்வியின் மகள் திருச்செல்வி, தனது தாயாரின் நெஞ்சில் குத்திக்கொண்டே பெலம் எப்படியென்று பார்ப்போமே! என்றாள். குத்து வாங்குகிற பலத்தைச் சோதிடர் கூறவில்லை. தைரியசாலி என்னும் அர்த்தத்தில் தான் கூறினார், நீயோ நெஞ்சில் குத்திப் பலம் பார்க்கிறாய்! தமிழ் படித்துத்தேற இன்னும் நிறைய இடம் இருக்கு உனக்கு என்று சொல்லிச் சிரித்தாள் அருட்செல்வி.

அன்று இரவு ஒருமணியிருக்கும் டி டி டி என்று சப்தம் கேட்டது.

விவேகன் தான் படுக்கையிலிருந்து கத்திக் கொண்டிருந்தான். அவன் வீட்டில் நாய் இல்லை. இனித்தேவையுமில்லைத்தானே! தம்பதியர்க்கு அறுபது வயதுக்கு மேல்!! அவர்கள் இனி இரண்டுகால் நாய்கள் தானே!

அடுத்த வீட்டில் நிற்கும் நாய் அவனுடைய ஓட்டோவுக்குள் புகுந்து படுத்துக் கொள்ளும். குளிருக்கு வசதியாக! சில சமயம் ஊளையிடும். விவேகன் டி டி டி என்று கத்தவே அருட்செல்விக்கு விசராயிருந்தது. நித்திரை குழப்பியது. “லைற்” போட்டு விட்டு எழந்து போய் நின்று என்ன? என்று விவேகனிடம் கேட்டாள் கோபத்துடன்,

அது நாய்...... என்று இழுத்தான். உங்களுக்கு நித்திரை வராவிட்டால் மற்றவர்களின் நித்திரையை ஏன் குழப்பிறியள்? ஏன் ஒரு நாய் கத்தினால் போதாதோ? என்ன இரட்டை நாயனமே? நீங்களும் சேர்ந்து கத்திறியள்? என்று கேட்டு விட்டுப் படுக்கையில் வந்து விழுந்தாள். நான் முழுக்க வேலை செய்து விட்டுப் படுக்க வந்தால் நடுராத்திரியில் இரட்டை நாயனம்.

இன்னொரு நாயும் கத்தத் தேவை இல்லை என்பதை அவள் மறைபொருளாகக் கூறியது அந்த ‘அவி ’ விவேகனுக்கு விளங்கினால் சரி? விளங்காவிட்டாலும் பரவாயில்லை.

‘அந்தப் பழைய’ காலத்தில் “அவிவிவேக பூரணகுரு” என்று ஒருவர் இருந்தவராம்!

## 14. ஏன் எரிகிறார்கள்?

பெண் எழுத்தாளர் ஒருவர் தனது வீட்டிற்கு வந்த நண்பருடன் கதைத்துக் கொண்டிருந்த போது எழுதுவது பற்றிக் கதை வந்தது, அப்போது நண்பர் கூறினார், எங்கள் வீட்டுக்கிட்ட இருப்பவரும் ஏதாவது எழுதுவார். புருசன் குடித்துவிட்டு வந்து பேனையை முறித்து எறிவது, எழுதிய பேப்பரின் மேல் மையை ஊற்றுவது என்று பலவேலைகள் செய்வார்.

ஒருசமயம் அந்தக் குடிகார நண்பனைக் கேட்டேன், ஏனப்பா உனக்கு உந்தவேலை? என்று,

டேய்! உனக்கு ஒன்றும் தெரியாதடா, நீபோடா உன்பாட்டிலை, பெம்பிளையளை அடக்கி வைச்சிருக்க வேணும், எங்களை மிஞ்சவிடக்கூடாது என்றார்.

அப்போது பெண் எழுத்தாளர் கூறினார். ஆண்கள் பலருக்கு இந்த எரிச்சல் குணம் ஒரு நாளும் விட்டுப் போகாது போலை! என்று புன்னகைத்த படியே,

நானும் உங்களவருக்கு எரிச்சல் ஊட்டப் போகிறேன்! உங்கட அவ புத்தகம் எல்லாம் எழுதி வெளியிட்டிருக்கிறா, நல்லாயிருக்கே! என்று கூறப் போகிறேன் என்று, சொல்லியபடியே நண்பர் சிரித்தார்.

என்னவர் உங்கள் சொல்லைக் கேட்டு என்மேல் எரிச்சல்படமாட்டார்! உங்கள் மேல் தான் எரிச்சல்படுவார்! வீணாய் அவருடன் கதைத்து வேண்டிக் கட்டாதையுங்கோ? அவர் இப்போ எனக்குப் பேனையெல்லாம் வாங்கித் தருகிறார் எழுதுவதற்கு! முதல் புத்தகம் அவருக்குத் தெரியாமல் எழுதி எழுதிப் பின்னர் அச்சில் இருந்து வந்தும் கனநாளாய் அவருக்குக் கண்ணில் காட்டவில்லை! ஒருநாள் அவர் உதயன் பேப்பர் படித்து முடித்தபின் கூறினார். "உன்னைப்பற்றி" எழுதியிருக்கு பார் என்று, விசமமாக அப்போது எனது புத்தகத்தை அவருக்குக் கொடுத்தேன். இதில் என்னைப் பற்றி எழுதியிருக்கு பாருங்கோ! என்று அட்டை முகப்புப்படம் பச்சை வண்ணத்தில் அழகாயிருக்கவே கண்களை அகல விரித்துப் பார்த்தார்! முன்பு அவர் வெளியே போன பின்பு தான் கதைகள் எழுதுவேன். இப்போ அப்படியில்லை பேனைகள் நிறைய அவராகவே வாங்கித் தந்திருக்கிறார், பிறகென்ன!

மனைவியாருக்கோ, கணவருக்கோ புகழ் என்றால் அதில் இருவருக்கும் பங்கு தானே? பிறகேன் எரிச்சல்படுகிறார்கள்? முதல் முதலாக நான் எழதிய புத்தகம் கையில் கிடைத்த போது மனதில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஓர் எழுத்தாளர் முன்பு எழுதியது அப்போது ஞாபகம் வந்தது. தனக்கு முதல் புத்தகம் கிடைத்த போது, ஓர் குழந்தை பிரசவித்துக் கிடைத்த மகிழ்ச்சி தென்பட்டதாக, அதேதான் எனக்கும் ஏற்பட்டது. எழுத்தாளர்கள் தான் அதை உணர்ந்து கொள்ள முடியும்!

குழந்தை கருவில் எப்படி உருவாகிக் பிரசவம் ஆகிறதோ அப்படியேதான் இந்தப் புத்தகமும் மனதில் உருவாகிப் பிரசவமாகிறது. புத்தகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். தாய் குழந்தையைப் பார்ப்பது போன்று, அத்துடன் அடுத்த புத்தகம் எழுத ஆரம்பித்தேன் என்று கூறிய பெண் எழுத்தாளர் ரஞ்சனி, நண்பர் கேட்டுக் கொண்ட பூங்கன்றுகள் சிலவற்றை வெட்டிக் கொடுத்தாள்.

# 15. குட்டி வட்டன்கள்

மைதிலி குடும்பம் அந்தப்புதிய வாடகைவீட்டுக்குக் குடிவந்து சிலமாதங்களே ஆகின்றன. அக்கம் பக்கத்தார் இன்னும் அவ்வளவு பரிச்சயமாகவில்லை. வழமையில் அவள் ஓர் சங்கோசப் பேர்வழி! தானாகவே யாருடனும் வாய்திறந்து கதைக்கமாட்டாள். பழகிவிட்டாலோ சொல்லத்தேவையில்லை. ஒரே அறுவைதான்! எல்லாவிதமான புதினங்களும் கதைத்துக் கொள்வாள்.

பக்கத்துவீட்டில் திருமணம். திருமண அழைப்பிதழ் கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள், கணவன் மிதுலனுக்கு தொழில் நிமிர்த்தமாக அந்த ஊர்மக்கள் எல்லாருமே பழக்கப்பட்டவர்கள். ஆனால் மைதிலிக்கு அப்படியில்லையே? இன்றுதான் அந்த வீட்டுக்குப் புதிதாகப் போகிறாள். நேரத்தோடு போய் முழுசிக் கொண்டு பல மணி நேரத்தை நகர்த்த வேண்டியிருக்கும்! அதனால் பதினொரு மணிக்குப் போனால் சரியாயிருக்கும் என்று வெளிக்கிட்டுப் போனாள்.

சந்தனம் குங்குமம் வைத்த மேசையருகே கதிரையில் குட்டிப் பையன்கள் இருவர் இருந்தனர். மைதிலி எதிர்பார்த்தது பெரியவர்கள் யாரும் அதில் நிற்பர் என்று மைதிலியைப் பார்த்ததும்,

எல்லோரும் காலையிலேயே நேரத்தோடு வந்திட்டினம், நீங்கள் இப்பதானோ வாறீங்கள் அன்ரி! என்று ஒரு குட்டிப் பையன் கேட்டு விட்டான், இப்படி ஒரு கேள்வி குட்டிப் பையனிடமிருந்து வரும் என்று மைதிலி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அந்தக்கேள்வி அவளைத் திகைக்க வைத்தது! அடுத்த வீட்டுப் பையன்கள் பார்த்திருக்கிறாள், ஆனால் அவர்களுடன் ஒரு போதும் கதைத்ததில்லையே? எப்படித்தான் பழகினவர் போன்று அப்படியொரு கேள்வியைச் சர்வசாதாரணமாகக் கேட்க முடிந்தது பையனால்?

அடேயப்பா! இப்போதைய பிள்ளைகள் அறிவுகூடத்தான் பழக்க வழக்கமும் தான், மைதிலி தான் இப்போதும் "அந்தக் காலத்தில்" இருந்தாள்!

எப்படியும் சின்னப் பையனுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று நினைத்த மைதிலி.

ஐயா இப்போ தான் வீட்டுக்கு வந்தவர், திறப்பு அவரிடம் கொடுத்து விட்டு வருகிறேன் என்று ஒரு பெரிய பொய்யைக் கூறிச் சமாளித்துக் கொண்டே சந்தனத்தைத் தொட்டுப் போட்டுக் கொண்டாள். கதிரையில் அமர்ந்த சில நிமிடங்களில் மாப்பிள்ளையும் மணவறையில் வந்து அமர்ந்ததும் குருக்களின் கைங்கரியம் தொடங்கியது. முடிவில் அறுகரிசி

போட்டு வாழ்த்தினர். இப்போதான் அருந்ததி பார்ப்பதில்லையே! எங்கும் பகல் திருமணம் தானே நடக்கிறது. அருந்ததி மறைந்துவிட்டாள்!

முன்பு மேகத்தில் நட்சத்திரக் கூட்டத்தைக் காட்டுவர்.அங்கே அருந்ததி! என்று, வானத்தை அண்ணார்ந்து பார்த்தால் அருந்ததி எங்கு நிற்கிறாள் என்பது தெரியாது அண்ணாந்து பார்த்து விட்டுத் திரும்புவர்! அந்தப் பிரச்சினை இப்போ இல்லை பெண்கள் எல்லாருமே அருந்ததி ஆகிவிட்டார்கள்!

ஒரு சமயம் மைதிலியின் தந்தையார் அவளுக்கு அருந்ததி நிற்கும் இடத்தைக் குறிப்பாகக் காட்டியிருந்தார். அவர் வைதீக, ஆசார, அநுட்டானத் தமிழ்ப்புலவராவார். மைதிலியும் திருமணம் செய்தது இரவு அருந்ததி (மேகம்) பார்த்துத்தான்!

பக்கத்து வீட்டுத்திருமணம் முடிந்து பந்திபரிமாறி நிறைவு பெறவும் மைதிலி வெளியேறுகையில் சின்னப்பையன் கேட்டான், கையில் சிறு'ரிசு' பையைக் காட்டியபடியே இது எடுத்தீர்களா என்று, அதை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்த பின் மைதிலி கணவனிடம் விடயத்தைக் கூறிய போது,

அதுகள் சரியான கெட்டிக்காரப் பையன்கள் என்று கூறினான் மிதுலன்.

நல்ல ஆட்களைத் தான் வரவேற்புக்கு விட்டிருக்கினம்! என்று மைதிலி மனதுள் நினைத்துக் கொண்டாள்.

## 16. அப்பனா சுப்பனா?

மாடியிலிருந்து விழுந்ததில் சுப்ரமணியத்துக்குத் தலையில் பலத்த அடி. மூளை கலங்கியதோ என்னவோ, வைத்தியசாலையில் இருந்து ஒருவாரம் சிகிச்சை பெற்றுத் தான் வீட்டிற்கு வந்து படுக்கையில் இருந்தான். மனைவி சுப்புலக்சுமியும் மகள் லீலாவும் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். திடீரென இப்படியான தேவைகளுக்கு அவனிடம் பணமில்லை. ஊதாரியான அவனிடம் பணம் எப்படியிருக்கும்? எடுக்கும் சம்பளத்தை அப்படியே வாயில் போட்டு விடுவான் மிச்சமின்றி, இப்போது அவனிடம் சல்லிக்காசு கூடக்கிடையாது லீலாதான் தன்கைப்பணத்தில் செலவழித்துக் கொண்டிருந்தாள்.

மதியநேரம் அப்பனும் மகளும் வாதப்பிரதிவாதத்தில் ஈடுபட்டுச்

சத்தம் கூரையை முட்டி மோதியது.

உன்ரை பிள்ளையென்று எனக்கேதும் தந்தனியே? மனிசிக்கு மட்டும் தாலி, சங்கிலி, காப்பு என்று செய்து போட்டிருக்கிறாய்? பணமாய்த் தின்னுறாய், பவுணாய்த் தின்னுறாய், நிலமாய்த் தின்னுறாய், எல்லாம் முடித்துவிட்டாய். இனி ஆட்களைத் தின்னப் போகிறியே? கொழும்புக்கு வந்து, கொடுப்புப் பல்லு 'இம்பிளான்ற்' பண்ண ஒரு லட்சம் கொண்டு வா எண்டனி? வெக்கம், ரோசம், மானம், சூடு, சொறணை இதிலை ஒன்று கூட இல்லையே? என்ன சென்மமோ? என்று மகள் லீலா பொரிந்து தள்ளினாள்.

அப்பனும் எழுந்து நின்று கத்தினான். நீ ஒழுங்காய் இருந்தனியோ உனக்குத் தாறதுக்கு? என்று

என்னதான் வைச்சிருக்கிறாய் தாறதுக்கு? எல்லாம் தின்று ஏப்பம் விட்டிட்டியே என்று கூறிப் பஞ்சைப் பரதேசி என்றாள் லீலா இறுதியில் இவள் மாடி அறைக்குப் போன பின்பு மனைவி சுப்புலட்சுமி வந்தாள் அவன் அருகே,

என்ன பெரிய சத்தமாய்க் கிடந்தது! என்று கேட்டாள் கணவன் சுப்பிரமணியத்திடம்.

அது அவள் மேள் தனக்கொன்றும் தரயில்லையாம். அம்மா எல்லாம் நகையள் போட்டிருக்கிறாவாம் என்று சண்டை பிடிக்கிறாள். என்றான் சுப்பிரமணியம். நான் தானே சொன்னனான், அவளுக்கு ஏதும் கொடுக்கச் சொல்லி நான் சொன்னது உங்கடை காதுக்குள்ளை பூரயில்லை. குடிச்சு வெறிச்சுக் கொண்டு பெருமைக்குச் செலவழித்தியள். இப்பதான் பணத்தின் அருமையும் மகளின் ஏச்சும் தெரியுது. நீங்கள் சீதனம் கேட்டு வாங்கித் தானே செய்தனீங்கள். லீலாவுக்கும் அப்படிக்குடுக்கத்தானே வேணும். திருமணம் முடிஞ்சிது என்று ஒன்றும் கொடாமல் விடுகிறதே? அவள் தன்ரை பிள்ளையளை என்ன செய்யிறது?

எதற்கும் சவடாமல் பேச்சுப் பேசிப் பழகி விட்டியள். உந்தச் சவடால் பேச்சுச் சரிவராது. அதுதான் பெத்தபிள்ளையிட்ட வேண்டிக் கட்டிறியள். நீங்கள் ஒழுங்காய் இருந்தால் இப்படிப் பேச்செல்லாம் கேட்க வருமே? ஏதோ கெட்டித்தனமாய்ப் பேசிப்போட்டன் என்ற எண்ணம் போல,

சுப்புலட்சுமி அடுத்துப் பொரிந்து தள்ளவும் சுப்பிரமணியம் பேசாமல் படுத்துக் கொண்டான்.

# 17. சுவீட்டிக்கற்

சுலபமாகச் சம்பாதிப்பது எப்படி? என்று கேட்டால் பதில் சுவீப் டிக்கற் தான்! தருமினி என்ற பெண் அவளது மகன் இருவருக்கும் அலாதிப்பிரியம் பிரியம்! அடிக்கடி கட்டுக்கட்டாக சுவீவ் டிக்கட் வாங்குவார்கள். கடன் தொல்லையும் இருந்தது. குடும்பத் தலைவர் முத்துலிங்கம் திட்டமிட்ட வாழ்க்கை முறையை நடத்தாது ஊதாரித்தனத்தால் வந்தவினை அது, யாழ்ப்பாணத்தில் வாங்கியது போக கொழும்பிலிருந்தும் டிக்கற் வாங்கிப் பார்த்தனர் உகும்! பலன் ஏதும் இல்லை!

இரண்டு சுவீப்டிக்கற் பரிசு விழந்தால் எப்படியிருக்கும்! என்று தருமினி பலத்த யோசனை செய்தபோது பாவம்! மூளையில் தட்டிவிட்டது. ஒரு சமயம் மகன் கொழும்பு போக வேண்டி வந்தபோது தருமினி கூறினாள். தம்பி! காசு கொண்டு வரப்பெரிய றங்குப் பெட்டி கொண்டு போ் அதோடை பொலீசையும் கூட்டிக் கொண்டு போ. காசுப்பெட்டி கவனம் என்று புத்திமதி கூறினாள்.

இன்னொரு சமயம் சுவீப்டிக்கற் பரிசில் இரண்டு கார், ஒன்று தம்பிக்கு ஒன்று எனக்கு, தம்பிக்கு நீளமான பவுண் சங்கிலி, எனக்கு நிறை நகையெல்லாம் வாங்க வேணும். வெளிங்கிடுங்கோ, பிள்ளை உந்த முடிமயிரைக் கொண்டு வா, குடும்பி முடிய மாப்பிள்ளை வரப்போகிறார் என்று பைத்தியம் முற்றி அலட்டிக் கொண்டாள் தருமினி! தனக்குக் கல்யாணமாம், சுவீப்டிக்கற் எப்படியெல்லாம் வேலை செய்கிறது!

இன்னொருவர் கூறுகிறார் " எனக்கு சுவீப்டிக்கற் பணம் வந்திருக்கு உந்தத் தபால்கந்தோரிலை கேட்க, பணத்தைத் தருகினமில்லை. நீங்கள் அதை ஒருக்கால் வாங்கித் தாருங்கோ" என்று பணம் விழுந்ததோ இல்லையோ மனிதர்கள் எப்படியெல்லாம் பைத்தியமாகிறார்கள்! எப்படிப்போட்டு ஆட்டுகிறது இந்த சுவீப்டிக்கற்! ஐயோ பாவமே என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

கொழும்பில் ஒருவர் வீட்டுக்கு வந்த நபர் கூறினார். இந்த டிக்கட்டுக்குப் பணம் விழுந்திருக்கு ஐம்பதினாயிரம். நான் இந்த கொம்பனியில் வேலை செய்கிறனான் அதனாலை நான் பரிசுப்பணம் எடுக்க முடியாது. உங்கடை அவர் எனக்குக் கூறினார். உங்களிட்டை டிக்கற்றைக் கொடுத்து இருபத்தையாயிரம் வாங்கச் சொல்லி என்று மூச்சு விடாமல்,

அதை நம்பிய வீட்டுப் பெண் எதையும் யோசிக்காமல் உடனே இருபத்தையாயிரம் ரூபாவை எடுத்துக் கொடுத்து டிக்கற்றை வாங்கிக் கொண்டாள்! கணவன் வந்தபின் நடந்த விடயத்தைக் கூறினாள் அந்தப் பெண்.

ஐயையோ! மோசம் போட்டுதே இருபத்தையாயிரம்? என்று கணவன் தன் தலையில் அடித்துக் கொண்டான்!

## 18.கூட்டப்போட்டாரோ?

கயிலைநாதன் குளித்து முடிந்தவுடன் அலுமாரியில் ஏதோ கிளறிக் கொண்டிருந்தான். பதினைந்து நிமிட கிளறலின் பின்னர் நீண்ட காற்சட்டை ஒன்றை எடுத்து இடுப்புப் பகுதியில் 'பெல்ற்' ஒன்றைப் பூட்டியதும் இரண்டு கால்களையும் உள்ளே நுழைத்து விட்டு இடுப்புப் பகுதியைச் சரிசெய்த போது, வயிற்றுப்பகுதி வற்றிப்போயிருந்ததால் காற் சட்டை தொய்ந்தது! சுகவீனமாக ஒருமாதம் இருந்ததில் உடல் மெலிந்து விட்டிருந்தான். காற்சட்டை சரிவராததனால் வேட்டி ஒன்று எடுத்து அணிந்து சேட்டும் போட்டுக் கொண்ட பின்பு மனைவி கல்யாணியிடம் கேட்டான் அச்சகத்தில் புத்தகம் எடுக்கப்போறியோ? என்று,

ஓமோம் எடுக்க வேணும். நானும் வருகிறேன் என்று கயிலை நாதனுடன் ஓட்டோவில் அமர்ந்து கொண்டாள். ஓட்டோ கச்சேரிப்பக்கம் சென்றது. தொண்டு நிறுவனம் ஒன்றின் முன் ஓட்டோவை நிறுத்திவிட்டு கொண்டு வந்த அறிக்கைக் கொப்பியை அங்கு நின்றவரிடம் கொடுத்துவிட்டு, சரி, அச்சகப்பக்கம் விடு ஓட்டோவை என்றான் கயிலைநாதன். சில நிமிடங்களில் ஓட்டோ பேபி அச்சகத்தின் முன் நின்றது. கல்யாணி இறங்கிச் செல்லவும்.

அம்மா! வாங்கோ என்று முதலாளி வரவேற்று அமரச் சொன்னார். அமர வேண்டிய இடத்தில் தலைக்கவசம் ஒன்று உட்கார்ந்தது! அதனால் கல்யாணி அமரவில்லை. திரும்பவும் கூறினார் முதலாளி அமரும்படி,

பரவாயில்லை, நான் நிற்கிறேன் என்று கல்யாணி கூறினாள் சிறிது நேரத்தில் தலைக்கவசம் எடுக்கப்பட்டிருந்தது. பின்பு கல்யாணி அமர்ந்து கொண்டாள். உடனடியாக பிரசிலிருந்து புத்தகம் எடுக்க முடியாது. சிறிதுநேரம் செல்லும் என்றார் முதலாளி.

இவருக்குச் சிறுப்பிட்டியில் நான்கு மணிக்குக் கூட்டம் இருக்கு அதனாலை வெள்ளிக்கிழமை மூன்று மணிக்கு டிறைவர் வருவர்.

புத்தகங்களை கொடுத்துவிடுங்கோ என்று கூறிய கல்யாணி ஓட்டோவில் அமர்ந்து கொண்டாள். சிறுபிட்டியில் ஏதோ அபிவிருத்திக்கூட்டம் கயிலை நாதனுக்கு, அங்கே போன போது மூன்றரை மணியாகியிருந்தது. கூட்டம் நடைபெறும் இடத்திற்கு யாரும் வந்திருக்கவில்லை. அதனால் பக்கத்திலிருக்கும் கோயிலடியில் சென்று ஓட்டோவை நிறுத்தி விட்டு இருந்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது.

நான்கு மணியாயிற்று. சரி கூட்டம் நடக்கும் இடம் போவோம் என்று அங்கு போன போது அங்கு ஒருவர் வந்து வாயிலில் நின்று கைத்தொலைபேசியைக் காதில் வைத்துக் கொண்டு நின்றார். பின்பு ஒவ்வொருவராக வந்தனர். ஐந்துமணி ஆயிற்று கூட்டம் தொடங்கவில்லை. கல்யாணியும் டிறைவரும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தனர். கூட்டத்திற்கு வருபவர்களைப் பார்த்து! நாலுமணிக்கு கூட்டம் என்று நோட்டீசு கொடுத்து விட்டு, இன்னும் கூட்டம் தொடங்கவில்லை. இவைதான் அபிவிருத்தி செய்யப்போகினம் மும்முரமாக! என்று கூறி டிறைவர் சிரித்தான்.

ஒருவர் வந்து கூறினார். ஓட்டோவைக் பின்னுக்கு எடுங்கோ என்று, டிறைவர் பின்னுக்கு எடுக்கும் போது கல்யாணி கூறினாள் ஓ! பெரியவர் வரப்போகிறார் போலை, அவற்றை வாகனம் முன்னுக்குத்தான் விடவேணும் என்று, ஒருவர் மோட்டார்ச் சைக்கிளில் வந்து இறங்கினார் சிரித்தபடியே! உள்ளே நுழைந்த போது, அவர் தான் தலைவர் போலை, அதுதான் கடைசியாக வந்தவர், தலைவர் முதலே வருவது சரியில்லை, அத்துடன் நேரகாலத்துக்கும் வரக்கூடாது. அதுதான் தலைவருக்குரிய சிறப்பு அம்சம்! என்று கல்யாணி சொல்லிச் சிரிக்க டிறைவரும் சிரித்தான்.

ஒருசமயம் அதிகாரசபைக் கூட்டம் ஒன்பது மணியென்று போனது. யாழ்ப்பாணம், கல்யாணி கிளினிக்கில் மருந்து எடுத்துக் கொண்டு ஓட்டோவில் இருந்தாள். பத்து, பதினொன்று, பன்னிரண்டு என்று நேரம் போய்க் கொண்டிருந்தது! தலைவர் இன்னும் கூட்டத்திற்கு வரவில்லையாம். கயிலைநாதன் கூட்ட மண்டபத்தில் ஒரு மணிவரை மற்ற உறுப்பினர்களுடன் காத்திருந்து விட்டு இனியும் இருப்பதில் பிரயோசனமில்லை என்று வெளியேறி வந்தான். கூட்டம் அத்துடன்! வீட்டுக்குச் போய் சாப்பிடுவம் என்று எல்லோரும் மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

தலைவர் வரமுடியவில்லை என்றால் ஒரு டெலிபோன் பண்ணியிருக்கலாமே? இவைதான் தமிழ் ஈழம் ஆளப் போகினம்! என்றாள்

கல்யாணி.

சிறுப்பிட்டியில் ஆறுமணியாயிற்று கூட்டம் முடிந்து வெளியே வந்தனர். ஓ! கூட்டி முடிஞ்சுது போல, குப்பை அப்பிடியே விட்டுப் போட்டு வருகினமோ? என்று கல்யாணி சொல்லிக் கொண்டிருக்கும் போது கயிலைநாதன் ஓட்டோவில் ஏறிக்கொண்டான். மறுநாட்காலை மகன் டெலிபோனில் கேட்டான். நேற்று ரெலிபோன் எடுத்தனான், எங்கே போனீர்கள் என்று,

அது அப்பா கூட்டத்துக்குப் போனவர் நானும் போனேன் வேறு வேலையாக என்றாள் கல்யாணி.

ஓ! கூட்டப்போனவரா? என்றான் மகன் கேலியாக,

## 19. இங்கேயுமா!

காலை பதினொரு மணி தர்சிகா உலையில் அரிசியைப் போட்டு விட்டு ரி.வி.யில் சமையல் பகுதி பார்க்கலாமே என்று ரி.வி.பக்கம் வந்தவள் முன்பக்கம் யாருடனோ தர்மராசா கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு அங்கே சென்றாள். தர்மராசாவும் அவளைப் பார்த்துக் கொண்டே கையைக் காட்டினான். யாரோ வந்து நிற்பதாக, தர்மராசா சுகமில்லாமல் இருந்து இப்போது சுகமாகி எழுந்திருக்கிறான்.

தர்சிகா எட்டிப் பார்த்து விட்டு, என்ன? என்று கேட்டாள். மூன்று பெண்பிள்ளைகள் அறையின் வெளி வாசலில் நின்றனர். அவர்களில் ஒருத்தி கூறினாள். காய்ச்சல், தலையிடி போன்ற வருத்தங்களுக்கு "மசாச்" செய்து சுகப்படுத்துகிறோம் என்று,

இங்கே எல்லாருமே சுகமாக இருக்கிறோம். "மசாச்" தேவையில்லை நீங்கள் போட்டு வாருங்கோ என்று தர்சிகா கூறவும் அவர்கள் அடுத்த விட்டுக்குச் சென்றனர். திரும்பி வந்த தர்சிகா கணவனிடம் கேட்டாள். உங்களுக்கு "மசாச்" பண்ண வேணுமோ என்று?

அதெல்லாம் வேண்டாம் என்றான் தர்மராசா சிரித்துக் கொண்டே, ஏன் வேண்டாம்? மூன்று பெட்டையள் ஒருத்தி தலையைப் பிடிப்பாள், மற்றவள் இடுப்பைப் பிடிப்பாள், அடுத்தவள் காலைப் பிடிப்பாள் அவகள் தடவத்தடவ எவ்வளவு சுகமாயிருக்கும்! என்று கூறிச் சிரித்தாள் தர்சிகா,

இதற்கென்றே வெளிநாடு போகினம் கனபேர், "மசாச்" என்ற பெயரில் கிளுகிளுப்பு ஏற்ற! அதோடை வடிவாகச் சோப்பும் போட்டுக் குளிக்கவும்

வார்த்து விடுவினமாம். உங்களிடம் இருக்கும் பணத்தைப் பொறுத்து வெளிநாட்டில் எல்லாமே ( ! ) செய்து கொள்ளலாம்! அங்கே இந்த மசாச் கிசாச், எல்லாம் சகசம். ஏன் இங்கே யாழ்ப்பாணத்திலும் மசாச் நிலையம் திறக்க இருக்க பலரும் சேர்ந்து தடையுத்தரவு போட்டவை. சனம் சீரழிந்து போகும் என்று,

அதுதான் போல இப்போ வீட்டுக்கு வீடு திரியினம் போலை? என்று மேலும் தர்சிகா விளக்கமாகக் கூறினாள்! அவள் கூறக் கூற தர்மராசாவின் மனதிலும் மெல்லியதாக மசாச் ஆசை எட்டிப் பார்த்திருக்கும்! களவாய் மசாச் சுக்குக் போகலாம். மனைவி அறிந்தானென்றால் பிறகு என்ன நடக்கும் என்று சொல்லத் தேவையில்லை!

## 20. அவள் பாவம்!

மதிய உணவு சாப்பிட்டு விட்டுப் பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தாள் பவளம்மா, அப்போது கிழிந்த வேடடியொன்றைத் தைக்கக் கொடுத்தான் அவளின் கணவன் பவான். ஊசி, நூல் எல்லாம் ஏதோ கோவத்தில் எடுத்துக் கொண்டு போய்த் தன்னுடைய அறைக்குள் வைச்சிருக்கிறா மகள்.

நீங்கள் இரண்டு பேரும் அண்டைக்கொரு நாள் பேச்சுப்பட்டியள்? அப்பவே எடுத்திட்டா. யாழ்ப்பாணத்திலை ஊசி விற்றவனிடம் வாங்கினனான் சிறியவை, பெரியவை, பாட்டி, கொள்ளுப்பாட்டி, எள்ளுப்பாட்டி எல்லாருக்குமான ஊசியென்று கூறி விற்றவன். நானும் வாங்கி வந்து வைச்சனான்! தன்னுடைய நூலுகளோட அதையும் கொண்டு போய் வைச்சிருக்கு அளக்கிற மீற்றர் அதுவும் தான் என்று பவளம்மா கூறினாள்.

அதைக் கேட்ட பவான், அவள் பாவம்! என்றான், ஒருவேளை தானும் பாட்டி, கொள்ளுப்பாட்டி, எள்ளுப்பாட்டியானால் தைக்க வேணும் என்று கொண்டு போனதோ தெரியாது! என்று சொல்லிப்பவளம் சிரித்தாள். பின்பு தனியாக வைத்திருந்த ஊசியும், நூலும் எடுத்து வந்து, கிழிந்த துணியைத் தைக்கத் தொடங்கினாள்.

ஆறு முழுவேட்டியை இரண்டாக மடித்துக் கட்டினதைப் பார்த்த அவள், வேட்டியை உப்பிடியே கட்டுவது? நான் வேட்டி கட்டிக் காட்டுகிறேன் என்று வேட்டியின் ஒரு தலைப்பைக் கையில் பிடித்துக் கட்ட முயன்றாள். அப்போது தலைப்பு கைநழுவ பவளம்மா சிரிக்க, பவானும் சிரிக்க! பின்னர்

பவளம்மா வேட்டியை  இறுகப் பிடித்துச் சுற்றிக் கட்டி விட்டுக் கூறினாள், இப்படித்தான் வேட்டி கட்டவேணும் என்று,

அதைவிட்டுப் போட்டு அதை இரண்டாக மடிச்சுக் கட்டிப்போட்டு, அதுகாற்றுக்கு விலக, இழுத்துப் பிடிக்கிறது என்றாள் பவளம்மா, அதுகிலும் பார்க்க வேட்டியை இரண்டாக மடித்துச் சாரம் மாதிரி மூட்டித் தைச்சுக் கொண்டு போய் வைத்தாள் அலுமாரிக்குள்,

என்ன எல்லாத்தையும் மூட்டியே தைச்சனி? என்று கேட்டான் பவான் யோசனையுடன், இல்லையில்லை, கிழியல் தான் தைச்சனான் என்று விட்டுப் போனாள் பவளம்மா. நாளைக்கு வேட்டி கட்டும் போது தான் தெரியும் பவளம்மா தைச்சவிதம்! ஏச்சு நடக்குமோ தெரியாது? மனதுள் பவளம்மா எண்ணிக் கொண்டாள்.

மறுநாள் காலை பவான் வேட்டியை எடுத்துக் கட்டப்போன போது அது சாரமாக உருவெடுத்திருந்தது! பவான் மனைவியை கூப்பிட்டான். இதென்ன சாரம் தைச்சனியே என்று கேட்டான் எரிச்சலுடன், சாரம் கட்ட வசதி தானே, வேட்டித் தலைப்பு காற்றில்  பறக்கவும் பிடித்து இழுக்கவும் தேவையில்லை! என்று பவளம்மா விளக்கம் கூறினாள் பவானுக்கு,

எனக்கு இப்போ வேட்டிவேணும் என்றான் பவான்.

வேட்டிதானே! இதோ என்று மூட்டித்தைத்த நுலோடியைப் பிடித்து இழுத்தாள். வேட்டி வந்து விட்டது.

ஓ! நீ 'மாயிக்' எல்லாம் செய்யிறாய்? எங்கே இதெல்லாம் பழகினனி!! என்று கூறியபடியே பவான் வேட்டி கட்டத் தொடங்கினான்.

உங்களுக்கு ஒரு புதினம் சொல்லட்டோ "ருத்தரவீணை" என்ற கதையில் கோயில் கணக்காளர்  ஒருவர் சித்தனின் பின்னே போய்த் திரும்பி மனைவியிடம் வந்தார். மனைவிக்குச் சமீபகாலமாகக் கண் தெரியாது. அங்கு பழஞ்சோறு இருந்தது. அதை மந்திரம் சொல்லிச் சூடாக்கி மனைவிக்குக் கொடுத்தார் சாப்பிடு என்று, மனைவியார் கூறினார் எனது கண்ணையும் மந்திரத்தால் பார்வை வரச் செய்துவிடு என்று கேட்கவும் அது பிரம்மா அப்படிப்படைத்தது என்னால் மாற்ற முடியாது என்று கணவன் கூறவும், பழஞ்சோறு சூடாக்க ஏன் மந்திரம்? அடுப்பில் சுட வைக்கலாமே என்றாளாம் மனைவி! அப்படித்தான் 'மயிக்' செய்தேன்! என்று சிரித்தாள் பவளம்மா.

# 21. கண்ணிலை காட்டவில்லையே!

புவனேசுவரி முதன் முதலாகச் சிறுகதை நூல் ஒன்று வெளியிட்டு அதில் ஒன்று தனது சிநேகிதி மாலாவுக்குக் கொண்டு போய்க் கொடுத்தாள். பின்னர் ஒருசமயம் மாலாவைச் சந்தித்த போது, தனக்கு இன்னும் ஒரு நூல் தரும்படி கேட்டாள். சரியென்று புவனேசுவரி தனது வீட்டுக்கு வந்த நபரிடம் கொடுத்து விட்டாள். 'றோட்' அருகில் இருக்கும் மாலாவின் மகளிடம் கொடுத்து அதைத் தாயிடம் சேர்க்கும் படி சொல்லியனுப்பினாள். மாலாவின் வீடு கொஞ்சம் உள்ளே தூரம் போக வேண்மென்பதால்,

பின்பு ஒரு நாள் மாலைநேரம் கோயிலடியில் மாலைாவைச் சந்தித்த போது, புத்தகம் கொடுத்து விட்டேன் மகளிடம், கிடைத்ததா! என்று புவனேசுவரி கேட்ட போது மகள் கண்ணிலை காட்டவில்லையே! என்றாள்.

நான் அவவிடம் கேட்டபோது தான் கொடுத்துவிட்டதாகச் சொன்னாவே? என்றாள் புவனேசுவரி.

ஒருவேளை மற்றமகள் தூரியிடம் கொடுத்தாவோ தெரியாது. என்னுடைய லொண்டன் மகளுக்கு ஒன்று கொடுத்துவிட வேணும். என்னுடைய மச்சாள் போறாலாம் வருகிற பத்தாம் திகதி. அவவிட்டைக் கொடுத்தனுப்ப இருக்கிறன் என்றாள் மாலா.

என்னிடம் வேறுபுத்தகம் இல்லையே தருவதற்கு! இனி அப்படியென்றால் புதிதாக அடித்துத்தான் தரவேணும் என்றாள் புவனேசுவரி. இப்ப ஒன்று கொடுக்க, பின்னர் சொல்லுவ, மற்றப்பிள்ளைக்கும் ஒன்று என்று! ஐஞ்சு பிள்ளைக்கும் ஐஞ்சு கேட்பா, வேறு வேலையில்லை எனக்கு! அவவுக்குப் புத்தகம் வாசிக்கத் தெரியாது போலை, பள்ளிக்கூடத்திலை அரிவரியோடை விட்டாச்சு போலை! ஒரு நாள் மாலாவின் மகளும் மாலாவும் நானும் கதைக்கயிக்கை, மகள் யாரையோ சொன்னாள் அவ டீச்சர் என்று, அப்ப மாலா சொன்னா, அவடீச்சர் இல்லை படிப்பிக்கிறவ என்று!

படிப்பிக்கிறவையை டீச்சர் என்று தான் சொல்லுறது என மகள் மாலாவுக்கு விளக்கினாள்! பாவம் மாலா இது கூடத் தெரியாமல் இருக்குது என்று மனதுள் சிரித்தாள் புவனேசுவரி,

பிறருடன் கதைக்கும் போது எதையும் தெரிந்து கொண்டு கதைக்க வேண்டும். தெரியாது விட்டால் பரவாயில்லை, பேசாமல் இருப்பது புத்திசாலித்தனம். கண்டதையும் உளறத் தேவையில்லை அல்லவா! மாலாவுக்கு டீச்சர் என்றால் என்ன என்பது புரியவில்லை. பேசாமல் தன் பாட்டில் இருக்கலாம். ஏதோ தெரியும் என்று காட்டப் போய் மாட்டிக் கொண்டாள்! பரிதாபம் தான். அதிகப் பிரசங்கித்தனத்தால் வரும் வினை இது.

# 22. வெளிநாட்டுச் சங்கிலி

காந்திமதி தனது சொந்த ஊரான வடமராட்சிக்குப் போயிருந்தாள். பருத்தித்துறையிலிருக்கும் தனது சொந்தக்காரப் பெண் வீட்டுக்கும் போனாள். உபசாரங்கள், சுகநலன்கள் எல்லாம் முடிந்த பின்னர் அந்தப் பெண் ராதிக்கா ஒரு சங்கிலியைக் காட்டி, இது வெளிநாட்டுப் பவுண் சங்கிலி, இதை நீங்கள் வாங்குங்கோ, உங்களிட்டையும் வேறு சங்கிலி இல்லைத்தானே? என்று காந்திமதியிடம் கொடுத்தாள்.

நான் அவரிடம் கொண்டு போய் கொடுத்து கேட்கிறேன். அத்துடன் பத்தரிடமும் காட்டத் தானே வேணும் என்று காந்திமதி கூறிய போது, நீங்கள் பத்தரிட்டக்குடுத்துப் போட்டு அங்காலை இங்காலை போகக்கூடாது, என்று புத்திமதியும் கூறினாள் ராதிக்கா!

சங்கிலியைப் பெற்றுக் கொண்ட காந்திமதி தனது மச்சாள் வீட்டுக்கு சென்றாள். அங்கு அந்தச் சங்கிலியைக் காட்டிய போது, அவ மணந்து பார்த்துவிட்டு, இது பித்தளைச் சங்கிலி வாங்க வேண்டாம் என்றார். சங்கிலி தந்த ராதிக்காவும் அவவுக்கு மச்சாள் தான்! வீட்டுக்கு வந்து கணவனிடம் காட்டிக் கொண்டே பத்தரும் பார்த்துவிட்டு கவறிங் சங்கிலி எனக் கூறியதையும் சொன்னாள்.

பேசாமல் நாளைக்கே கொண்டு போய்க் கொடுத்துவிடு, இங்கே வேறுசங்கிலி வாங்கி விட்டதாக என்றான் கணவன் காந்தன். மறுநாளே காந்திமதி வீட்டுக்கு சென்று சங்கிலியைத் திருப்பிக் கொடுத்தாள். கவரிங் சங்கிலி என்று சொல்லாமலேயே! அப்படிச் சொன்னால் தான் தந்த பவுண் சங்கிலியைத் தரும்படி கேட்பாளே ராதிக்கா! மாறித்தந்து விட்டதாகச் சத்தியம் பண்ணினாலும் பண்ணுவாள்!

ராதிக்கா, காந்திமதி கொடுத்த கவரிங் சங்கிலியை வாங்கியபடியே இது அவற்றை அக்கா சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்தவ, விற்றுத்தரச் சொன்னவ, பரவாயில்லை நான் வேறு யாருக்கும் விற்று விடுவேன். உங்களுக்கும் இதுவிலை கூடத்தானே! என்று சமாளித்தாள் ராதிக்கா, பாவம் அவள் கவறிங் சங்கிலி விற்றாவது பணம் சேர்க்க விரும்புகிறாள்!

வேறு யாரிடமாவது விற்கப் போய் அம்பிட்டாள் என்றால் சும்மா விடமாட்டார்கள் பூசை அலங்காரத்துடன் பொலிசிடம் போக வேண்டியிருக்கும்!

இத்தனைக்கும் அவள் கணவன் பொலிசு உத்தியோகத்தில்

இருந்தவன் மகனோ லோயர்! ஏமாற்றிப் பிழைப்பதிலும் ஓர் இன்பம் உண்டு போலும், இவர்களெல்லாம் கௌரவப்பிச்சைக்காரர்கள் போலும் தர்மம் போடு சாமி என்று கேட்பதில்லை! மற்றவர்களை ஏமாற்றப் போய் தாங்களும் ஒருசமயம் ஏமாற்றப்படலாம் என்பது தெரியாமல் தானே இருக்கிறார்கள். ஐயோ பாவம்! என்று சொல்வதைத் தவிர வேறு என்ன தான் செய்வது!

## 23. நாற்பது ரூபாய்கள்

பரன் அவளின் செல்லப் பிள்ளையும், செல்வப்பிள்ளையும் ஆவன். இறைவனிடம் வரங்கேட்டுப் பெற்ற செல்வப்பிள்ளை, அவனுடைய நாமமும் பரன் ஆயிற்று! இப்போ இரண்டு வயதாகிறது. எதையாவது பார்த்து அது அவனுக்கு வேணுமென்றால் அதைக் கொடுத்து விடவேண்டும் அவனிடம் இல்லாவிட்டால் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவான். பெரிதாக எதுவும் கேட்கமாட்டான். அன்று அவனின் அப்பா கோவிந்தபிள்ளை மனைவியிடம் பணம் கொடுத்துக் கொண்டே கூறினார். கூலி கொடுக்க வேண்டும், கந்தன் வருவான் கொடுத்துவிடு என்று, பின்பு ஏதோ வேலையாக வெளியே போய்விட்டார். கோவிந்தபிள்ளை. மனைவி அதைக் கொண்டுபோய் வைப்போம் என்று கொண்டு போனதை குழந்தை பரன் பார்த்து விட்டான். பார்த்தது தான் தாமதம். அதைத் தரும்படி கேட்டான், அவன் அதைக்கிழித்து விட்டால் என்ன செய்வது? என்று நினைத்த தெய்வி படாரென்று பணத்தைச் சுவர்த்தட்டில் இருந்த பத்திரிகையின் கீழ் மறைத்து விட்டு ஒன்றும் இல்லையே, பேப்பர் எறிந்து விட்டேன் என்று குழந்தை பரனிடம் கூறிக்கொண்டே உணவு ஊட்டினாள்.

சிலமணி நேரத்தின் பின் கூலியாள் வந்து பணம் கேட்டான், அப்போது தெய்வி பணம் எடுக்க உள்ளே போனாள். பணத்தை எந்த இடத்தில் வைத்தோம் என்பதை அவசரத்தில் நினைவு கூர முடியாது தேடிப்பார்த்து விட்டு அதைப் பின்னர் தேடுவோம் என்று நினைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குப் போய், நாற்பது ரூபா பணம் தாருங்கள், நாளை தருகிறேன் என்று கேட்டு வாங்கி வந்து கூலியாளிடம் கொடுத்து அனுப்பி விட்டாள்.

பின்னர் தெய்வி அரிசியைக் சுளகில் போட்டுத் துப்பரவாக்கிக் கொண்டிருந்தாள். வெளியே போயிருந்த கோவிந்தபிள்ளை வீட்டுக்கு வந்ததும் நேராகத் தெய்வியின் பக்கம் போய், முதுகில் ஒருபோடு போட்ட படியே காசு எங்கே? பக்கத்து வீட்டில் வாங்கித் தந்தது என்று கந்தன்

சொன்னான்.

அடித்தபிறகு அவருக்கு எந்த மறுமொழியும் சொல்லத் தேவையில்லை என்ற எண்ணத்தில் தெய்வி எதுவும் பேசாமல் தனது வேலைகளைக் கவனித்தாள். கோவிந்தபிள்ளை குழல் பிட்டுத்தள்ளும் தடியால் தான் அடித்தது வைரமான தடி கொட்டன் என்றே அதைச் சொல்லலாம். என்ன ஏது, என்ற விசாரணையில்லாது வந்த வீச்சுக்கு அடி! போலீசாருடன் கூடிப் பழகிய பழக்கம் அது!

பின்னர் தெய்வி வைத்த இடத்தில் பணத்தைத் தேடி எடுத்து பக்கத்து வீட்டுக்காரியிடம் கொடுத்து விட்டு வந்து அந்தச் தடியை எடுத்து அடுப்பு எரிக்கும் போது எரித்து விட்டாள். அடி கொடுத்த கோவிந்தபிள்ளை, மனைவி கடன் பணம் கொடுத்தாளா? என்று ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை! அவர் புத்திசாலி, அப்படிக் கேட்டால் மனைவிக்குப் பணம் கொடுக்க வேண்டுமே? அவள் எங்கேயிருந்து பணம் கொடுப்பாள் என்று யோசித்துப் பார்க்கும் மூளைத்திறனும் இல்லை. அதனால் தானே என்னவோ கோவிந்தபிள்ளையென்று பொருத்தமான பெயர் வந்து அமைந்ததோ என்னவோ? நாற்பது ரூபா பணம் கூட இல்லாத மனைவி! லட்சம் சீதனத்துடன் ஆதன பாதனத்துடன் வந்தவள். இப்போ அடுத்த வீட்டில் பிச்சை கேட்கிறாள்!

தெய்வி பதிவிரதை! கணவர் எது செய்தாலும் கேட்கவே மாட்டாள், எவ்வளவென்றாலும் வாங்கிக் கட்டிக் கொள்வாள். பர்த்தாவுக்கு ஏற்ற பதியென்பது இது தானோ? காலங்கள் மாறின. ஆனால் தெய்வியின் முதுகெலும்பு முறிந்தது. முறிந்தது தான், அதற்குச் சிகிச்சையும் கிடையாது, கோவிந்தபிள்ளைக்கு தொந்தால் தானே சிகிச்சை செய்வதற்கு! சிலவருடங்களின் பின் சுகவீனம் என்று போன போது டொக்ரர் கூறினார் முதுகுப்பக்கம் படம் பிடித்து வரும்படி, அப்படியே ‘கிளினிக்’ கில் படம் எடுத்துப் பார்த்தபோது முதுகுப்பகுதியில் ஒரு பகுதி வித்தியாசமாக எலும்புகள் தெரியாமல் அழிபட்டது போல் இருந்தது.

என்ன ஏது என்று தெய்வியும் கேட்கவில்லை டொக்டரிடம் கணவரின் தர்ம அடி வெளிவரக்கூடாதே! காலில் ஏதாவது தட்டுப்பட்டாலும, முதுகுப்பக்கம் வலிக்கும். அம்மா! என்று முனகி விட்டு இருந்து விடுவாள். நாற்பது ரூபாய்கள் தந்த பரிசு! இப்படி எத்தனை ரூபாய்களைக் கோவிந்தபிள்ளை காணாமல் செய்து விட்டார்! அவருக்கு முதுகு மட்டுமல்ல, நெஞ்செலும்பையும் முறிக்க வேண்டுமே! ஒருநாள் கட்டாயம் ஆண்டவன் முறிப்பான், அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.

# 24. ஐயகோ! ஏதுசெய்வேன்

அன்று புதுவீட்டுக்கு (அல்ல பழைய வீடு தான்!) தாங்கள் வாங்கிய வீட்டுக்குப் பால் காய்ச்சுதல் நடைபெற்றது. தயாநிதியின் அயராத முயற்சியால் அந்தவீடு வாங்கப்பட்டது என்று அயல் வீட்டு நண்பர் கூறினார். தயாநிதியின் மகள் தேன்மொழியும் முதல் நாளே வந்து சேர்ந்து விட்டாள். சின்னதொரு மண்ணெண்ணை குக்கரும் கொண்டு வந்து காட்டினாள். இது போதும் தானே என்று,

ஓ! போதுமே என்றாள் தயாநிதி, பழைய பெரிய குக்கரும் இருந்தது. இரண்டையும் கொண்டு போவோம் என்று தயாநிதி எடுத்துவைத்தாள். ஓட்டோவில் பால், பழம், கற்கண்டு என்பனவும் வைத்தபோது கணவன் தர்மராசா கூறினான். நிறைகுடம் வைக்கவேணும் எடுத்து வை என்று,

ஏன் நிறைகுடம்! முன்பெல்லாம் வீடுமாறும் போது வைக்கவில்லையே! இப்பமட்டும் ஏன் வைக்கவேணும்! என்று கேள்வியைக் கேட்டு விட்டு "ஓ! எங்கடை வீடு!" அதுதான் நிறைகுடம் வைக்க வேணும், சரி சரி தயாநிதி எடுத்து வைத்தாள். பழைய குக்கரில் பால் காய்ச்சுவோம் என்று திரியைத் தீண்டி விட்டுப் பற்ற வைத்த போது அது பற்றவேயில்லை, காரணம் தீண்டிய பக்கம் பிழை. மாதக்கணக்கில் பாவிக்காமல் விட்டதில் எந்தப்பக்கம் தீண்டுவது என்பது மறந்துவிட்டது!

முன்பு ஒரு மாதம் அளவில் கொழும்பில் நின்று தங்கிவிட்டு வீட்டுக்கு வந்து பிட்டுக்கு எவ்வளவு தண்ணீர் விட்டுக் குழைப்பது? என்று யோசனை செய்தாள்! ஏனெனில் மறந்துவிட்டாள் ஒரு மாதத்திற்குள்! இந்தக் குக்கர் பற்றவில்லை, சின்னக்குக் கரைத் தீண்டிவிடு என்று மகளிடம் கூறிய போது, தேன்மொழி தீண்டிவிட தயாநிதி பற்ற வைத்தாள். பால்காய்ச்சி சாமிப் படத்துக்குப் பால் வைத்த பின் அங்கு வருகை தந்த நண்பருக்கும் அவரின் மகள், பேரன் என்பவர்களுக்கும் பால் விட்டுக் கொடுத்தனர்.

அவர்கள் விடைபெற்ற பின் பக்கத்து வீட்டுப் பெண்ணும், பேரக் குழந்தையும் வந்தனர். அவர்களை வரவேற்று அவர்களுக்கும் கொடுத்துப் பின்னர் தாமும் குடித்தனர். அத்துடன் பால் காய்ச்சு வைபவம் முடிந்து, வாடகை வீடு சென்று ரக்றறில் சாமான்களை ஏற்றி இறக்கினர். வேலை முடிய மாலையாகியது. காலையில் இட்லி, தோசை என்று அவித்து வைத்திருந்தாள் தயாநிதி. மதியம் சோறு கறி ஆக்கினாள். மாலையில் எல்லாரும் "புதுவீடு" வந்து சாப்பிட்டு விட்டுப் படுக்கையில் சரிந்தனர். அடுத்த நாட்காலையில் சாமான்களை எடுத்து வைக்க வேண்டிய இடங்களில் வைத்தாள் தேன்மொழி.

முன்பிருந்த வாடகை வீட்டில் தேங்காய் புடுங்குவதற்காக மரமேறி ஒருவனை ஓட்டோ டிறைவர் அழைத்து வந்திருந்தான். தயாநிதி உடைமாற்றி ஆயத்தமானாள். கணவன் தர்மராசா தானும் வருவதாகக் கூறி அவனும் ஓட்டோவில் ஏறிக் கொண்டான். ஓட்டோ வாடகை வீட்டை நோக்கிச் சென்றது. அங்கு நான்கு மரங்களிலும் தேங்காய்கள் புடுங்கியதும் குட்டையான தென்னை மரத்தில் இளநீர் புடுங்கி வெட்டிக் குடித்தனர். அத்துடன் பலா மரத்தில் பலாக்காய் ஒன்றும் வெட்டினர். ஒரு வாரத்திற்கு முன் தெருவில் போய்க் கொண்டிருந்த மரமேறியைத் தர்மராசா அழைத்துத் தேங்காய் புடுங்கச் சொன்ன போது மூன்று, நான்கு என்று புடுங்கிவிட்டு மிகுதியை விட்டுவிட்டதை தயாநிதி கவனித்தாள். ஆனால் அவள் எதுவும் சொல்லவில்லை. ஏனெனில் தர்மராசா அழைத்த கூலியென்று தான் தேங்காய் முழுதாகப் புடுங்காமல் விட்டால் பின்னரும் ஒருதடவை தேங்காய் புடுங்கிக் கூலி வாங்கலாம்! இப்படியாகத் தேங்காய் புடுங்குவதிலும் சூட்சுமங்கள் இருக்கின்றன!

இதற்கு ஒரேவழி, தம்பி! அந்தத் தேங்காய்க் குலையையும் புடுங்கு என்று புடுங்குவிப்பதுதான், தயாநிதி அப்படித்தான் புடுங்குவிப்பாள் தனக்குக் பழக்கமானவர்களைக் கொண்டு, தேங்காய்களுடன் தர்மராசாவையும் அனுப்பி விட்டுத் தான் அப்படியே சிநேகித வீடுகளுக்கும் சென்று உலர்த்தி விட்டு வருவதாகக் கூறினாள் தயாநிதி. அப்படியில்லைத் திரும்பவும் வரும் ஓட்டோ ஏற்றிச் செல்ல என்றான் தர்மராசா.

சரியென்று தயாநிதி வீட்டில் படியில் நின்று கொண்டாள். சிறிது நேரங் கழித்து ஓட்டோ வந்த நின்றது. தர்மராசாவும் வந்திருந்தான். ஏன் திரும்பி வரவேண்டும் என்று தயாநிதி கேட்டாள். நான் என்ரை பெண்சாதியிட்டை வந்தனான் என்றான் தர்மராசா,

பெண்சாதி செத்து எத்தனை வருடம் ஆச்சு! பெண்சாதியிட்டை வந்தவராம்!! ஏதோ பைத்தியம் போல, மந்திகை ஆசுப்பத்திரிக்குத்தான் விடவேணும் என்று கூறிச் சிரித்தாள். தயாநிதி வீட்டுக்குப் போன போது, கடையிலிருந்து சாப்பாட்டுப் ‘பார்சல்’ வாங்கி வைத்திருந்தாள் தேன்மொழி. எல்லாரும் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்தனர். தேன்மொழி அன்றிரவே கொழும்பு பயணமானாள். அடுத்த நாட்காலை உணவுக்குப்பின் தான் பெட்டியில் வைத்த விதவிதமான பூக்களைத் தேடினாள். எங்குமேயில்லை, ஓ! எரியூட்டி விட்டாள். ஒருபெட்டி பூக்களையும், அதுமாத்திரமா? விளாம்பழத்து கோதில் செய்த பழவகைகள் எல்லாமே போய்விட்டிருந்தன.

வாங்கிய வீட்டை தேன்மொழியின் பேரில் எழுதிய தாலா இந்த எரியூட்டல் வேலை நடந்திருக்கும்!

குளியலறைக்குள் போய் நின்று, ஐயோ! என்று கத்தினாள் பெருங்குரலில், தர்மராசாக் கிழவன் ஓடி வந்தான். ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது? என்று கேட்டான்.

எல்லாத்தையும் எரிச்சுப் போட்டாளே என்று கூறித்திரும்பவும் அழுதாள் தயாநிதி.

சரி அழாதை, நீ அழ எனக்கும் அழுகை வருகிறது என்றான் தர்மராசா.

அழுதுவிட்டுத் தனக்குக்தானே கூறிக் கொண்டாள். "எல்லாமே அநித்தியம், எதுவும் நித்தியமில்லை, நீ ஏன் அழுகிறாய்? மறந்து விடு" என்று, பின்னர் வேறொரு பெட்டியில் தேன்மொழியின் பார்வையில்படாமல் ஐந்தாறு பூக்கள் இருந்தன. அவற்றை எடுத்துத் தனது அறைக்குள் அலங்காரமாக வைத்துக் கொண்டாள்.

இனிமேலே போகிற காலம் ஆசைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு ஆண்டவன் மேல் ஆசைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். என்றெல்லாம் யோசனை செய்த தயாநிதி.

"முருகா முருகா முருகா என்று
நான் அழைத்தால் ஓடிவாராயோ
எந்தன் துன்பம் போக்காயோ முருகா
முருகா முருகா என்று
நான் அழைத்தால் பறந்துவாராயோ
எந்தன் பாவம் தீர்க்காயோ

அஞ்சனை மகனே அநுமந்தா
வைகுந்தம் போகாமலே நீ
இமையமலையில் வீற்றிருந்தே
மானிடர்க்கே நன்மைகள் செய்வாயே
அஞ்சனை மகனே அநுமந்தா
என்துயரம் தீராயோ அநுமந்தா

யெய யெய துர்க்காதேவி சரணம்
அம்மா சரணம் தாயே சரணம்

சரணம் சரணம் தாயே சரணம்

பிள்ளையாரே சிவனே என்னை
காப்பீரே துன்பத்திலிருந்தே
விடுதலை தருவீரே எனக்கு
தருவீரே விடுதலை

என்றெல்லாம் தெய்வங்களை வேண்டிக் கொண்டான். தூக்கம் தயாநிதியை ஆட்கொண்டது, காலையில் அவளது மனம் தெளிவடைந்திருந்தது. வழக்கம் போல் தனது கடமைகளைச் செய்து கொண்டாள். கீதையில், 'எது நடக்க வேண்டுமோ அது நடந்தது எல்லாம் நன்மைக்கே' என்னும் வாசகம் தயாநிதி விடயத்தில் சரியாகவே இருந்தது.

## 25.தெரியவேயில்லையே

சுவாமிக்கு எண்ணெய்காப்பு எனக் கூறி தனது ஆசை மனைவி பரிமளத்தை அழைத்துச் சென்றான் பரமானந்தன். கோயிலில் எண்ணைய்க்காப்பு நடந்து கொண்டிருந்தது. சிலர் எண்ணையை கையில் விட்டுக் கொண்டு போகிற இடமெல்லாம் சிந்தியபடியே சென்றனர். சுவாமி அறையில் கால்வைத்தால் வழுக்கி விடுவோமோ என்ற பயத்தில் சுவாமிக்கு எண்ணைய்க்காப்பு வைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் வடமராட்சியிலுள்ள வல்லிபுரக் கோயிலுக்கு எண்ணைக்காப்புச் சாத்தப் போன போது, தர்ப்பைப்புல்லால் எண்ணை தொட்டு சுவாமிக்கு வைத்தனர். அதனால் வழுக்கி விழவேண்டிய பயமேயில்லை! இங்கேயோ என்றால் பயத்துடன் எண்ணை வைக்க வேண்டியிருக்கு, என்று பரிமனம் அருகே நின்று கொண்டிருந்த பெண்களுக்குக் கூறினாள். எல்லாச் சாமிகளுக்கும் எண்ணைக்காப்பு முடிந்ததும் பரமானந்தனும் பரிமளமும் வீடு சென்றனர்.

அடுத்த நாட்காலை கும்பாபிசேகம் என்று அதிகாலையில் பரமானந்தனும், பரிமளமும் கோயிலுக்குச் சென்றனர். ஐயர்மார் , குருக்கள்மார் தத்தம் கிரியைகளைச் செவ்வனே செய்து கொண்டிருந்தனர். ஒரே நேரத்தில் எல்லாச் சுவாமிகளுக்கும் கும்பாபிசேகம் நடந்தது வெகு சிறப்பான நிகழ்ச்சியேதான்.

பின்பு அங்கு ஊக்கத்துடன் கடமை ஆற்றிய பலரும் கௌரவிக்கப்பட்டனர். அவர்களில் பெண்மணி ஒருவருக்கும் பொன்னாடை

போர்த்திக் கௌரவித்தனர். இவையெல்லாம் நடந்து முடிகிற சமயம் பரிமளாவுக்குத் தாகமாகயிருக்கவே அருகேயிருந்த கடைக்குச் சென்றாள் சோடா குடிக்கவென்று, கடையில் கேட்டபோது சோடா இல்லையென்றனர். இரண்டு ரொபி வாங்கி வாயில் போட்டுக் கொண்டு கடைக்காரரின் வீட்டுக்குப் போய்த் தண்ணீர் குடிப்போம் என்று திரும்பிய போது, பொன்னாடை போர்த்தப்பட்ட பெண்மணி அந்தக் கடைக்குச் சொந்தக்காரி வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். பரிமளமும் அப்பெண்மணியின் பின்னே சென்றாள். அப்பெண்ணின் பிள்ளைகளும் கூடவே பரிமளத்துடன் சென்றனர். உள்ளே போய் கதிரையொன்றில் அமர்ந்தாள் பரிமளம், அந்த வீட்டுக் குடும்பத்தாருடன் முன்பே பழக்கமானவள் பரிமளம்.

பக்கத்தில் நின்றவர்கள் யாரும் பரிமளத்தைத் தெரிந்தவர்களாகக் காட்டிக் கொள்ளவில்லை! சிறிதுநேரத்தின் பின் ஒருத்தி (தெரிந்த பெண்) வெளியே வந்தபோது, தண்ணீர் குடிக்க வேண்டும் என்றாள் பரிமளம். வந்த பெண் உள்ளே போனாள். போனது போனது தான்!

அந்த வீட்டுப் பிள்ளைகளும் பரிமளம் அருகே நின்று கொண்டிருந்தனர். ஏது, என்ன என்று எதுவும் கண்டு கொள்ளவில்லையே ஒருவரும்! அப்போது பரந்தாமன் கோயிலில் நின்ற பெண்ணொருத்தியை அனுப்பியிருந்தான். பரிமளத்தை அழைத்து வரும்படி, உடனே பரிமளம் எழுந்து கோயிலுக்குப் போய்க் கணவருடன் வீடு சென்றாள். வீட்டுக்குப் போனதும் ஓடிச் சென்று மட மட எனத் தண்ணீர் குடித்துத் தாகம் தீர்த்தாள். அங்கு எங்கு வெளியில் சென்றாலும் போத்தலில் தண்ணீர் கொண்டு செல்வது வழக்கம். அன்று சிறுபோத்தலைக் காணவில்லையென்று தண்ணீர் கொண்டு போகவில்லை, அவளது போதாத காலம்!

ஆண்டி அரசனானால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பானாம்! பொன்னாடை போர்த்தப்பட்டதால் யாரையுமே தெரியவில்லை!

## 26. இலட்ச (ண) வீடு

பெரிய கயிட்டப்பட்டு மிகுந்தன் வீடொன்று வாங்கி விட்டானாம்! ஊரில் தற்போது எல்லோரும் பரபரப்பாகக் கதைத்துக் கொண்டார்கள்! அது ஒரு புதினம் தான் மிகுந்தன் தனது அக்கா வீட்டில் தான் கடைசி காலம் போயிருக்கலாம் என்று நினைத்திருந்தவன், அக்காவும் சிலசமயம் ஆசை (!) வார்த்தை கூறி மகிழவைச்சிருப்பா! ஆனால் அவவன்னிக்குப் போனவ,

கொடி நாட்டவென்று, பின்னர் பரமபதம் அடைந்து விட தம்பி மிகுந்தன் தனித்துப் போய், புத்தி சொல்லி வழிப்படுத்த யாருமில்லாது நிலை தடுமாறிப் போனான்!

அக்கா இருந்திருந்தால் எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிக் கொடுத்திருப்பா, ஏனென்றால் அவ நேரகாலத்தோடு 'புத்தி ' அறிஞ்சிட்டா! மிகுந்தன் வீடு வாங்கினது வாங்கினதுதான், 'கொமட்' வசதியில்லை. வயது போன காலத்தில், அது தேவைதானே! அதைவிட குளியலறைக்கும், கழிவறைக்கும் ஒரே பாதை, கதவு இரண்டு. ஒருவர் குளிக்கப்போனால், மற்றவர் கழிவறைக்குப் போக முடியாது! 'கொமட்' தனித்துப் புதிதாகக் கட்டவென்றால் செலவு கூடவரும். குளியலறைக்குள் 'கொமட்' வைத்து அடுத்த கழிவறையைத் தனிமைப்படுத்தி வெளியே கதவு வைப்பது என்று ஏற்பாடு அதைவிட குளியலறைத்தண்ணீர் அடுத்த அறையைத்தேடி ஓடுகிறது! அதைக் கட்டுப்படுத்தவும் அறையைச் சிறிது பெரிதாக்க வேண்டும். அதையும் விட ஓட்டோவுக்கும் ஒரு 'வீடு' கட்ட வேண்டும் மழை வெய்யில் என்று அதுவும் பாவம் தானே!

வேலைகள் தொடங்கின. டொங் டொங் என இடிப்பதும் கட்டுவதுமாக அமர்க்களப்பட்டது. மிகுந்தன் வீடு, அதை விடச் சமையல் அறையில் அடுப்பு இருந்தது. ஆனால் விறகு வைத்து எரித்தால் வீடெல்லாம் கரியாகுமென்று அடுப்பைச் சிறிது இடித்துவிட்டு அதில் குக்கர் வைக்கப்பட்டது. இதுகில் பார்க்க வாடகை வீட்டில் இருப்பது மேலாகத் தோன்றியது. வேலை தொடங்கி இரண்டு வாரமாகியது. இன்னும் முடிந்தபாடில்லை. வேலைகாரர் போய்விட்ட பின் தான் கழிவறைப்பக்கம் போகவேணும்!

மிகுந்தனின் மனைவிக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. லட்சக் கணக்கில் பணம் கொடுத்து வீடு வாங்கி மிச்சசொச்ச வேலையும் செய்யக்கிடக்கு. ஒழுங்காய் ஒருவீட்டை வாங்கத் தெரியாது இந்தமனுசனுக்கு, என்று மனைவி ராணி பொரிந்து கொண்டிருந்தாள்.

என்னப்பா! புறுபுறுக்கிறாய்? உன் பாட்டிலை என்று கேட்டான் மிகுந்தன் இல்லை, இந்த வயது போன காலத்திலை நான் வேலை செய்ய வேண்டிக்கிடக்கு, வேலைக்காரருக்குத் தேத்தண்ணி, சாப்பாடு, குப்பை கூட்டுகிறது என்று எனக்கு ஏகப்பட்ட வேலை, உங்களுக்கென்ன? மேசையிலை சாப்பாடு வரும் சாப்பிட்டால் சரி. எனக்கு அப்படியில்லையே!

வீடுவாங்கினது தான் ஒழுங்கான வசதியான வீட்டை வாங்கவில்லையே! அக்காவின்ரை புத்திமதி கேட்டு கெட்டுப்போனியள்,

எவ்வளவு நல்ல வசதியான வீடுகள் விலைப்பட்டது! நாங்கள் முன்பு இருந்த வீடு விலைப்படயிக்கை வாங்கியிருக்கலாமே? நான் கரைச்சல்பட்டால் எனக்குக் கோபம் வரும்தானே? என்றாள் ராணி.

சரி சரி விடு அக்காவின்ரை கதையைக் கேட்டு உன்னைச் சீரழிச்சுப்போட்டன், போனது போகட்டும், இன்னும் கொஞ்ச நாளிலை வேலை முடிஞ்சிடும். நிம்மதியாக இருக்கலாம என்று ஆறுதல் கூறினான் மனைவிக்கு மிகுந்தன்.

வேறென்னத்தைச் சொல்லப் போறியள்! சரி சாப்பிடுவம் வாருங்கோ என்றாள் ராணி.

# 27. முட்டைப்பெட்டி

அன்று யாழ்ப்பாணம் போக வேண்டியிருந்தது யாழினிக்கு. ஓட்டோவுக்கு டெலிபோன் பண்ணிவிட்டு உடைமாற்றி ஆயத்தமாயிருந்தாள். உடுப்பு மாற்றிக்கொண்டால் அவளுக்கு இருப்புக் கொள்ளாது. உடனே வெளியேறி விடவேண்டும். அது அவள் குணம். மற்றவர்களும் அப்படித் தான் இருப்பார்களோ? தெரியவில்லை. நேரம் போய்க் கொண்டிருந்தது. அதோ வந்துவிட்டது ஓட்டோ! காலில் செருப்பை மாட்டிக் கொண்டு ஓட்டோவினுள் நுழைந்தாள். போகும் போது வழியில் வெள்ளரிப்பழம், பனை ஓலையில் சுற்றப்பட்டு விற்பனைக்கு இருந்ததைப் பார்த்தாள். ஒன்று வாங்க வேண்டும் பின்னர் திரும்பி வரும்போது என்று நினைத்துக் கொண்டாள்.

சிறுவயதில் வல்லிபுரக்கோயில் பக்கத்துத் தோட்டங்களில் வெள்ளரிப்பழம் ஞாயிற்றுக்கிழமைகளில் வாங்கி வருவது வழக்கம். வீட்டில் பாணி பானை நிறைய இருக்கும். தொட்டுச் சாப்பிட்டால் அதன் சுவை தனியே தான்! தற்போது பனைகள் எல்லாம் மனிதர்கள் அழித்தபோது அவையும் அழிந்தன. "நுங்கு வெட்டக்கூடாது" எனற சட்டம் வந்துவிட்டது! நுங்கு குடிக்க வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது என் செய்வோம் பராபரமே! என்றிருக்க வேண்டியதுதான், அலுவல் முடிந்து திரும்பி வரும்போது வெள்ளரிப்பழம் ஒன்று வாங்க வேண்டும் என்று டிறைவரிடம் கூறினாள். உடனே ஒடடோவை நிறுத்தி பழத்தின் விலையைக் கேட்டார். எழுபது ரூபா என்று கூறியபோது ஐம்பது ரூபா கொடுங்கோ என்றார். இல்லை, எழுபது ரூபாதான் குறைக்க முடியாது என்றான் வியாபாரி. சரியென்று யாழினி எழுபது ரூபா கொடுத்து வாங்கிக் கொண்டாள். அடுத்து தோடம்பழம் வாங்க வேண்டும் என்ற போது வரும் வழியில் அப்பிள்

தெரிந்தது. அதுவும் வாங்கத்தான் வேண்டும் இரண்டு. அருகே தோடம்பழம் காணவில்லையென்று ஓட்டோ ஓடியது! சரிபோகட்டும் பின்பு பார்த்துக் கொள்வோம் என்று நினைத்துக் கொண்டாள் யாழினி. எப்போதாவது இப்படி வெளியே போனால் பழங்கள் வாங்குவாள். அவள் சுகமில்லாது இருந்தசமயம் இரத்தம் போதாது என்று அவளுக்கு இரத்தம் ஏற்றினார்கள். எப்போதாவது யாழினி பழம் சாப்பிட்டதைக் கண்டால் வீட்டிலுள்ளது சொல்லுது, பென்சன் பணம் எடுத்துத் தோடம்பழம் தின்னுது என்று, வயிறு எரியிது போலை அதுக்கு! தானும் வாங்கிச் சாப்பிடலாம் தானே பென்சன் காசிலை, யாரும் சாப்பிடுவதைப் பார்த்து வயிறு எரியிது. கண் காணாமல் தான் இனிச் சாப்பிட வேணும் என்று யாழினி நினைத்துக் கொண்டாள்.

வீட்டுக்கு உடுப்பு மாற்றிவிட்டு சர்க்கரையுடன் வெள்ளரிப்பழம் சாப்பிட்டாள் வயிறு முட்ட! சிறிது நேரம் சென்றபின் தான் மதிய உணவு உண்டாள். பின்பு வெள்ளரிப்பழம் சுற்றிய ஓலையைப் பார்த்தபோது பேர்த்தியாரின் நினைவு வந்தது. எல்லாவிதமான பெட்டிகளும் இழைத்துத் தனக்குக் காட்ட வேண்டும் என்று முன்பு சொல்லியிருந்தாள். இன்று ஓலை கிடைத்துள்ளது. உடனே “முட்டைப்பெட்டி” ஒன்று இழைத்துப் பேர்த்தியாரை அசத்த வேண்டும் என்று யாழினி பெட்டி இழைக்கத் தொடங்கினாள். அதை எட்டு மூலைப்பெட்டியென்றும் கூறுவர் கீழே நான்கு மூலை மேலே நான்கு மூலை இருக்கும். கடதாசிப் பெட்டிகள் கிடைக்காத அந்தக் காலத்தில் அப்படிப் பெட்டி இழைத்து உள்ளே உமி போட்டு முட்டை அடக்கி மூடிப்பொத்தி விட்டால் அசல் “காட் போட் பெட்டி” மாதிரி தோற்றமளிக்கும்! அதுதான் முட்டைப்பெட்டி என்று பெயர் பெற்றது.

பேர்த்தியார் பாடசாலையில் இருந்து வந்து விட்டாள். உடனே பெட்டியைக் காட்டிப் பேரையும் விளக்கினாள் யாழினி. பின்பு கூறினாள் இதில் என்னுடன் சேர்ந்த கதையும் ஒன்று இருக்கு என்றாள் பாட்டியார் யாழினி.

என்ன கதை சொல்லுங்கோ என்று ஆர்வமானாள் பேர்த்தியார். அது என்னவென்றால் எனது அக்கா திருமணம் முடிந்து சினிமா முதன்முதல் பார்க்கப் போகிறா அத்தானுடன், அப்போது எனக்குப் பத்து வயது. நானும் வருகிறேன் என்று கூறவும் “டிக்கற்” காசு என்றாள் அக்கா, கொழும்புக்கு முட்டை கொண்டு போக எட்டு மூலைப்பெட்டி அக்காவைக்கு இழைத்துக் கொடுத்திருந்தேன் முதல் நாள், அதன் கூலிக்காசு ‘டிக்கற்றுக்கு’ என்றேன் படாரென்று! உண்மையில் நான் கூலிக்கு இழைக்கவில்லை, ‘டிக்கற்’காசு

கேட்டபடியால் தான் அப்படிச்சொன்னேன் என்று சிரித்தாள் யாழினி. படத்தின் பேரென்ன தெரியுமோ? வாழ்க்கை! வாழ்க்கையைத் தொடங்கப் போகும் அக்கா பார்த்த முதல் படம் "வாழ்க்கை" எப்பிடி? நானும் அக்காவும் முதல் பார்த்த படம் அதுதான். இந்தப் பெட்டியை இழைத்த போது அந்தப்படம் நினைவுக்கு வருகிறது என்றாள் யாழினிப்பாட்டி.

அப்போ பத்து வயதில் பெட்டி இழைத்து காசு சேர்த்திருக்கிறீர்கள் டிக்கற் செலவுக்கு! நீங்கள் கெட்டிக்காரிதான்! என்று பாட்டியாரைப் புகழ்ந்தாள் பேர்த்தியார்.

## 28. கேட்கவேமாட்டார்

தர்மி வேறு வீட்டுக்கு இடமாற்றம். 1965 ஆண்டு தொடக்கம் 2013 வரை வீடு மாறிக் கொண்டும் இடையே ஊர் மாறிக் கொண்டும் இருக்கிறாள். கணவன் கோகுலனின் வேலை காரணமாக, இதுவரை மூன்று ஊர்களும் ஏழு வீடுகளும் மாறிவிட்டாள்! எந்த வீடு மாறினாலும் பூங்கன்றுகள், தவசி முருங்கை, பசளி, கொடித்தோடை, குறிஞ்சா, கற்றாளை, வெண்டி, பயற்றை என்று ஒவ்வொரு வீட்டிலும் நாட்டி விடுவாள், ஏன் கரணைக்கிழங்கு, சோளம் என்றும் மிளகாய்க்கன்று என்றும் நாட்டிவிடுவாள்.

அவைகளைப் பார்த்துப் பரவசப்படுவாள். தண்ணீர் விடாமல் வாடியிருந்தால் அவள் மனம் வாடிவிடும்! உடனும் தண்ணீர் விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாள், பூனை குட்டிபோட்டால் ஏழு இடத்துக்குக் காவுமாம், அதுபோல் நாமும் ஏழுவீடு மாறிவிட்டோம்! இனியாவது ஒரேவீட்டில் இருக்கப் பார்ப்போம்! என்று பேர்த்தியார் அனுசா கூறினாள் சிரிப்புடன், அதுவும் சரிதான் என்று கோகுலனும் தர்மியும் வீடொன்று வாங்கினர். தெருவில் நின்று பார்த்தால் மாடமாளிகை போன்று தோற்றம் அளிக்கும். கோப்பி, தென்னை, மா, பலா, நித்தியகல்யாணி, நந்தியாவட்டை என்றும் இன்னும் பல பூங்கன்றுகள் கண்ணுக்கு விருந்தளித்தன. அத்துடன் தர்மி கொண்டு சென்ற பூச்சாடிகளும் சேர்ந்து பூஞ்சோலையாக கண்களைக் கொள்ளை கொண்டன.

பூங்கன்றுகள் பராமரிப்பாளன் என்று ஒருவன் வந்தான். நித்தியகல்யாணிக்கு மொட்டை அடித்தான். தோடையை ஒரு பகுதி வெட்டித் தீர்த்தான். வல்லாரையை அப்படியே வழித்தெறிந்தான்! ரோசாக் கன்றுகளுக்கு "குறொப்" அடித்தான்! பூச்சாடிகளை அங்கும் இங்கும்

நகர்த்தி வைத்தான். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருந்த தர்மிக்கு, வல்லாரையை வழித்தெறிந்தது மனசை எரியச் செய்தது. எப்போதும் பச்சைப் பசேல் என்று செழித்து வளர்ந்திருந்த வல்லாரை உணவுக்குச் சத்தாகவுள்ள அந்த இலைகளைப் பார்த்துப் பெருமூச்சு விடத்தான் முடிந்தது. அதுமட்டுமா? அருகே நின்ற துளசிச் செடி கண்ட துண்டமாக வெட்டப்பட்டது. இச்செடிகளின் அருமை பெருமை தெரியுமா? பூங்கன்றுகள் வைக்கலாம், அதற்காக அநியாயமாகச் செடிகளை வெட்டி எறிவதா? மருமகளின் காதுபடச் சொன்னால், “கிழம் பேசாமலிருக்க மாட்டுது” என்ற வசவு தான் கிடைக்கும்! இன்றோ நாளையோ என்றிருக்கும் எனக்கேன் வீண்வம்பு? என்று தர்மி மௌனமானாள், மனதுள் கழுதை அறியுமோ கற்பூர வாசனை? என்று எண்ணிக் கொண்டாள்.

## 29. அங்கேயுமா!

தவநீதம் மதியம் சாப்பிட்டுவிட்டு ஓய்வாக இருந்தாள். ஏதாவது படிப்போமே என்று புத்தகம் எடுத்த போது, அது 16.07.2006ம் ஆண்டு ஆனந்தவிகடன். அதில் சுவாரசியமான, உண்மையான அதாவது அதிகமான குடும்பங்களில் நடக்கும் கதை எழுதப்பட்டிருந்தது. பாக்கியம் ராமசாமி.

அதன் தலைப்பு தேடுங்க... தேடுங்க..... தேடிக்கிட்டே இருங்க!

அடிக்கடி காணாமல் போகும் (ஆனால் அடிக்கடி கிடைத்து விடும்) பொருள்களில் மூக்குக்கண்ணாடிக்கு முதலிடம். அதிகமான கணவன்மார்கள் அதாவது கொஞ்சம் மறதியுள்ளவர்கள் தங்கள் கண்ணாடியைத் தேடி எடுப்பதற்கு மனைவியிடம் கூறுவார்கள். தாங்கள் தேடி எடுக்கும் வழக்கம் கிடையாது! அப்படித் தேடுவது ஆண்டகைகளுக்கு இழுக்கல்லவா? வீட்டுவேலைக்காரி (மனைவி) இருக்கிறாளே! டி.வி.யில் சுவாரசியமாக மனைவி மூழ்கியிருக்கையில் கண்ணாடி தேடடி! என்றால் எப்படியிருக்கும் என்பது பெண்களுக்குப் பெரும் இம்சையாகும்.

தவநீதம் அந்தச் சுவையான கதையை ரசித்துப் படித்தபோது அவளுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை! ஏனெனில் அவளும் அப்படியான இம்சைகளில் சிக்குப்பட்டவள் தான். இப்போது கணவன் இல்லை மறு உலகம் போய்விட்டான்! ஆனந்தமாக டி.வி பார்க்கிறாள். ஒருசமயம் அவள் கணவனிடம் அலுவலாக வந்தவர். வேலை முடிந்து கணவனின் கண்ணாடியைத் தவறுதலாக எடுத்துத்தன் ‘சேட் பொக்கற்’ றில்

வைத்துவிட்டார், கணவர் தன் கண்ணாடியைக் காணவில்லையே என்று பார்த்த போது வீட்டுக்கு வந்தவரின் 'சேட் பொக்கற்' றில் குந்தியிருப்பதைக் கண்டார்! இது.... என்று கூறவும் நண்பரும் தன் தவறை உணர்ந்து கண்ணாடியை எடுத்துக் கொடுத்தார்.

இன்னொரு சமயம் தவநீதம் பத்திரிகை படிப்பதற்காகக் கண்ணாடியைத் தேடிக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கிடைக்கவில்லை. எப்படிக் கிடைக்கும்? அவள் தான் முன்னமேயே கண்ணாடி அணிந்து கொண்டிருந்தாளே! இருந்தாற்போல் கண்பக்கம் தடவிப்பார்த்தாள், ஐயோ! கண்ணாடி போட்டுக் கொண்டு கண்ணாடியைத் தேடுகிறேன் என்று மனதுள் சிரித்துக் கொண்டாள். அவளின் அண்ணன் ராசாவும் ஒரு சமயம் குளிக்கப் போனவர் கண்ணாடியைக் கழற்றிப் பக்கத்துத் தொட்டிக்குள் வைத்துவிட்டுக் குளித்தார். குளித்து முடிந்து வீட்டினுள் வந்து சில நிமிட நேரத்தின் பின் கண்ணாடியைத் தேடும் படலம் ஆரம்பமாயிற்று! எங்கே வைத்தது என்பது மறந்து போயிற்று. தேடி அலுத்து சில நிமிடம் மௌனமாக யோசனை செய்ததில் ஞானம் உண்டாகி கிணற்றடித் தொட்டியில் இருந்து கண்ணாடியை எடுத்து வந்தார்! தவநீதத்திற்கு இந்தத் 'தேடுதல்' என்பது ஓர் தலையிடியைக் கொடுக்கும் விடயம். அதற்காக அவள் பொருள்களை எடுத்தால் அந்தந்த இடத்திலேயே வைத்து விடுவது வழக்கம். அவளின் கணவன் கிசாந்தனும் தேடல் வைப்பதில் வலு கெட்டிக்காரன்! இந்த டி.வி. பார்த்துக் கொண்டிருந்த போது பல கணவர்கள் செய்யும் இம்சையினால் பெரும் சண்டை சச்சரவுகளும் நடந்திருக்கின்றன. ஏன் கொலையும் நடந்திருக்கிறது.

பாக்கியவதி என்னும் பெண் 'உத்தமக் கணவன்' என்னும் நாடகம் பார்ப்பது வழக்கம். அவன் எப்படியிருப்பான் என்று அறிய ஆவல் அவளுக்கு! அவள் கணவன் பாக்கியநாதன் உச்சக் கட்ட கோபத்தில் நாடகத்தின் உச்சக்கட்டம் பார்த்துக் கொண்டிருந்த மனைவி பாக்கியவதியின் மீது கதிரையைத் தூக்கி எறிந்தான். எதிர்பாராத விதமாய் கதிரையின் கால்கள் மனைவியின் கழுத்து நரம்பில் தாக்கியது ஐயோ! என்ற குரலுடன் பாக்கியவதி சரிந்தாள். உயிர் பிரிந்தது.

போலீசு விசாரணை, வைத்திய அதிகாரி அறிக்கை, நீதிமன்றம் என்று செயற்பாடுகள் நடந்தன. திட்டமிட்ட கொலை அல்ல, என்பதால் ஆயுள் தண்டனை என்று தீர்ப்பானது. பாக்கியநாதன் ஒவ்வொரு கம்பியாக எண்ணிக் கொண்டிருக்கிறான் சிறைச்சாலையில்!

வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் பெண்கள் மன ஆறுதலுக்காக டி.வி பார்த்தால் அதைத் தடை செய்வது வரவேற்கக் கூடிய விடயமே அல்ல என்பதை ஆண்கள் சிறிது.....உணர்ந்தால் போதும், இல்லறம் நல்லறமாகும்.

பாக்கியம் ராமசாமி எழுதிய சிறுகதைக்குப் பரிசு கொடுக்கலாம் என்று மனதுள் கணக்குப் போட்டாள் நவநீதம்.

## 30.நடந்ததும் நடப்பதும்

பலவருடங்களின் பின் பரசுராமன் வெளிநாட்டிலிருந்து தனது தாய்நாட்டுக்கு வந்திருந்தான். மனதில் குதூகலம்! இருக்காதா பின்னே, மனைவி பிள்ளைகள் சுற்றம் என்று எவ்வளவு ஆவலிருக்கும்? தான் சிறுவயதில் ஓடி ஆடி விளையாடிய இடங்கள் போரின் பின் யாழ்குடாநாடு எப்படி என்றெல்லாம் ஓடி ஓடிப் பார்க்க வேணுமே!

தான் வேலை செய்த அபிதாபி நாட்டில் இருந்து நிறைய உணவுப் பொருட்கள் வாங்கி வந்திருந்தான். வெளிநாட்டில் இருந்து வரும் அநேகம் பேர் கொழும்பில் இருந்துதான் துணியோ, சாமானோ வாங்கி வந்து வெளிநாட்டுச்சாமான் என்று கொடுப்பர்!

பரசுராமனிடம் தாயார் தனனி கேட்டாள், ஏன் தம்பி! இதெல்லாம் அங்கே இருந்து வாங்கி வந்தனி? இங்கேயே வாங்கலாம் தானே? என்று,

அங்கே சாமான்கள் எல்லாம் மலிவு அம்மா! என்றான் பரசுராமன். தனனிக்கு உள்நாட்டு விலை விபரமே தெரியாது, கணவன் தனராம் தான் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கிப் போடுவான். கணக்குத் துண்டை மனைவியிடம் கொடுத்துவிடுவான். மனைவி கணக்குத் துண்டைக் குப்பைப் பெட்டியில் போட்டுவிடுவாள்! தான் கணக்கு வழக்குப் பார்த்து என்ன பிரயோசனம் என்றுதான்!

பரசுராமன் தாய் வீட்டுக்கு வந்து நின்றபொழுது அரிசி, பருப்பு, கடலைமா, பால்மா என்று பலதும் வாங்கிப் போட்டான், அப்பன் வானுலகம் சென்று வருடமாகிறது. பென்சனும் உடனும் கொடுக்கமாட்டான்கள் என்று பரசுராமன் நினைத்தே எல்லாம் வாங்கினான். அம்மா கரைச்சல்படாமல் இருக்கட்டும் என்று, தாயார் தனனி கொஞ்சம் கடலை எடுத்தாள் நனைய விட்டு அவிப்போம் எல்லாரும் சாப்பிடலாம் என்று அப்போ இளைய மகள் விமலா பார்த்துவிட்டு ஏன் உது? அவிச்சு வைச்சு பழுதான பிறகு எடுத்துக் கொட்டவே? நீர் நடவும் என்று கடலை நனையவிடாமல் தடுத்தாட் கொண்டாள்!

தனனி எதுவும் பேசாமல் வெளியே சென்று அமர்ந்து கொண்டாள். இப்படியும் ஒருகாலம் ஆச்சு எனக்கு என்று மனதுள் பொருமினாள். அது பற்றி மகனிடம் கூட ஒன்றும் கூறவில்லை. அப்பன் போன பின்பு வீட்டு நிர்வாகம் தன் கையில் என்னும் எண்ணத்தில் இருந்தாள் விமலா. கிழத்துக்கு எதையாவது சாப்பிடக் கொடுத்தால் சரி என்று எண்ணினாள் போலும்,

மகனும் லீவு முடிந்து அபிதாபி சென்றுவிட்டான். விமலா தொடர்ந்து சம்பா அரிசி சமைத்தபோது, உது நெடுகவும் தொடர்ந்து சாப்பிட்டால் பித்தம், கஞ்சி வடிக்கவுமில்லை, மஞ்சள் தூளும் போடுவதில்லை என்று தனனி கூறியதைக் கேட்டு விமலா ஒரேமுறையில் குத்தரிசியை நிறையப் போட்டு அவித்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விட்டாள்! கிழம் சுடவைத்துச் சுடவைத்துச் சாப்பிடட்டும் என்று, அத்துடன் கச்சல் கறியும் மூன்று நாட்களுக்கும் சேர்ந்து! உவாய்க்!! பசியில் ஒருநாள், இருநாள் என்று சாப்பிடலாம். பின்னர் யோசித்தாள் அவியாத சோற்றை முழுங்கவும் முடியவில்லை. இன்று சோறு சமைப்போம் நல்ல கறியும் வைத்துச் சாப்பிடுவோம் என்று சமைத்துச் சாப்பிட்டாள். அதன்பின் விமலா கிழத்தின் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை! அதுவும் நல்லதுக்குத்தான் இனி விருப்பமான உணவைச் சமைத்துச் சாப்பிடலாம். வேறென்ன, ஒருதொகைப் பணத்தைக் கொடுத்துவிட்டேன். இரண்டு வருடச் சாப்பாட்டுக்கு என்று, பரவாயில்லை, இரண்டு வருடத்தில் நானும் மேலே போய்விடுவேன் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பது திருவாக்கு. அதுதான் கீதை!

கிருட்ணரின் உபதேசங்கள் எப்படி எல்லாம் விளையாடுகிறது நமது வாழ்க்கையில்! கடமையைச் செய் பலனை எதிர்பாராதே, எப்படியொரு தெளிவான வார்த்தை. மனித குலத்திற்கு எத்தனையோ சிறந்த அறிவுரைகள் காலத்திற்குக் காலம் அருளப்பட்டு வருகின்றது. ஆனால் மனிதர்கள் அவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்களே? தனனியின் மனதில் எண்ண ஓட்டங்கள் அலை பாய்கின்றன. எல்லாம் நன்மைக்கே! என்று மறுபடியும் அவள் வாய் முணுமுணுக்கிறது!

# 31. இரண்டு (செகிடுகள்) செவிடுகள்!

அன்று காலை நேரம் எட்டுமணியிருக்கும். நிலா பிள்ளைகளுடன் வெளியேறினாள். கேற் பூட்டிவிட்டு, பின்பக்கம் சென்றிருந்த அவளின் தாயார் நிர்மலா மெல்ல மெல்ல நடந்து வந்தாள் முற்றத்திற்கு. தாயார் தனியே இருப்பதால் கேற் பூட்டிவிட்டுச் சென்றிருக்கிறாள் நிலா, எங்கு போகிறார்களோ? பொலிதீன் 'பாக்'குகளுடன் என்று யோசனை செய்தாள் நிர்மலா,

ஒருவர் போகும் போது, எங்கே? என்று கேட்கக் கூடாது என்றும், போகும் இடம் சொல்லக்கூடாதென்றும் ஒரு சம்பிரதாயம் உண்டு! அதனால் நிர்மலா எதுவும் கேட்பதுவும் இல்லை. நிலா ஏதும் சொல்வதும் இல்லை. இரவு எட்டுமணி. நிர்மலா ரி.வி பார்த்துக் கொண்டிருந்தாள் ரெலிபோன் கிறிங் கிறிங் என்றது நிர்மலா எடுத்து கலோ என்றாள்.

நான் நிலா கதைக்கிறேன். இரவு வீட்டுக்கு வரமாட்டன், நல்லூரில் நிற்கிறேன் என்றது எதிர்க்குரல். ஆ சரி என்று விட்டு நிர்மலா போனை வைத்து விட்டாள். இப்போ எங்கும் திருமணங்கள் மணந்து கொண்டிருந்தன! நிலாவின் நண்பிகள் வீட்டில் ஏதும் விசேசமோ என்னவோ? நிலா 'மேக் அப்' எல்லாம் செய்யத் தெரிந்தவள். அதுதான் நேரகாலத்தோடு போனாளோ? இப்போ விதவிதமான ஒப்பனைகள், பணத்திற்கு ஏற்றமாதிரி ஐந்து, பதினைந்து என்று முப்பதாயிரம் வரை உண்டு.

ஓர் திருமண வீட்டில் திருமணம் முடிந்து மறுநாள் காலையில் மணமகள் முகம் கழுவிட்டு வந்தபோது அவளைப் பார்த்த கணவன், ஐயோ! தங்கையைப் 'பெண்' என்று காட்டிவிட்டு இப்போ தமக்கையை அல்லவா திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள்? என்று மாப்பிள்ளை கூறினானாம்! 'மேக்' அப்' செய்த கூத்து அது!!

இனி என்ன செய்வது? சேர்ந்து வாழவேண்டியது தான். இது பரவாயில்லை. இதுக்கு மேலாக முடிந்த மறுநாள் காலை மணமகனின் அறைக்குள் ஓர் ஆடவன் நின்றான். நீ யார் தம்பி? என்று கேட்டபோது நான் உங்கள் மனைவி தெரியவில்லையா! என்ற குரல் கேட்டது.

ஆமாம், தலை மொட்டை, டோப்பா போட்டது, பல்லும் இல்லை, பல் செற் கொழுவியது! மாப்பிள்ளைக்கு 'கறன்ற்' அடித்தமாதிரி!

நிர்மலா நினைத்தாள் நிலா காலையில் வந்துவிடுவாள் என்று, மாலை ஐந்து மணியாகியும் வரவில்லை. அப்போது முன்வீட்டு முத்துநாயகி

'கேற்' றுக்கு வெளியே நின்று அழைத்தாள் நிர்மலாவை, எழுந்து போய், என்ன விடயம் என்று கேட்டபோது, அந்த முன் ஒழுங்கை வீட்டில் இருந்து வந்தவராம் திருமணக் 'காட்' தரவென்று கேற் பூட்டியிருக்கு என்று திரும்பிப் போய் விட்டராம். நான்கு தடவை வந்து போனவராம் என்னிடம் கூறினார் அப்ப நாளைக்கு ஒரு ஒன்பது மணி போலப் போவம் என்று கூறிவிட்டு இணுவில் கோயில் மண்டபத்திலையாம் தாலிகட்டு, பன்னிரண்டு மணிக்கு என்றாள் முத்துநாயகி.

அப்போ நீங்கள் இணுவிலுக்குப் போவியளா? என்று கேட்டபோது, இல்லை நான் போகயில்லை, வீட்டை மட்டும் போய் வருவம் என்ற முத்துநாயகியிடம், வீட்டுக்கு எத்தனை மணிக்குத் திரும்பி வாறது என்று கேட்டாள் நிர்மலா.

பத்துமணி போலத் திரும்பி விடலாம் என்று பதில் கூறிவிட்டு நடையைக் கட்டினாள் முத்துநாயகி.

மறுநாட்காலை ஏழு மணியளவில் ஒட்சைப்போட்டு அவிய விட்டுக் கஞ்சியாகக் குடித்துவிட்டு சிறுகோப்பியும் குடித்து மருந்தும் சாப்பிட்டுவிட்டுத் திருமண வீட்டுக்குப் போவதற்கு ஆயத்தம் செய்தாள். முதலாவதாகக் கொண்டை போட்ட பின்னர் முகத்திற்கு கிறீமும், பௌடரும் போட்டுக் கொண்டாள். தலையில் சிறிது நரை மயிர் தெரியும்படி சின்னதொரு பூச்சு! நிர்மலாவின் பேர்த்தியார் சைனு பாட்டியாரின் ஒப்பனைகளைப் பார்த்து விட்டு நீங்கள் சரியான 'ஸ்ரைல்' என்று கூறிச் சிரித்தாள்!

உனது அம்மா வாங்கித் தந்த கிறீம், பௌடர் என்று, அதைத்தானே போடுறன். நான் வாங்கினேனா! என்று பாட்டியார் புன்சிரிப்புடன், இந்த உரையாடல் முன் எப்போதோ நடந்தது. இப்போ நிர்மலாவின் மனதில் நீந்தியது! ஒப்பனை முடிந்தவுடன் உடை மாற்றினாள். சட்டையை எடுத்துப் போட்ட போது அளவாயிருந்தது. சில சட்டைகள் கை தளர்வாயிருக்கும்! ஏனெனில் இப்போது வயது போய் மெலிந்திருந்தாள். நல்ல வேளை அளவாயிருக்கு என்று மகிழ்ச்சியுடன் அணிந்து விட்டு வெளியே வந்து அமர்ந்து கொண்டாள் 'கேற்' றைப் பார்த்தபடி முத்துநாயகி வருகிறாவா? என்று மழை பெய்து கொண்டிருந்தது. அதனால் போகும் போது கேற் திறப்போம் என்று நினைத்துக் கொண்டாள் நிர்மலா.

முத்துநாயகிக்கு இரண்டு பெண் பிள்ளைகள் வீடு. இரண்டு வீட்டுக்கும் மாறி மாறித் திரிவார். நிர்மலா பார்த்துக் கொண்டிருந்தபோது முத்துநாயகி இரண்டு தடவை மாறி மாறிப் போனாள். நேரம் ஒன்பது அரை

என்றது மணிக்கூடு.

அவபோய் விட்டாபோல, 'கேற்' பூட்டியிருக்கென்று, நினைத்த நிர்மலா உடையை மாற்றி விட்டு "சோட்டி" போட்டுக் கொண்டு கடலையை அவிய விட்ட போது தங்கச்சி! என்று குரல் கேட்டது. முத்துநாயகியும் மகளும் திருமண வீட்டுக்குப் போக ஆயத்தமாய் நின்றனர். 'கேற்' திறந்து விட்ட நிர்மலா, நீங்கள் போய்விட்டீர்கள் என்று நினைத்து இப்போ தான் உடுப்பு மாற்றினேன் என்று கூறவும் சரி வெளிக்கிட்டு வாருங்கோ, நாங்கள் இருக்கிறம் என்றாள் முத்துநாயகி.

நிர்மலா உடனும் உடுப்பு மாற்றியபடி வெளியே வந்து அவர்களுடன் வீட்டுக்குப் போனாள். வழியெல்லாம் மழைத்தண்ணீர் தேங்கி நின்றது. அருகே இருப்பவர்கள் கொஞ்சம் கல்லு, மண்போட்டு பாதையைச் சரிசெய்யலாமே? அது செய்யமாட்டார்கள். அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் கொண்டு மழைத்தண்ணீரில் நீந்துவர்! திருந்தவே மாட்டார்கள்.

திருமண வீட்டுக்குப் போனதும், இட்லி, சாம்பார் தட்டில் போட்டு கொண்டு வந்தனர். நிர்மலா கூறினாள், நான் மருந்து சாப்பிடுவதற்காக நேரத்தோடு சாப்பிட்டு விட்டேன். இவைக்கு கொடுங்கோ என்றாள். அவள் இனிமேல் சாப்பிடுவது என்றால் நண்பகல் ஒருமணிக்குத்தான்!

தேநீர் நீட்டியபோது எடுத்துக் கொண்டாள். நேரம் போய்க் கொண்டிருந்தது வீட்டில் ஒருவருமில்லை. இப்படியான தருணங்களில் தான் கள்வரின் அட்டகாசம் நடக்கும்! அதுவும் இப்போ உடும்பு, முயல் வேட்டை என்று தெருவழியே திரியிறான்கள். வீட்டுக்குப் போக வேண்டும் என்று எண்ணிய நிர்மலா, முத்துநாயகியிடம் கேட்டாள் நான் வீட்டுக்குப் போக வேண்டும் வருவீர்களா? என்று,

தாலிகட்டு பன்னிரண்டு மணிக்கு இணுவில் கோயில் மண்டபத்தில் நாங்கள் அங்கே போகிறோம் என்றாள் முத்துநாயகி.

அப்போ நான் கொடுக்க வேண்டிய பரிசுப் பெட்டியை இப்போ கொடுத்துவிட்டுப் போகட்டோ என்று கேட்ட நிர்மலாவுக்கு,

அது நாலாம் சடங்குக்கு பெண்ணும் மாப்பிள்ளையும் வீட்டுக்கு வருவினம் அப்ப கொடுங்கோ என்றாள் முத்துநாயகி. அப்ப சரி நான் போட்டு வருகிறேன் என்று கூறிய நிர்மலா பெண்ணின் தந்தையாரிடமும் விடைபெற்று நாளை வருவதாக கூறிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டுக்கு வந்ததும் மனம் நிம்மதியுற்றது.

நிர்மலா கேட்டது எத்தனை மணிக்கு வீடு திரும்புவது என்று

முத்துநாயகிக்குக்கும் காது செவிடு அவள் ஏதோ சொன்னாள் பத்துமணிக்கு (மண்டபத்துக்கு) வீட்டை விட்டு வெளிக்கிடுவது என்று, நிர்மலாவுக்கும் காது செவிடு! இரண்டு செவிடுகளும் சேர்ந்தால் எப்படியிருக்கும் என்பது இப்போது தான் புரிகிறதே!

## 32.புரியாமை!

பலவகை ஆமைகளில் இதுவும் ஒன்று. ஆனால் இந்த ஆமையைக் கண்களால் பார்க்க முடியாது! சமைத்துச் சாப்பிடவும் முடியாது!! புறியாணி என்று உணவு அதுமாதிரி இந்தப் 'புரியாமை' உணவாக இருக்குமோ? அல்ல,

ஒருவர் கூறினால் அதைப்புரிந்து கொள்ள முடியாது பலர் தவிக்கிறார்கள். அது ஏன் என்று தெரியவில்லை. அன்று ஆறுமுகநாதர் வீட்டில் திருமண விசேடம், பலரும் இப்போதெல்லாம் மண்டபங்களில் தான் எந்த விசேசத்தையும் வைத்துக் கொள்கிறார்கள். அதுவும் சுகம்தான். சாப்பாடு, கதிரை, இடவசதி என்று,

வீட்டுக்கு வந்தவர்களுக்கு காலை உணவு பரிமாறப்பட்டது. பின்னர் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் வாகனங்கள் மூலம். குருக்கள் அவர்கள் தனது வேடிக்கைகளைச் செய்து கொண்டிருக்க வீடியோக்காரர் தமது கட்டளைகளைப் பிறப்பித்து தள்ளி நில்லுங்கோ அப்படி நில்லுங்கோ மறையாதையுங்கோ என்று திருமணத்துக்கு வந்தவர்களை அதட்டித் கொண்டிருந்தனர்! பல கோணங்களில் படம் பிடித்தனர். முன் 'சீற்' பிடித்தவர்கள் தான் இடம்மாறிக் கரைச்சல்பட வேண்டி வந்தது! அதற்காகத்தான் நந்தா எங்கும் எப்போதும் மூன்றாவது 'சீற்' பக்கம் அமர்ந்து கொள்வது வழக்கம்.

ஒரு மாதிரித் திருமணம் முடிந்து நண்பகல் உணவு பரிமாறப்பட்டது. அதிகம் பேர், படைக்குப்பிந்து, பந்திக்கு முந்து என்ற வாய்ப்பாட்டின்படி முண்டியடித்து முன்னேறி முதல்பந்தியில் அமர்ந்து கொண்டனர்! பின்னர் இரண்டாவது பந்தி ஆரம்பமாயிற்று. நந்தா பார்த்துக் கொண்டிருந்தாள். இதுவும் முடியட்டும் என்று, அப்போது பெண்வீட்டுப் பையன் சாப்பிடக் அழைத்தான். பின்னர் சாப்பிடுகிறேன் என்று நந்தா கூறவும்,

உப்பிடியே நின்றால் பின்னர் சாப்பாடு முடிந்து விடும்! என்று சிரித்தார்.சரியென்று நந்தாவும் சாப்பிட உட்கார்ந்தாள் பதில் புன்னகையுடன், நண்பகல் உணவு முடிந்ததும் பெண்வீட்டுப் பக்கம் ஒருவாகனம் போவதற்கு

ஆயத்தமானது. அதில் இடம் கிடைக்கவில்லை நந்தாவுக்கு, அடுத்தவாகனம் மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்ல ஆயத்தமான போது அதில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் வாகனம் மாப்பிள்ளை வீட்டை அடைந்தது. அங்கு சோடாவும் சிற்றுண்டியும் வழங்கினர். அப்போது பெண்ணின் தந்தையார் கூறினார் 'சாப்பிடவேணும்' என்பதற்காகச் சாப்பிட்டு வயிற்றைப் பழுதாக்காதீர்கள்! என்று, அவர் ஓர் பேராசிரியர் டொக்ரரின் தந்தையும் ஆவர். அவர் சொல்வது சரி தானே? சிறிது நேரம் முன்புதானே நண்பகல் உணவு உண்டுவிட்டு வந்தது? அதன் மேல் சிற்றுண்டி சாப்பிட்டால் வயிறு ரொம்ப வருத்தப்படுமே!

ஆனால் சிலர் இருக்கிறார்கள் உள்ளே தள்ளிக் கொண்டேயிருக்கிறார்கள் பின்விளைவு பற்றி யோசிப்பதேயில்லை. நாம் உண்பதற்கே பிறந்துள்ளோம் என்று உள்ளே தள்ளியவர்கள் பின்னர் நோயினால் தாக்கம் அடைந்து, பெரும் அவத்தைப்படுகிறார்கள். நந்தாவின் நண்பி ஒருத்தி திருமண வீடொன்றில் சாப்பிடவில்லை, காரணம் அவளது உணவு, மரக்கறி அவியல், தானியவகை திருமண வீட்டுக்காரர் அப்பெண்ணை விசாரித்தார் சாப்பிடாயிற்றா? என்று பரிமாறியவர் கூறினார். அவ சாப்பிடவில்லை என்று,

அப்போது விட்டுக்காரர் கூறினார், நான் முன்பு தங்களின் வீட்டில் சாப்பிட்டேனே என்று,

நான் சாப்பிடவில்லையென்று வருத்தம் போல் தெரிகிறது. சிறிதுநேரத்தில் சாப்பிடுகிறேன் என்று கூறிவிட்டுப் பெண் சாப்பிடச் சென்றார். கறிவகைகளைச் சாப்பிட்டார் ஒருபிடி சோற்றுடன், சோறு சாப்பிடவில்லையே? என்று அருகில் இருந்தவர் வினாவிய போது தனது நிலையைக் கூறிவிட்டு எழுந்தாள்.

'சாப்பிடவில்லை' என்றால் குறை நினைக்கிறார்கள், அதனால் சாப்பிடுவது போன்று கறிவகையாவது சாப்பிட்டு மற்றவர்களை மனநிறைவடையச் செய்ய வேண்டியது தான்! இதுதானப்பா புரியாமை!!

சிலர் தேநீர் சீனி போட்டுக் குடிக்க முடியாது, நோய் அப்படி, தேநீர் குடிக்கவில்லை என்று குறைபடுபவரும் உண்டு! அப்பப்பா! 'அறியாமை' என்றும் இருக்காமே!!

இந்த ஆமைகளையெல்லாம் பிடித்து, 'பொறாமை' யும் இருக்காமே! அதையும் பிடித்து ஒன்றாகக் கொண்(ன்)று போய்க் குளத்தில் விட்டு விடவேண்டும்!

# 33. காந்தம் இழுக்கிறதா?

தயாவதி சிலபொருட்கள் வாங்கவேண்டும் என்று கடைக்குப் போக யோசனை செய்தாள் சில நாட்களாக, முக்கியமாக நொன் வ்வாற் அங்கர் தேவை, ஒருவாரமாக வெறும் தேநீர்தான். நாளைக்கு, நாளைக்கு என்று வாங்காது கடத்திக் கொண்டே போனால் உடலில் பலவீனம் ஏற்படும். இன்று எப்படியும் போய் வாங்கி வரவேண்டும். அப்படியே ரோகினி வீட்டுக்கும் ராசுநாயகி வீட்டுக்கும் போய் வரவேண்டும் என்று நினைத்த தயாவதி உடைமாற்றினாள். முதலில் ரோகினி வீட்டுக்குப் போனாள் வாசலில் வாகனம் நின்றது. ஓ! ரோகிணியின் மகன் உள்ளே இருக்கிறார் போல, திரும்பி ராசநாயகி வீட்டுக்குப் போய் விட்டு வருவோமா என்று யோசனை செய்தபோது கால்கள் கெஞ்சின, சிறிது இளைப்பாறி விட்டு போகலாமே? என்று,

காலின் கெஞ்சல் தயாவதியின் மனத்தை இளகச் செய்யவே ரோகிணியின் வீட்டுக்குள்ளே போனாள், ரோகிணியின் மகன் தயாவதியைப் பார்த்ததும் அடுக்கி வைத்த கதிரையொன்றை எடுத்துப் போட்டு விட்டுத் தாயாரிடம் கூறினான் தயாவதியின் வருகையை. சமையலறைப்பக்கம் இருந்து வந்த ரோகிணி, கொஞ்சம் இருங்கோ! வருகிறேன் என்று கூறிவிட்டு உள்ளே போனாள்.

ஓ! இப்போ சாப்பாட்டு நேரம் நான் இருப்பது சரியல்ல, மகன் சாப்பிட்டபின் தாயும் சாப்பிடவேண்டும் நான் ராசநாயகி வீட்டுக்குப்போய் பின்பு வருவோம் என்று நினைத்த தயாவதி மெல்ல சமையல் அறைப் பக்கம் போனபோது சாப்பிட்டுக் கொண்டு நின்ற நாய்'வள்' என்றது, பயந்து விட்ட தயாவதி மெல்லக் கூறினாள். நான் ராசநாயகி வீட்டுக்குப் போய்விட்டுப் பின்பு வருகிறேன் என்று, அறையிலிருந்து வெளிவந்த ரோகிணி சரிபோட்டு வாருங்கோ என்று கூறவும் தயாவதி ராசநாயகி வீட்டுப்பக்கம் நடையைக் கட்டினாள். அங்கு போனபோது அந்த வீட்டு நாய் லொள், லொள் என்றது. வெளியே போடப்பட்டிருந்த கதிரையொன்றில் உட்கார்ந்து கொண்டு வீட்டுக்காரர், கலோ ஓ ஓ! என்று கூப்பாடு போடவும் ராசநாயகி கதவைத் திறந்து கொண்டே உள்ளே வாருங்கோ! என்றார். உள்ளே சென்று அமர்ந்ததும் ஒருவர்க்கொருவர் சுகநலன் விசாரித்துக் கொண்டனர்.

புத்தகம் ஏதும் எழுதவில்லையோ! என்று கேட்டாள் ராசநாயகி புன்னகையுடன், எழுதினனான் சரிபிழை பார்த்திட்டன், இனி அச்சுக்குக் கொண்டு போய் கொடுக்க வேணும், ஓட்டோ பிடிச்சுப் போக வேணும். வருகிற

திங்கட்கிழமை போகலாமென்று இருக்கிறன் என்றாள் தயாவதி.

அதுசரி அவற்றை ஆண்டுத்திவசம் என்ன மாதிரி? என்று ராசநாயகி கேட்கவும், அது போனமாதம் முடிஞ்சுது பெரிசாக ஒன்றும் சொல்லிச் செய்யவில்லை ஐயரை அழைத்து வீட்டோடை மட்டும் செய்தது. எனக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கு, ஆனால் சிலசமயங்களில் யோசிப்பேன். திவசம் இதுகளெல்லாம் செய்ய வேணுமோ செய்யாமல் விட்டால் என்ன? என்று, ஆனால் திவசம் அண்டிய நாளில் 'அவர்' கனவில் வந்து தள்ளிப்படு. நான் படுக்கப் போகிறேன் என்றார், கனவும் முடிந்தது, திவசத்திற்குச் சாப்பிட வந்திருக்கிறார்! என்று கூறிச் சிரித்தாள் தயாவதி.

இதெல்லாம் கட்டாயம் செய்ய வேணும், இங்கேயும் வந்து கண்ணில் தென்பட்டார் என்று ராசநாயகி கூறியபோது, ஓ! அவர் வந்து எல்லா இடமும் உலாவித்தான் போயிருக்கிறார். கதைத்திருக்கிறார்! செத்தபிறகு உடனே மறுபிறவி எடுக்கிறதில்லை காலம் சென்ற பிறகுதான் ஒவ்வொருவரின் கர்மபலனுக்கு ஏற்றபடி மறுபிறப்பு எடுக்கிறது என்றாள் தயாவதி.

நேற்று நான் புத்தகம் படித்துக் கொண்டிருந்த போது நினைத்தேன். உங்களை கனநாளாய்க காணவில்லையே! என்று இன்று வந்து விட்டீர்கள்! என்றாள் சிறு சிரிப்புடன் ராசநாயகி.

அது என்னவென்றால் ஆட்களிலும் காந்தம் இருக்கிறது. நீங்கள் நினைத்த போது, அது என்னையும் இழுத்திருக்கிறது, நானும் வரநினைத்தேன் இப்படித்தான் மகன் கனநாளாய் ரெலிபோன் எடுக்கவில்லையே? என்று யோசனையில் இருக்க, உடனும் மகன் ரெலிபோன் எடுத்தார்! என்று தயாநிதி ஆச்சரியத்துடன் கூறினாள்.

கொஞ்சம் இருங்கோ, தேநீர் கொண்டு வருகிறேன் என்று உள்ளே போய்ச் சிறிது நேரத்தில் தேநீர் கொண்டு வந்தாள் ராசநாயகி. சமையல் முடிஞ்சுதோ? நான் மினைக்கெடுத்துகிறேனோ என்று கேட்ட தயாவதிக்கு,

குளிர்சாதனப் பெட்டியில் இருக்கு! சுடவைத்துச் சாப்பிடவேண்டியது தான், இன்று வெள்ளிக்கிழமை மரக்கறிதானே என்றபோது, எனக்கு எப்போதும் வெள்ளிக்கிழமைதான்! மாமிசம் கிடையாது இன்று ஒடியல் கூழ் காய்ச்சினேன். இரண்டு, மூன்று நாட்களுக்கு வைத்திருப்பேன். இந்தக் குளிர்சாதனப்பெட்டி இருக்கிறதாலே எவ்வளவு வசதி பாருங்கோ என்று கூறிச்சிரித்த தயாநிதி, அப்போ நான் வரப்போகிறேன் என்று விடைபெற்று ரோகிணி வீடு சென்றாள். வாசலில் மூன்று நாய்கள் படுத்திருந்தன. மெல்ல அழைத்தாள். இருக்கிறீர்களோ! என்று உடனும் வெளியே வந்தாள் ரோகிணி.

வாசல்படியில் மூன்று நாய்கள் காவல்! என்று சிரித்தாள் தயாவதி. அதுகள் எதிர்வீட்டுநாய்கள், பாவம் என்று சாப்பாடு போடுறது, எங்களுடைய நாய்கட்டிவைச்சிருக்கிறேன். இரவில்தான் அவிழ்த்துவிடுவேன் என்று கூறிய ரோகிணி, கனநாளாய்க் காணவில்லையே என்று நினைத்தேன், இதோ வந்து விட்டீர்கள்! என்றாள் சிரித்தபடி ரோகிணி. உப்படித்தான் ராசநாயகியும் கூறினவ! அது காந்தம் இழுக்கிறதாம். புத்தகத்தில் இதுபற்றிப்படிச்சனான். எங்கள் வீட்டுக்குக் கொழும்பிலிருந்து ஒருபையன் வந்து வந்து போகிறவன் ஆளைப் பல நாளாய்க் காணவில்லையே? என்று யோசித்தபோது ஆள் வீட்டுக்கு வந்து இறங்கிவிட்டார்! அது காந்தம் இழுக்கிறது!! என்று விட்டு அதுசரி மகன் நித்திரையோ என்று தயாவதி கேட்டாள்.

இல்லை, அவர் மட்டக்கிளப்புக்குப் போய்விட்டார். அவருடைய மேல் அதிகாரியின் மகளுக்குத் திருமணமாம். அப்பிடியே ஊரையும் சுற்றிப் பார்த்துவிட்டு வருவினம் என்று சிரித்தாள் ரோகிணி,

ஆமாம், சுற்றுலாவுக்கு ஏற்ற இடம்தான். "மீன்பாடும் தேனாடாம்" என்பர் எழுத்தாளர் என்ற முறையில் எனக்கும் அழைப்பிதழ் வந்தது. நான் போகயில்லை என்ற தயாவதி,

எனக்குத்தனியே போய்ப் பழக்கமில்லை இன்னும் ஒரு ஆள் வந்தால் போகலாம். ராசநாயகியும் கூறியவதான் போயிருக்கலாமே! என்று, ஏன், 'இவர்' இருந்தபோதும் கொழும்பில் 'எழுத்தாளர் மாநாடு' வைச்சவை 'இவர்' கேட்டவர் போகவில்லையோ? என்று நான் போகயில்லை அப்பபோயிருந்தால் எழுத்தாளர் அறிமுகம் ஏற்பட்டு மட்டக்கிளப்புக்கும் போயிருக்கலாம். வாய்ப்பை நழுவவிட்டுவிட்டேன் என்று கூறினாள் மெல்லிய புன்னகையுடன் தயாவதி.

சந்தர்ப்பங்கள் வரும்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பம் எப்போதும் கிடையாது அல்லவா! என்று ரோகிணி கூறியபோது,

அடுத்த ஆண்டு அழைப்புவந்தால் பார்த்துக் கொள்வோம், சரி நான் வீட்டுக்குப் போக வேண்டும் நேரமாகிறது என்று விடைபெற்றாள் தயாவதி.

# 34. லைசென்சு வேணுமாம்!

ஆவணி மாதமழை ஒருவாரமாகப் பெய்து கொண்டிருந்தது. மழை என்றால் போதும் சிவதர்சினி வீட்டுள் அடங்கியிருப்பாள். அன்று மழை விட்டு வானம் வெளிச்சிருந்தது. மூன்று மணிபோல் இஞ்சித் தேநீர் குடித்துவிட்டு உடைமாற்றினாள். மழைநீர் தெருவில் நடப்பது என்றால் கறுப்புக்கரை, மண்நிறக்கரை உள்ள சேலைகளைத்தான் தேர்ந்தெடுத்து அணிவாள். ஏனென்றால் மழைத்தண்ணீர் சேலையின் கரையில்பட்டாலும் தண்ணீரில் இலேசாக அலம்பிவிடலாம் என்பது அவள் எண்ணம்!

கூப்பிடுதூரத்திலிருக்கும் நண்பியின் மகள் சிந்துவுக்குப் பிள்ளை பிறந்திருக்கு அங்குபோக வேண்டும் என்று நினைத்து வழியில் இருக்கும் கடையில் அன்பளிப்புப் பொருள் வாங்கிச் சென்று கொடுத்து நலன் விசாரித்தபின் அடுத்து சிநேகிதி சிவரூபி, மருமகள், சம்பந்திப் பெண் மூவரும் காரசாரமாக வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர்! அவர்களைவிட இன்னும் இரண்டு ஆண்கள் கதைத்துக் கொண்டனர்.

திரும்பிக் போய்விடலாமா? என யோசனை செய்த சிவதர்சினியை, வாருங்கோ! என்று கூறிக் கதிரையை தனது கதிரையருகில் போட்டுவிட்டாள் சிவரூபி, பின்பு காரசாரம் தொடர்ந்தது! இருக்க விரும்பாத சிவதர்சினி நான் இன்னொரு நாள் வருகிறேன் என்று கூறிவிட்டு மெல்ல நழுவினாள்.

பின்னர் ஒருவாரம் கழிந்தபின் சிவரூபி வீட்டுக்குப் போனாள் சிவதர்சினி. ஓ! வாருங்கோ என்று அழைத்தபடியே கதிரையை எடுத்துப்போட்டாள் சிவரூபி. வெளியில் இருந்தால் காற்றுப்படும், மலர்கள் பூத்திருக்கும் அழகைப் பார்த்துக்கொண்டே அளவளாவுவது ஓர் சுகமான அனுபவமே!

சிந்துவுக்குப் பிள்ளை பிறந்திருக்கு அதுதான் போய் வந்தனான் என்று பேச்சை ஆரம்பித்தாள் சிவதர்சினி. அது சரி, அன்று காரசாரமான பேச்சு நடந்தது. என்ன விடயம்? என்று கேட்கவும்,

அது என்னவென்றால் மருமகளுக்கு இன்னும் தாலி கட்டயில்லை! திருமணப்பதிவோடை வீட்டுக்குள்ளே வந்து விட்டாள்! தாலிகட்டுவது மகனல்லவோ? நான் என்ன செய்வது, மகனும் மருமகளும் கதைத்து முடிவெடுக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். மருமகள் உழைக்கிறாதானே? அவவே தாலியை வாங்கிக் கட்டிக் கொள்ளலாமே? என்று சிவதர்சினி கூறினாள்.

அது முன்பே மருமகள் 'லோன்' எடுத்து பணம் தாயிட்டைக்

கொடுத்திட்டா. இனி அடுத்த லீவுக்குத்தான் மருமகள் வருவ. அப்பதான் தாலிகட்டலாம்! என்று கூறிச் சிவரூபி சிரித்தாள்.

பழைய காலத்திலை புலியுடன் போராடிப் புலியைச் சாகடித்து அதன் பல்பிடுங்கி வந்துதான் தாலிகட்டும் வழக்கமாம் அவன் வீரன்! இப்போ புலியைக் கண்டாலே பயந்து ஓடிவிடுவான்கள்! பழைய காலத்திலை திருமணப்பதிவு இல்லைத்தானே? அதற்காக எல்லோரும் அறிய இப்படியொரு “தாலிகட்டு” நடந்தது. இப்போ அதை நாய்க்குக் கழுத்தில் கட்டும் வார் மாதிரி நினைக்கினம்! அதாவது ‘லைசென்சு’ பெற்ற மனைவி!

காலம் மாறக் கோலங்களும் மாறவேண்டியது தான். முற்காலத்தில் பணம் போட்டு வைக்க வங்கிகள் இல்லாதபடியால் தங்கமாக உடலில் அணிந்து கொண்டனர். இப்போதான் பணத்தை வங்கியில் போட்டு வைக்கலாமே , நகைகளை அணிந்து கொண்டு கள்ளன் பிடுங்குகிறானா? என்று பயப்படத்தேவையில்லையே? ஏதோ அவரவர் விருப்பம் தாலிகட்டுவதும், கட்டாததும்! கடையில் கொஞ்சம் சாமான் வாங்கவேணும் பொழுதுபடுகிது என்று கூறியபடியே சிவதர்சினி வெளியேறினாள்.

## 35. கிழவனின் கனவு

மகனிடம் கிடைக்கும் பணத்தை எல்லாம் டாம்பீகமாகச் செலவு செய்து கொண்டிருந்தான்- கோபாலு. ஒரு சமயம் மாம்பழங்கள் வாங்கி வந்திருந்தான் கூடுதலாக- இப்போது சற்று விலையான நேரம்.

மாம்பழமென்றால் எல்லாருக்கும் ஆசைதானே! அதுவும் சின்னப் பிள்ளைகளுக்குச் சொல்லவா வேண்டும்? கொண்டு வந்த மாம்பழங்களை இரண்டு நாளில் முடித்துவிட்டனர். மூன்றாம் நாள் கோபாலு நண்பகல் சாப்பாட்டின்பின் மாம்பழம் கொண்டு வரும்படி கேட்டான் தன் மனைவி கொழுந்தியிடம். அது முடிந்துவிட்டது என்றாள் கொழுந்தி. அவ்வளவு பழமுமா? ஏய்! பிள்ளையள் எல்லாப் பழத்தையும் சாப்பிட்டுவிட்டார்களா? ஒவ்வொன்றாக 4,5, நாட்களுக்கு வைத்துச் சாப்பிட்டிருக்கலாமே என்று சத்தம் போட்டான். சாப்பிடத்தானே வாங்கியது ? பிறகேன் கோபாலு சத்தம் போடுகிறான்? என்று மனதுள் நினைத்தாள் கொழுந்தி. ஆனால் வாய்விட்டுச் சொல்லவில்லை. சொன்னால் இன்னும் சத்தம் போடுவான். அது அவனுடைய பழக்கம்.

மாம்பழம் சாப்பிட்டதற்கு அப்பப்பா ஏசுறார் என்று பிள்ளைகள் தமது தந்தை நாதனிடம் முறையிட்டனர். அவனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

உடனே ஒரு முடிவு எடுத்துக்கொண்டான். பாடசாலை விடுதியில் பிள்ளைகளைச் சேர்த்துவிட்டான். பாட்டன் கோபாலு கேட்டான்- ஏன் இங்கே இருந்து படிக்கலாம் தானே? என்று

இல்லை- இங்கேயிருந்து படிக்க முடியாது- நிம்மதியாக விடுதியில் இருந்து படிக்கட்டும். அதுதான் வசதி என்று கூறினான்- மகன் நாதன். கோபாலுப்பாட்டனுக்கு மனம் வேதனைப்பட்டது- பேரப்பிள்ளைகளுடன் அளவளாவிக் கொண்டு பொழுது போக்க முடியாதே? கண்ணீர் விட்டான். இனி மனம் வருந்தி என்ன பிரயோசனம்! கதைக்கும் போது அவதானமாகக் கதைத்திருக்க வேண்டும் பிள்ளைகளுடன். கோபாலு பிள்ளைகளுடன் தான் இப்படி என்றில்லை- மற்றவர்களுடனும் இப்படித்தான் கதைப்பது அவன் வழக்கம்.

பேரப்பிள்ளைகள் இனி வீட்டுக்கு எப்போது வருவார்கள்? வீட்டுக்கு வரக் கூடுமோ? லீவிற்கு வரக்கூடுமோ? என்றெல்லாம் யோசனையில் மூழ்கினான். டெலிபோன் மணி அடித்தது. எடுத்து கலோ என்றான் கோபாலு. பாடசாலை ஆசிரியர் கூறிய செய்தி அவனுக்கு நெஞ்சில் பாலை வார்த்தது! பிள்ளைகளை விழையாட்டுப்போட்டிக்கு கூட்டிச்செல்லப் பெற்றார் வரவேண்டும் என்றார் ஆசிரியர்.

பெற்றார் கொழும்புக்குப் போய்விட்டினம்- நான் வருகிறேன் கூட்டிச் செல்வதற்கு என்று பதில் கூறிய கோபாலு போவதற்கு ஆயத்தமாக இருந்தான். போட்டி முடியப் பிள்ளைகளை வீட்டிற்குக் கூட்டி வந்துவிடலாம் என்று நினைத்தான். திடீரென்று மகன் நாதன் வந்து நின்றான். கோபாலுவுக்கு மனம் துணுக்குற்றது- நாதன் தான் பிள்ளைகளை கூட்டிச் செல்லப் போகிறான்- பிள்ளைகள் வீட்டிற்கு வரமாட்டார்களோ என்று யோசனை செய்தான். மனைவி ராசாத்தி நக்கலடித்தாள்- கனவு கலைந்து விட்டதா என்று. போட்டி முடிய வீடுவந்து சேருவினம் பிள்ளைகள்- தேத்தண்ணிக்கு எரிச்சுவிடு- இரவுச் சாப்பாடு செய்- பிள்ளைகள் வரப்போகுதுகள் என்று அவசரப்பட்டான்-கோபாலு.

அவையள் வரமாட்டினம் கனவு காணாதையுங்கோ! என்று ராசாத்தி பகிடி பண்ணினாள் கோபாலுவை. ஓட்டோ வரும் என்று கூறினான் கோபாலு. ஓ! ஓட்டோ வரும்- பிள்ளைகள் வராயினம்! என்றாள் ராசாத்தி சிரிப்பினூடே. ஓட்டோச் சத்தம் கேட்டது. முதல் நாதன் வந்து இறங்கி மேல்மாடிக்குப் போய்விட்டான். பின்பு பிள்ளைகள் கையைக்கட்டியபடியே மேல் மாடி சென்றனர். கோபாலு வாய் எல்லாம் பல்லாக இளித்துக் கொண்டான்- ஏன்

ராசாத்தியும் தான். ராசாத்தி விறுவிறென்று பிட்டுக் குழைத்து அடுப்பில் அவிய விட்டாள். முன்பு குளிர்சாதனப் பெட்டியில் வைத்த மீன் இருந்தது- அதில் குழம்பு வைத்தாள். அதற்கிடையில் டி.வி.யில் அவள் தொடராகப் பார்க்கும் நாடகத்தையும் எட்டிப்பார்த்தாள்!

கோபாலு பேரப்பிள்ளைகளின் வருகையால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான்! ஆனந்தச் சிரிப்புடன் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தான். அவனைப் பார்த்த- ராசாத்திக்குச் சிரிப்பு வந்தது பாவம் கோபாலு-இரண்டு வாரமாகப் பிள்ளைகளைக் காணாது எப்படித் தவியாய்த் தவித்தான்?

கடவுள் கருணை உள்ளவர்- அதனால் தான் விளையாட்டுப்போட்டி ஒன்றினை உருவாக்கினாரோ!

# 36. நல்ல காலம் பிறக்குது!

டி.வி.யில் காலை சோதிடம் கூறிக்கொண்டிருந்தார் சோதிடர்-வர்த்தனன் என்பவர். ராசிபலன் கூற முன்பு சிலவிடயங்கள் பற்றிக் கூறுவார். அவற்றில் சில வாய்வழி வந்த சோதிட சம்பந்தமாயிருக்கும்- எழுத்தில் கிடையாது என்பர். அன்று தோசநிவர்த்தி ஒன்று கூறினார். அமாவாசையும் சனிக்கிழமையும் சேர்ந்து வரும் நாள்- அன்று வெள்ளை அழுக்குத் துணியைச் சமனாகக் கிழித்து நான்கு துண்டுகள் நான்கு சிறு சட்டிகளில் போட்டு நல்லெண்ணை விட்டு எரிக்கவேண்டும். வடகிழக்கு- தென் கிழக்கு- தென்மேற்கு- வடமேற்கு- என்னும் மூலைகளில்- ஆறுமணி தொடங்கி ஆறு முப்பது வரை. இப்படி- மூன்று சனிக்கிழமை வரை எரித்து முடிய- அந்தச் சாம்பலைச் சட்டியுடன் எடுத்து வெள்ளைத்துணியில் வைத்துக் கட்டி நீர்நிலையில்- போடவேண்டும்- ஆறு- குளம் எதிலும் போடலாம். தோசம் எதுவாயிருந்தாலும் நீங்கிவிடும் என்றார்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த தனலக்குமி- எப்படா! சனி அமாவாசை- வரும் என்று காத்திருந்து மூன்று தடவை எரித்துவிட்டாள். வெள்ளைத் துணியில் கட்டியும் விட்டாள். இனிமேல் அதை நீர் நிலையில் போடவேண்டும். யாழ்ப்பாணம் போகும் போது போடலாம் என்று விட்டு வைத்துக் கொண்டாள். பின்னர் அது பற்றி மறந்தேவிட்டாள்.

ஒருநாள் அது கண்ணில் பட்டது- எடுத்து தனது கைப்பையில் வைத்துக் கொண்டாள். கணவன் திருமுருகனுக்கு யாழ்ப்பாணம் போக வேண்டியிருந்தது. தனலக்குமி தானும் வருவதாகக் கூறி அவனுடன்

ஓட்டோவில் சென்றாள். வழியில் தென்பட்ட குளமொன்றில் போடும்படி சட்டிப் பொட்டலத்தைத் திருமுருகனிடம் கொடுத்தாள். திருமுருகன் அதைவாங்கி நீர் நிலையில் போட்டான். அப்போது ஒரு குரல்- "நல்ல காலம் பிறக்கிறது" என்று கேட்டது! குடுகுடுப்பைக்காரன் அல்ல- ஓட்டோ டிறைவர் தான் கூறினான்!

அன்று வீட்டில் போய் இறங்கிச் சில மணி நேரங்களின் பின் ஓர் பையன் வந்து கதைத்துக் கொண்டிருந்தான்- திருமுருகனிடம். நேரம் போய்க் கொண்டிருந்தது. என்னதான் கதைக்கிறான் திருமுருகன் அதிக நேரமாக? ஏதோ பெரிய திட்டம் போடுகிறானா குடும்ப விடயமாக? உணவை உண்டு கழித்தவனுக்கு என்ன திட்டம் இருக்கிறது? தனலக்குமி மனதில் புகைந்தாள். ஓ! காணி இருக்கிறது!? என்றாள் தன் பாட்டில். பின்பு தும்புக்கட்டையை எடுத்துக் கதைத்துக் கொண்டிருந்த இடம் நோக்கி கூட்டத் தொடங்கினாள்- எழுந்து போகட்டும் என்று, சிறிது நேரத்தில் பையன் போய்விட்டான். திருமுருகன் பேசாமல் இருந்தான்.சில நிமிடங்கள் சென்றபின் திருமுருகன் மனைவியிடம் கேட்டான் காணி விற்கப்போகிறாயா? என்று.

ஓமோம்! விற்றால்த்தானே வீடு வேண்டலாம்- என்றாள் தனலக்குமி இப்ப வந்த பையன் ஐந்து கேட்கிறான். அவன் சிறுப்பிட்டிப் பையன்- விளையாட்டுக் கழகத்துக்கு ஒவ்வீசு கட்டப்போகினமாம் என்றான் திருமுருகன். ஆறுஎன்றால் கொடுப்பேன் என்று மனைவி கூறவும் அந்த விலையில் பையன் வாங்கமாட்டான் என்று திருமுருகன் கூறவும்- பையனின் டெலிபொன் நம்பர் தாருங்கோ! அல்லது வீடு இருக்குமிடம் சொல்லுங்கோ என்று கேட்டாள் தனலக்குமி.

அது- நம்பர் தர முடியாது. அவன் வரமாட்டான்- வேறு யாருக்கோ விற்கலாம் என்று சொன்ன நீ- அவையிட்டைப் போட்டுவா என்றான் திருமுருகன். டீறைவர் குமரன் வருவானோ அல்லது வேறு ஓட்டோ பிடிக்கவேணுமோ? என்று கேட்டான் தனலக்குமி.

குமரன் வேலைக்குப் போயிட்டானாம்- அந்த வெண்டிக்காய் ஓட்டோவுக்கு டெலிபோன் பண்ணு என்றான் திருமுருகன். தனலக்குமி வெண்டிக்காய் என்னும் ஓட்டோ டிறைவருக்குப் போன் பண்ணினான். டெலிபோனில் கூறினார் சிறிதுநேரம் செல்ல போன் எடுக்கும்படி.

டெலிபோனில் சொல்லுகினம்- நீங்கள் டீ குடித்து- வெளிக்கிட்டுக் கொண்டபின் போன் எடுக்கட்டாம். டெலிபோன் ஒப்பறேற்ரர் சொல்லுகிறா- என்றபடி தனலக்குமி தேநீர் போட்டு திருமுருகனுக்கு கொடுத்துத் தானும்

எடுத்துக் கொண்டாள். தேநீர் குடித்து முடித்து திருமுருகன் டெலிபோன் பண்ணினான்.

ஓட்டோ வருகிது வெளிக்கிட்டு நில் என்றான் மனைவியிடம்- ஓட்டோ காசு கொடுக்கவேணும் காசு தாருங்கோ என்று கேட்டாள் மனைவி. என்னிட்டை காசு இல்லை- அண்டைக்கு சாமான் வாங்கி முடிஞ்சு போச்சு என்றான் திருமுருகன்.

என்ன தம்பி அனுப்பின முப்பதினாயிரத்துக்கும் சாமான் வாங்கினதோ? பென்சன் காசு எல்லாம் முடிஞ்சு போச்சோ? எவளுக்கும் குடுக்க வேண்டுமோ? என்று சரசமாகக் கேள்விக்கணைகள் தொடுத்தாள் தனலக்குமி.

பேக்கதை பேசாதை போ என்றான் திருமுருகன்.

புத்திக்காரப் பிள்ளை- எல்லாத்தையும் அறுத்துக் கொட்டிப் போட்டு- இப்ப இருக்க ஒரு வீடில்லை- புத்திக்காரப்பிள்ளை! என்றாள்-தனலக்குமி. அப்போது ஓட்டோ வரவே அதில் ஏறிக்கொண்டாள் கோபத்துடன். புறோக்கரிடம் சென்று காணி விற்பது பற்றிக் கூறிவிட்டு வந்தாள். ஓட்டோக் கூலியையும் தானே கொடுத்தாள். முன்பு ஐந்நூறு கொடுப்பது-இப்போ நூற்றைம்பது ரூபா கூடுதல்- பெற்றோல் விலை கூட்டி விட்டார்கள். அன்று உதயன் பத்திரிகைகளில் விற்பனைக்கு வீடு இருக்கிறது என்று விளம்பரம் போட்டிருந்தார்கள். டெலிபேன் நம்பரும் எழுதப்பட்டிருந்தது. முன்பு இருபத்தைந்து இலட்சத்திற்கு ஒரு வீடு இருக்கு என்ற போது மகன் மகேந்திரன் கூறினான் வாங்கலாமே என்று- -வீடு இருக்குமிடம் சூழல் சரியில்லை என்றதால் அது விட்டாயிற்று

இப்போ இந்த வீடு- என்ன விலையென்று டெலிபோனில் கேட்டாள், வந்து வீட்டைப் பாருங்கோ- என்று பதில் வந்தது. திருமுருகன் கூறினான். வீட்டைப் பார்த்து வரும்படி. தனலக்குமி வீடு பார்க்க ஓட்டோவில் போனாள். அங்கு போனபோது வீட்டைச் சுற்றிக் காட்டினார். மூன்று அறை- சமயலறை- குளியலறை- விருந்தினர் அறை என்று அடக்கமான வீடு, விலை நாற்பது கேட்டிருக்கு- இன்னும் இன்னும் இரண்டு கூடத்தரவேணும்? என்றார்.

தனலக்குமி வீடு வந்து ஓட்டோவிலிருந்து இறங்கும்போது வாசலில் வாயெல்லாம் பல்லாக நின்றான் திருமுருகன். அதைப் பார்த்த தனலக்குமி கூறினாள் வீடு வாங்கியாச்சு! ஓட்டோவுக்கு மேல வைத்துக்கொண்டு வர முடியவில்லையென்று.

டிறைவரும் சிரித்தபடியே கூறினான்- வீடு வாங்கியாச்சு என்று! பின்னர் மகன் மகேந்திரனிடம் டெலிபோனில் விடயத்தைக் கூறிவிட்டு- உடனே எவ்வளவு அனுப்ப முடியும்? என்று கேட்டாள். இப்போ பத்து அனுப்புகிறேன். பின்னர் லோன் எடுத்து கொடுக்கலாம் என்றான். லோனுக்குக் கொடுக்க வேணும்- பிழையற்ற உறுதியா என்று பார்க்கவேணும்- அதனால் காணிக்காரரிடம் உறுதிக் கொப்பியொன்று தரும்படி கேட்டாள் தனலக்குமி.

கொப்பிப் பிரதி பண்ணிக் கொண்டுவாறேன் என்று வெளியே போய் வந்து பிரதியைக் கொடுத்தான்.

வீட்டில் நண்பர் பெரியதம்பி என்பவர் வந்தபோது கேட்டார் விடயம் என்ன மாதிரி என்று.

உறுதிக் கொப்பி தந்திருக்கினம்- பாருங்கோ என்று கூறிக் கொப்பியைக் கொடுத்தாள் தனலக்குமி. நண்பர் வாங்கிப் பார்த்துவிட்டு- இதென்ன? ஒரு பகுதி மாத்திரம் எழுதியிருக்கு- காணியின்ரை பெயரோ- திக்கெல்லையோ எதுவும் எழுதப்படவில்லை. திரும்ப தனலக்குமியும் திருமுருகனும் வாங்கிப் பார்த்தனர். நண்பர் கூறியறு சரிதான்!

இதையேன் தந்தார்கள்? என்ன தேவைக்கு இது? உறுதி கச்சேரியில் பார்த்து சரியென உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர்தானே வீடு வாங்கலாம்? எத்தனை தில்லுமுல்லெல்லாம் உலகில் நடக்கிறது?

அடுத்த நாள் நான்கு மணியளவில் வீட்டுக்காரர் நாகலிங்கமும் சொந்தக்காரப் பையனும் வந்தனர். அப்போது தனலக்குமி அந்த "அரை உறுதி"யைக் கொண்டுபோய்க் கொடுத்தாள். இதில் மிகுதியைக் காணவில்லை என்றான் திருமுருகன். அது மிகுதி இருக்கு- என்றான் நாகலிங்கம். இருவருக்கும் தேநீர் கொண்டு வரும்படி சைகைகாட்டினான் திருமுருகன்.அதைப் பார்த்துவிட்ட நாகலிங்கம்- அம்மா! வேண்டாம் என்றான். ஆனால் தனலக்குமி இரண்டு தேநீர் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தாள்.

நாங்கள் ஐந்தாம் தேதி வெளிநாட்டுக்குப் போகவேணும்- அதனால் வீட்டை நேரகாலத்திற்கு வாங்கினால் நல்லது. அட்வான்சு தந்தால் நல்லது என்றான் நாகலிங்கம்.

மகன் லோன் எடுத்துத்தான் பணம் தரவேண்டும். உறுதி தாருங்கோ என்றாள் தனலக்குமி. தாங்கள் புதன்கிழமை வருவதாக கூறி விடை பெற்றனர். தனலக்குமி மனதுள் கணக்குப் போட்டாள்- தம்பி பத்து லட்சம் உடனும் அனுப்புவன்- தென்னங் காணி விற்றால் இருபத்துநாலு வரும்.

நகை அடைவு- ஐந்து வரும்- வங்கியில் இரண்டு வரும்- மகனிட்டை மிகுதி எடுக்கலாம்- கணக்குச்சரி என்று கணக்கு முடித்தாள். வீடு கிடைத்தமாதிரித் தான்!

இந்த- "வெறுங்கையில் முழம் போடுவது" பழமொழி சொல்வர்- அதன் அர்த்தம் இப்போதுதான் புரிகிறது- கையில் ஐச்து சதம் (இப்போது ஐந்து சதம் புழக்கத்தில் இல்லை பழைய நினைவில் சொல்லிவிட்டேன்!) இல்லை  காணி வாங்குவது எப்படியாம்? ஐந்து சதம் என்பதை ஐந்து ரூபாவாக மாற்றிச் சொல்வோமே!

# 37.கண்ணீர்

ரெலிபோன் அழைத்தது- சிங்கராசா எடுத்து கலோ என்றான். மகள் தேன்மொழி கூறினாள்- கீனுகாவுக்கு அடையாள அட்டை எடுக்கவேண்டுமாம் தபால் கந்தோரில் ஒரு "போம்" வாங்கிக் கொடுங்கோ கீனுவிடம்- என்று. இரண்டு மணிக்கு பாடசாலை செல்வதாக ஏற்பாடு. பேரப்பிள்ளைகள் பாடசாலை விடுதியில் தங்கிப் படிப்பவர்கள்- சனி ஞாயிறு லீவு- வீட்டுக்கு வெள்ளிக்கிழமை வந்து திங்கட்கிழமை காலை பாடசாலை போய்விடுவார்கள்- கீனுகா- பானுகா சகோதரிகள். அவர்கள் சிறுவயதில் தந்தையார் இறந்துவிட்டார். பாட்டன் பாட்டியுடன் இருந்து படித்து வந்தனர். இப்போ விடுதியில் சனி ஞாயிறும் தங்கி நிற்பதற்கு வசதி செய்திருக்கிறார்கள்- அதனால் வீட்டுக்கு வரத்தேவையில்லை- என்று தாயார் பிள்ளைகளை விடுதியில் இருக்கும் படி கூறிவிட்டார்.

அன்று இரண்டு மணியளவில் ஓட்டோவில் சிங்கராசாவும் மனைவி சிந்துவும் சென்றார்கள். வரவேற்பறையில் பானுகா வந்து நின்றாள். பாட்டியைப் பார்த்தாள்- கலங்கிய கண்களுடன். அதைப்பார்த்த பாட்டியாரும் கண்கலங்கினார்- முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டார். அதைப் பார்த்த பாட்டனார் பானுகாவிடம் கூறினார்- அம்மாவிடம் சொல்லி நீங்கள் ஞாயிறு சனிக் கிழமைகளில் வீட்டுக்கு வந்து தங்கிவிட்டுப் போங்கோ- என்று, பின்பு கொண்டு போயிருந்த 'பாக்'கை அவளிடம் கொடுத்துவிட்டு கீனுகா எங்கே என்று கேட்க- ரீச்சருடன் போய்விட்டா தபால் கந்தோருக்கு என்றாள் பானுகா.

உடனே தபால் கந்தோருக்குப் பறந்தனர் பாட்டனும் பாட்டியும். அங்கே இல்லை. அடுத்த பெரிய கந்தோருக்கு பறந்தனர். ஓட்டோவில் இருந்து இறங்கியபோது கீனுகா அறைவாசலில் நின்றாள். சில வினாடிகளில்

அவள் ரீச்சருடன் ஓட்டோவில் ஏறிச் சென்றாள் பாடசாலை நோக்கி. பின்னால் பாட்டியின் ஓட்டோவும் ஓடிச்சென்றது. பாடசாலை வாசலில் இரு ஓட்டோவும் நின்றன். கீனுகா இறங்கிய போது பாட்டியும் இறங்கி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். உள்ளே சென்று உரையாடியபோது- "வேள்ட் மாப்" வாங்க வேணும் என்றாள் கீனுகா. பாட்டியர் நூறு ரூபாவை அவளிடம் கொடுத்துவிட்டு- வேறு வீடுமாறுவது பற்றியும் கூறிவிட்டு விடைபெற்றனர் பாட்டியும் பாட்டனும். ஓட்டோவில் ஏறியதும் பாட்டனார் கூறினார்- பானுகா அழுகிறாள் என்று. நீங்களும் மேளும் போட்டாபோட்டிக்கு கதைபட்டு பிள்ளையளை அங்கை விட்டிருக்கு. சனி ஞாயிறு அதுகள் வீட்டிற்கு வந்து ஓடியாடி விளையாடி- விருப்பமான சாப்பாடு சாப்பிட்டுப் போறதுகள். இப்ப அடைபட்டு இருக்குதுகள்- மேள் கதைபட்டால் நீங்களும் ஏட்டிக்குப் போட்டியாகக் கதைக்கவேணுமே? நீங்கள் நெடுகப் பிழைவிட்டதுதானே? அவள் பேசினாலும் நீங்கள் பேசாமல் கிடந்திருக்கலாம்- கட்டிலில் கிடந்த உங்களை எழும்பி நடக்கப் பண்ணினவள் அவள்-உங்களுக்கு ஒரு நன்றி உணர்வு கூட இல்லையே? நீங்கள் தேன்மொழிக்குச் செய்த அநியாயங்களுக்கு- நானென்றால் உங்களைத் திரும்பியும் பார்த்திருக்கமாட்டேன். அவள் தன்னுடைய காசில் செலவளித்து உங்களை எழுப்பி நடக்கப் பண்ணினவள். அப்படிப்பட்டவளோடை நீங்கள் சவால் கதையே கதைக்கிறது? என்னோடை கதைக்கிற மாதிரி அவளோடை கதைக்கிறதே? நானோ எல்லாவற்றையும்- நீங்கள் செய்த அட்டூழியங்கள்- உங்கடை ஆட்கள் செய்த நயவஞ்சகங்கள் பொறுத்துக் கொண்டு இருக்கிறன். மேள் எப்படிப்பொறுப்பாள்?

இப்ப அழுகிறியளே- பானுகா அழுகிறாள் என்று? உங்களை ஒருநாளும் திருத்த ஏலாது- திருந்தவும் மாட்டியள்- உப்பிடியே இருந்து போக வேண்டியது தான். ஆனால் பாவம் அந்தச் சின்னப்பிள்ளையள். உள்ளத்தாலை சித்திரவதைப்படுகிதுகள். தாயார் வரட்டும் சொல்லிப பார்ப்பம்- சனி ஞாயிறு லீவுக்கு வீட்டில் விடச் சொல்லி. வருகிற கிழமை கொழும்பிலிருந்து வருவதாக ரெலிபோனில் இன்றைக்குச் சொன்னவள் என்று சின்துப்பாட்டி ஒரு பாட்டம் கொட்டித்தீர்த்தாள். சிங்கராசா பாட்டன் பேசாமல் முழிசிக்கொண்டு கட்டிலில் படுத்துக்கிடந்தான். என்னத்தைப் பேசுவது?

# 38. அச்சு அகம்

சிந்தா குறுநாவல் ஒன்று எழுதி முடித்து அச்சகத்தில் கொடுத்தாள்- அச்சில் போடும்படி. சில மாதங்களின் பின் போனபோது சிந்தாவிடம் அச்சுப்பதித்த நூல்களைக் கொடுத்தார் அச்சுப்பதிப்பாளர். அந்நூலில் பதிப்பித்த ஆண்டு- தேதி- அச்சகத்தின் பெயர்- என்று எதுவுமே போடவில்லை! இதுவரையில் புத்தகம் அடித்துப் பழக்கம் இல்லைப் போலும்! ஏதும் நோட்டீசு அடிப்பது- பாடசாலைக் கொப்பிகள் விற்பனை செய்வதுதான் தெரியும் போலத்தெரிகிறது.

சரி பரவாயில்லை- இருக்கட்டும் என்று நினைத்த சில நாட்களின் பின்னர் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பார்த்தாள்- நாவல்- கட்டுரை- சிறுகதை என்பன போட்டிக்கு அனுப்பும் படி. நாவலுக்குப் பரிந்துரையும் 2011ம் ஆண்டுக்குள் வெளிவந்ததாயும் இருத்தல் வேண்டும்- என்பதும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதைப் பார்த்த சிந்தா- நாவலைக் கொடுத்து ஆண்டு திகதி-பதிப்பாசிரியர் முகவரி என்பனவும் சிபாரிசுக் கடிதம் ஒன்றும் செய்யும்படி தனது கணவர்- மகன் ஆகியோரிடம் நூலைக் கொடுத்துவிட்டாள். பதிப்பாசிரியர் நூலின் கம்பியைப் பிரித்து ஆண்டு- தேதி சிபாரிசுக் கடிதம் எல்லாம் அச்சுப்பதித்துக் கொடுத்தார். அடிப்பாக அட்டை சிறிது வெடிப்புடன் காணப்பட்டது- பொருத்தப்பட்டிருந்த கம்பி கழற்றிப் பூட்டியதில் அதை எப்படி அனுப்புவது போட்டிக்கு?

மேல் அட்டையைக் கழற்றிவிட்டுப் புதிய அட்டையைப் போட்டிருந்தால் நன்றாக இருக்கும். சரி அதைப் பின்னர் பார்ப்போம். சிறுகதை கட்டுரையை அடிக்கக் கொடுப்போம் என்று முன்பு தான் நூலில் எழுதிய கட்டுரையைக் காட்டி- இந்தக் கட்டுரையை மட்டும் அடித்துத்தாருங்கள்.- அத்துடன் சிறுகதையும் ஒன்று தருகிறேன் செய்து தாருங்கள் என்று கொடுத்தாள். பின்னர் அதை வாங்கப்போனபோது- கட்டுரை மாத்திரம் அல்லாது அடுத்த பக்கங்களிலுள்ள கதைகள் துணுக்குகள் எல்லாவற்றையுமே அச்சடித்து விட்டிருந்தார்!

எல்லாவற்றையும் யோசித்துப்பார்ததில் சிந்தாவுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. அதைவிட சமயப்புத்தகம் போட்டிக்கு அனுப்பலாம் என்றிருந்தது. ஆனால் அதற்கு ஆண்டு தேதி எதுவும் போடவில்லையே! தனது “பாக்”கில் மூன்று சமயப் புத்தகங்களை எடுத்து

வைத்திருந்தாள் ஆண்டு தேதி போடக் கொடுப்பதற்கென்று. வெளியில் போகும்போது கொடுத்துவிடலாம் என்று. ஆனால் கொடுக்கவில்லையே! மறந்துவிட்டாள். சிலநாட்களின் பின்பு "பாக்" கைப் பார்த்தபோது அதற்குள் சமயப் புத்தகங்கள் அப்படியே இருந்தன- சிந்தாவை வெறித்துப் பார்த்தபடி!

போட்டித் திகதியும் போயே போய்விட்டிருந்தது. 2011ம் ஆண்டு நூலில் அடிக்கச் சொல்லி எழுதிக் கொடுத்தும்- 2012ம் ஆண்டு என்று அடித்து விட்டிருந்தார் பதிப்பாசிரியர்! என்ன "செய்வது? பட்டகாலிலேயே படும்" என்பார்களே- அதுதான் சிந்தாவுக்கும் நடந்துள்ளது- பாவம்! ஆண்டவனே! நீ எப்படி எல்லாம் என்னைச் சோதிக்கிறாய்? நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ளவா?

அச்சகம் என்று விளம்பரப் பலகையைப் பார்த்துவிட்டு- புத்தகம் அச்சில் போடும்படி சொன்னது என் தப்பா என்ன? எல்லாம் யார் பிழையப்பா பிள்ளையாரப்பா! உன்னை வணங்காமல் தொடங்கிய பிழையோ பிள்ளையாரப்பா! நீயார் பிள்ளையாரப்பா? கூறாயோ? யார்பிள்ளை- நீயார் பிள்ளையோ?

என்று சிந்தா பிள்ளையாரப்பாவைக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்! பதில்தான் கிடைக்கவில்லை. அச்சுஅகம் தான் இதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டும்- பார்ப்போம் என்று சிந்தா அச்சகம் போகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்! அச்சு அகமே அச்சகமே? அச்சச்சோ!

## 39. மனிதஉரிமை

தாத்திகாவுக்கும் தீனுகாவுக்கும் பாடசாலைத் தேவைக்கு ஐடென்ரிகாட் படம் எடுக்கவேண்டும் என்று அவர்களின் அம்மா மகேசு டெலிபோன் செய்தாள். பாட்டனார் தான் போகாமல் பாட்டியாரை பேரப்பிள்ளைகளுடன் படம் எடுக்க அனுப்பினார் சிறிது தூரத்திலிருக்கும் படமெடுக்கும் நிலையத்திற்கு.

படமெடுத்து முடிந்ததும்- எப்போ தருவீர்கள் என்று கேட்டதற்கு, ஒருவாரத்தின் பின் வாருங்கள் என்று பதில் கிடைத்தது. ஒருவாரத்தின் பின் பாட்டி யோகம்மா படம் வாங்கி வருவதற்காக உடைமாற்றினார். அப்போது டெலிபோன் அழைத்தது. இன்று பத்து மணியளவில் மனிதஉரிமைக் காரியாலயத்தில் சந்திக்கவும் உங்களின் உறுதி கொண்டு வருகிறேன்- என்று கொழும்பிலிருந்து வடமராட்சியில் வந்து நிற்கும் உறவினனான லோயர்

ரஞ்சன் கூறினார். சரி வருகிறேன்- என்று கூறிவிட்டு டெலிபோனை வைத்தபோது- யார் கதைத்தது? என்று கேட்டான் கணவன் யோகநாதன். அது லோயர் ரஞ்சன் உறுதி விடயமாக வரச்சொன்னார் என்றான் யோகம்மா.

அதெப்படி- நீ வெளிக்கிடவும் அவனும் டெலிபோன் செய்கிறான் அவன் என்ன முறை உனக்கு? என்று திரும்பவும் கேட்டான் யோகநாதன் சந்தேகத்துடன். அவன் யார்? யாருடைய மகன்? முறை என்ன? என்பதெல்லாம் யோகநாதனுக்கு முன்பே தெரியும்- யோகம்மா சொல்லியிருக்கிறாள். இருந்தாலும் இப்போது கேட்கிறான்!

அவன் எனக்கு மச்சான் முறை- கலியாணம் கட்டலாம்! என்று கூறிய படியே யோகம்மா வெளியேறினாள்- மனித உரிமை நிலையத்திற்கு. அங்கு லோயர் இன்னும் வந்தபாடில்லை. அவருக்கு அடுத்தவர் ஒருவர் வந்திருந்தார். முன்பு போனபோது அவர் அறிமுகமானவர். அவர் வரவேற்று அமரச் செய்தார். ஒருவிசேச செய்தியை- தந்தையார் ஒருவர் தனது மகளை கெடுத்துவிட்டான்- இப்படி ஒருவழக்கு வந்திருக்கு- என்ன செய்வது என்று தெரியவில்லை- என்று

கூலிவேலை செய்பவர்கள்- குடித்துவிட்டுக் கண்மண் தெரியாமல் நிப்பர்- எதிரே நின்றது பெண் எனத் தெரியும்- ஆனால் யாரென்று கண்களுக்குப் புலப்படாது. அந்த நேரம் ஒன்று இரண்டாகத் தெரியுமாம்! இனி என்ன செய்வது- நடந்து முடிந்துவிட்டது- பிள்ளை பிறந்தால் தகப்பன் பெயர் பதிந்து விடவேண்டியது தான்! வேறென்ன செய்வது? என்றாள் யோகம்மா மெல்லிய புன்னகையுடன். சில நிமிடங்களில் லோயரும் வந்துவிட உறுதியை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள் யோகம்மா. வரும் வழியில் பேரப்பிள்ளைகளின் படங்களையும் படமெடுக்கும் நிலையத்தில் பெற்றுச் சென்றாள். உலகம் போகிற போக்கை மனதில் அசைபோட்டபடியே.

# 40. இது பைத்தியம் தான்

ஒரு சமயம் சோதிடரிடம் போனபோது அவர் பலன்களையெல்லாம் கூறிவிட்டு கண்டம் ஒயன்று இருக்கிறது. அது கடந்தபின் பிரச்சனையில்லை என்றார். இது நடந்து பல மாதங்களாகிவிட்டன. சோதிடர் கூறிய கண்டம் தவணையும் முடிந்தது. ஒன்றும் நடக்கவில்லையே என்று யோசித்த போது சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது தவிகாவுக்கு.

ஒரு சமயம் பிள்ளை அகிலா கூறினாள் பிள்ளைகளை உங்களிடம் விட்டுவிட்டு நான் வெளிநாடு போய் வேலை செய்யப் போகிறேன் என்று உடனே தவிகா மருமகனுடன் டெலிபொனில் தொடர்பு கொண்டு அகிலா இப்படிச் சொல்கிறாளே? சும்பளப்பணம் போதவில்லையா எனக்கேட்டாள்.

அப்போது மருமகன் கூறினார் - அவளுக்கு ஏதோ மூளைக்கோளாறு - சம்பளப்பணம் போதும். அதைவிட கோழிவளக்கிறம் - என்றும் சீட்டுக்கட்டுவதாகவும் கூறிவிட்டுப் போனை வைத்துவிட்டார். மருமகனுடன் தவிகா கதைத்தது அகிலாவுக்குப் பிடிக்கவில்லை. அடுத்த நாளே ஊருக்கு வந்து பிள்ளைகளைக் கூட்டிச் செல்ல ஆயத்தமானாள் அகிலா. தவிகாவுக்குக் குழந்தைகளைப் பிரிந்திருக்க முடியவில்லை. வேணுமானால் மூத்தவரைக் கூட்டிக் கொண்டு போ - மற்றவை இங்கேநிக்கட்டும் என்று அகிலாவிடம் கேட்ட போது - டிக்கட் எடுத்தாச்சு எல்லோருக்கும் என்றுவிட்டுப் பிள்ளைகளைக் காரில் ஏற்றிச் சென்றாள்.

முன்பொரு சமயம் தவிகாவின் கணவன் தனசேகரன் கூறினான் - நீ உப்பிடிப் பிள்ளையளோடை - பழகிறாய் - ஒருநாள் உன்னை விட்டுப் பிரிந்து போனால் என்ன செய்வாயோ தெரியாது என்று.

போகவேண்டிய பிள்ளைகள்தானே! ஏன்று சர்வசாதாரணமாக கணவனிடம் கூறினாள். ஆனால் இப்போதான் தெரிகிறது - பிரிவின் துயரம். கார் போய் விட்டது. தவிகாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. இனிப்பிள்ளைகள் வரமாட்டார்கள் - நான் தனியேதான் - யாருக்குச் சமைப்பது? யாருக்குச் சாப்பாடு ஊட்டுவது? என்று அழுது கொண்டிருந்தாள்.

துக்கத்தைக் கட்டுப்படுத்தவென டி.வி. போடப்போனாள் - திடீரென ஏதோ கோடு மாதிரி ஓடுவது போன்றிருந்தது - கண்களுக்கு முன்னால் டீ.வி. இல்லை - வீட்டுச்சுவர் இல்லை - ஒரே மண்மேடுதான் உயரமாகத் தெரிந்தது - வேறு ஒன்றுமே தெரியவில்லை - தலைக்குள் தாங்கமுடியாத வலியேற்பட்டது. இரண்டு பனடோலை முழுங்கிவிட்டுக் குப்புறப்படுத்துக் கொண்டாள். சிறிது நேரத்தின் பின் வலி நின்றது. எழும்பியிருந்தாள்.

இப்போதெரிகிறது சோதிடர் கூறிய கண்டம் - ஆம் அவளுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது. ஆதனால்தான் கண்ணுக்கு எதுவுமே தெரியாமல் மண்மேடு மட்டும் தெரிந்தது. அந்நிலை தொடர்ச்சியாய் இருந்திருந்தால் அவள் "பைத்தியக்காரி" என்னும் பட்டம் பெற்றிருப்பாள். ஏதோ கடவுள் செயல் - பைத்தியம் எப்படி உண்டாகிறது. என்ன மாதிரி இருக்கும் என்பதைக் கோடிகாட்டிவிட்டு விட்டான் - ஆண்டவன். பின்பு சில மாதங்களின் பின் சுகவீனம் காரணமாக டொக்டரிடம் போனபோது பரிசோதனையின்பின் - தலையில் அடி பட்டதா? என்று கேட்டனர். இல்லை என்று பதில் கூறிவிட்டாள். ஆனால் இப்போ நினைத்துப் பார்த்தபோது - பைத்தியமான சில நிமிடங்கள் நினைவுக்கு வந்தன - அது ஓர் அடி தானே! கண்டத்திலிருந்து தப்பிவிட்டாள் - இறந்ததுக்கும் பைத்தியத்திற்கும் வித்தியாசம் இல்லையே? பைத்தியம் என்றால் இறந்ததில் ஒன்றுதானே?

# 41. வெறுப்பான செருப்பு

யோகம்மாவின் செருப்புகள் எத்தனை சோடிகள் ஏமாற்றிவிட்டுப் போய்விட்டன! கிளாலிப் பயணத்தில் படகுப் பிரயாணத்தின் போது - ஒரு சோடி கல்கிசை வீட்டீல் புத்தம்புது சோடி விட்டு வந்து திரும்பிப் போனபோது அவையில்லை - லோயர் வீட்டில் கழற்றிவைத்ததில் ஒரு சோடி - சோதிடர் வீட்டில் ஒரு சோடி - கோயிலடியில் ஒரு சோடி - மணவிழா வீட்டில் ஒரு சோடி - பூப்புனித நீராட்டு விழா ஒருசோடி - மரணச் சடங்கில் ஒரு சோடி - வீடு மாறிய போது ஒரு சோடி - அடேயப்பா! இவ்வளவு சோடிகளும் இப்படியா போக வேண்டும். ஓட்டோவில் ஒரு சோடி எப்படிப் போனது?

கடைசியாக யோகம்மா தனது கணவனுடய சப்பாத்து எடுத்துப்போட்டுக் கொண்டாள்! ஒருசமயம் செருப்புப் போடாமலே நடந்தாள். அதைப் பார்த்துவிட்டு அவள் கணவன் யோகராசன் செருப்பு வாங்கி வந்தான்-குதி உயரச் செருப்பு. றோட்டுக் கரையில் நடக்கும்போது கற்கள் இடறின! விழுந்து விடுவேனோ? என்ற பயத்துடன் நடக்க வேண்டியிருந்தது! கால் இலகுவாக ஊன்றி நடக்கக் கூடிய செருப்பு வாங்க வேண்டும் என்று நினைத்து - யோகராசனுடன் போனபோது சொன்னாள். செருப்புக்குக் காசு கொண்டு வந்தியோ? என்று அன்பு(!)க் கணவன் வினவினான்! என்னுடைய அவர் வெளிநாட்டில் இருக்கிறார் - செருப்பு வாங்கிய றிசீற் அனுப்பினால்தான் பணம் அனுப்புவார் எனக்கு! என்றாள் யோகம்மா.

போனவிடயம் முடிந்து வீட்டிற்கும் வந்து விட்டனர். யோகராசன் கேட்டான் - செருப்பு வாங்கவில்லையே? என்று. அடுத்த தடைவ போகும்போது பார்ப்போம் என்று சிரித்தாள் பாசமுள்ள(!) மனைவி(!) ஆகா! இப்படியல்லவா தம்பதிகள் இருக்க வேண்டும்.

## 42. சிறுமியின் பண்பாடு

நான் யாழ்ப்பாணம் போறன் - வரப்போகிறீரோ? அச்சகத்தில் புத்தகம் எடுத்தாச்சோ? என்று கேள்விகளை அடுக்கினான் - நாராயணன்.

புத்தகம் இன்னும் எடுக்கவில்லை - வேலை முடிந்ததும் டெலிபோன் எடுக்கிறன் என்று சொன்னவர் - டெலிபோன் நம்பரைத் தவறவிட்டாரோ தெரியாது எதற்கும் போய் வருவம் என்று கூறிய சீத்தா நாராயணனுடன் ஓட்டோவில் ஏறிக்கொண்டாள். ஆட்டோ கச்சோரி நோக்கிப் பறந்தது. இருபத்தைந்து நிமிட நேரத்தில் கச்சேரி அருகில் உள்ள "குயிக்" அச்சகத்தின் முன் நின்றது. நாராயணன் தம்பதிகளைக் கண்டதும் - அய்யா அம்மா வாங்கோ? என்று வரவேற்றபடி அச்சக முதல்வர் வரவேற்றார். புத்தக வேலை முடிந்ததா? என்று கேட்ட போது - அங்கிருந்த வேலையாளைக் கேட்டார் முதல்வர் எல்லாம் அடிச்சு முடிந்ததா? என்று. இன்னும் வேலை முடியவில்லை என்று வேலையாள் பதில் கூறியதும் முதல்வர் கேட்டார் சீத்தாவிடம் உங்களுக்கு எப்ப தேவை? என்று. கெதியிலை தந்தால் நல்லது என்று. கூறிய சீத்தா - இன்னொரு சிறுகதை தொகுதி கொண்டு வந்திருக்கிறேன் என்று முதல்வரிடம் கொடுத்தாள். நான்கு நாட்களில் முந்திய புத்தகம் வேலை முடிந்துவிடும் - தந்து விடுகிறேன் என்று கூறி நாராயணன் தம்பதியை அனுப்பிவைத்தனர் - உவை இப்படித்தான் சொல்லுவினம் - நான்கு நாள் என்று - என்றாள் சீத்தா.

அடுத்து ஓட்டோவை மக்கள் வங்கிப்பக்கம் விடச் சொன்னார் - நாராயணன். அங்கு சென்றதும் இறங்கிச் சென்று வங்கியில் பணம் எடுத்து வந்தார். கடையில் சாமான்கள் வாங்கவென்று இறக்கிவிட்டுச் சென்று விட்டார். சீத்தா அன்று தான் முதன்முதலாக கடையில் சாமான் வாங்கிப்பழகிறாள்! இத்தனை வருடமும் நாராயணன் வாங்கிவர சீத்தா சமைத்துக் கொட்டுவாள் - ஒரு சமயம் நாராயணன் சீத்தாவிடம் கேட்டான். ஒரு கிலோ அரிசி என்ன விலை? என்று! எனக்கேன் தெரியவேணும்? என்று சிரித்தாள் சீத்தா. சாமான் வாங்கி முடிய நாராயணன் வந்து சாமான்களை ஏற்றிக் கொண்டார். அடுத்து

மீன் சந்தைப் பக்கம் போனார்கள். அங்கு போனால் நாற்றம்! சீத்தாவுக்குப் புதுப்பழக்கம் சந்தையில் சத்தம் காதைப்பிளந்தது! எல்லாமே புது அனுபவம் அவளுக்கு. சரி என்று பார்த்தபோது கும்பிழா மீன் பார்வைபட்டது. ஐந்து மீன்கள் இருநூறு ரூபா என்று வாங்கிக் கொண்டாள். அவள் மாமிசம் சாப்பிடுவதில்லை! சுத்த சைவம். எல்லாமே கணவனுக்குத்தான்.

வாழைப்பழம் வாங்க வேணும் என்று கடையில் நிப்பாட்டச் சொன்னார் நாராயணன். அப்போது சீத்தா கூறினாள் - வீட்டில் பழக்குலை இருக்கே என்று, அது பொங்கலுக்கு வைக்கக் கூடாது என்று விட்டு ஒருசீப்புப் பழம் வெட்டச் சொன்னார். பேப்பரில் போட்டிருந்தது - சாமிக்கு எந்த வாழைப்பழமும் வைக்கலாமென்று - சிலர் தவறான கருத்துச் சொல்கிறார்களென்றும் - என்று சீத்தா கூறியபின் ஓட்டோவை சுவீப் டிக்கட் கடையடியில் நிறுத்தி சுவீப் டிக்கற் வாங்கிக்கொண்டு நின்ற போது - ஒரு நபர் டிக்கட் ஒன்றை வலு மும்முரமாகச் சுரண்டிக்கொண்டிருந்ததைப் பார்த்த சீத்தாவுக்குச் சிரிப்பு வந்தது! சுரண்டியதும் அந்த நபருக்குப் பணம் கிடைக்கும் என்று எண்ணம். அவள் சிரிப்பைப் பார்த்து விட்ட டிக்கற் விற்பனையாளரும் சிரித்தார். சுரண்டிப் பணம் சேர்ப்பது எவ்வளவு சுலபமான காரியம்!

சீத்தா சிரித்துக் கொண்டிருந்ததில் ஓட்டோ சலூன் பக்கம் நின்றதை அப்போது தான் கவனித்தாள் - ஏன் அங்கே நிற்கிறது? நேரே வீட்டிற்கு அல்லவா போக வேண்டும்? என்று நினைத்து டிறைவரிடம் கேட்டபோது - ஐயா தலைமயிர் வெட்டவேணுமாம் - என்றான். அன்று தலைமயிர் வெட்டி இன்று மூன்று நாள் தானே ஆகிறது? என்று கேட்டாள் டிறைவரிடம். அது தலைமயிர் வளர்ந்து விட்டதாம்! என்று கூறி டிறைவர் சிரிக்க சீத்தாவும் சிரித்தாள்! ஏனெனில் நாராயணன் தலை மொட்டை - ஆங்காங்கு சில தலைமயிர்கள்தான் இருந்தன.

ஓமோம்! அவர் - "எவார் மேசன்" மருந்து வைக்கிறவர் தலைக்கு - தலை மயிர் நல்லா வளருதுபோலை என்றாள் சீத்தா. சலூன் உள்ளே நாராயணன் அமர்ந்திருந்தான். அவருடைய முறை இன்னும் வரவில்லை.

தலைமுடி வளரும் வரை அதில் இருக்கிறாரோ! என்று கூறிச் சிரித்தாள் சீத்தா. ஏனென்றால் வெட்டுவதற்குத் தலைமயிரும் வேணுமே?? சீனாவில் தலைமயிர் நடுகினமாம் மொட்டைத்தலையில் - அங்கு போனால் எல்லாம் செய்து கொண்டு வரலாம் என்று ஒரு தடவை நாராயணனுக்குச் சீத்தா சொல்லியிருக்கிறாள்!

அரை மணிநேரத்தின் பின் மயிர் வெட்டும் படலம் முடிந்து வீடு வந்து சேர்ந்தனர் - நாராயணன் தம்பதி. ஓவ்வொரு பொருளாக எடுத்து வைத்துவிட்டு - பச்சை அரிசி உலையில் போடுவம் என்று பார்த்தபோது கடைக்காரன் புழுங்கல் அரிசி கட்டியிருக்கிறான்! நல்ல வேளை இப்போது பார்த்தது - இல்லாவிட்டால் நாளைக்கு பொங்கலுக்கு என்ன செய்வது? உடனே நாராயணனிடம் கூறினாள் - பச்சை அரிசிக்கு டிறைவரிடம் சொல்லும்படி. அதன் பின் குத்தரிசி போட்டுச் சமைத்துக் கொண்டாள்.

மறு நாள் அதிகாலை நான்குமணி நாராயணன் எழுந்து வந்து மனைவி சீத்தாவிடம் கூறினான் - குளிப்பதற்குச் சுடுநீர் வைக்கும்படி. இருவரும் குளித்துவிட்டு பொங்கலுக்கு ஆயத்தம் செய்தனர். மகள், பேரப் பிள்ளைகள் வந்தனர். வெடிச்சத்தம் படீர் படீர் என்றது நான்கு பக்கமும். சீத்தா வீட்டில் பையன்கள் இல்லை - சீனாவெடி கொளுத்துவதற்கு!

சீத்தாவுக்குப் பேர்த்தியார் தேனுகா புது உடுப்பு கொண்டு வந்து கொடுத்துவிட்டு இதை நீங்கள் இன்று முழுக்கப் போட்டபடியே இருக்கவேண்டும் என்றாள். பின்பு உடுப்புப் போட்டபின் வந்த பார்த்துவிட்டு - உங்களுக்கு அளவாயிருக்கு என்றாள். நீங்கள மஞ்சள் குங்குமம் வைக்க வேணும் என்று கூறிவிட்டுச் சாமிஅறை சென்று திருநீறு எடுத்து வந்து பாட்டியாரிடம் நீட்டினாள். பாட்டியாரும் அதை வாங்கிப் பூசிக்கொண்டார் நெற்றியில் - பேர்த்தியாரின் சைவப்பண்பாட்டை மனதில் மெச்சியபடியே.

பொங்கி முடிந்ததும் சீத்தா கூறினாள். புக்கை பொங்கியாச்சு என்று. “பொங்கல்” என்று சொல்லுங்கோ? என்று பாட்டியாரிடம் அழகாகக் கூறினாள் தேனுகா - இனியென்ன - பொங்கலைப் படைத்துவிட்டுச் சாப்பிடவேண்டியது தானே!

## 43. அநித்தியம்

கதைக்கப் பழகின நாட்தொட்டு வளர்ந்த பிள்ளைகள் இன்று இல்லை! பாட்டன் கிழவன் அழுது புலம்பியபடியே படுத்துக்கிடந்தான். பாட்டிக்கிழவியோ முருகா! முருகா! தாயே! பிள்ளையாரே! விட்டுணுவே - வைரவரே! வீரபத்திரரே! அனுமாரே! என்று ஒவ்வொரு தெய்வமாகக் கூவியழைத்துக் கொண்டு நித்திரையின்றி சிவராத்திரி கொண்டாடினாள். அன்று சிவராத்திரி தினமா என்றால் அதுதான் இல்லை! பின் ஏன் பாட்டிக்கிழவி மருதி சிவராத்திரி கொண்டாடுகிறாள்?

அன்று காலை மருதி சமையல் செய்து முடித்துவிட்டுக் காலைத் தேநீர் குடிப்பம் என்று கையில் எடுத்தபோது - பாட்டன் கிழவன் எழுந்து நின்று சத்தம் போடுவதைக் கண்டுவிட்ட மருதிப்பாட்டி மெல்ல அவ்விடம் போனாள். மகளும் ஏட்டிக்குப் போட்டியாகக் கத்திக்கொண்டு நின்றாள்.

பாட்டன் மருதையர் கூறினார் - நான் எத்தனை லட்சம் செலவழித்திருக்கிறேன் பிள்ளையளுக்கு? உனக்குத் தெரியுமோ அதெல்லாம்? இவ்வளவு காலமும் செலவழித்த காசுக்கு வட்டியைப் பார்த்தாலே ஒரு தொகை வருமே! என்று ஏதோ புலம்பினார். அந்தச் சொற்கள் மகள் கீர்த்திகாவைச் சுட்டுவிட்டது! அதெல்லாம் என்ரை தம்பி வெளிநாட்டிலை இருந்து பிள்ளையளுக்கு என்று அனுப்பின காசுதானே நீங்கள் என்ன செலவழிச்சனீங்கள் என்று கீர்த்திகா வெடித்தாள். அதன் எதிரொலி இப்படியொரு சிவராத்திரி வரும் என்று எதிர்பார்க்கவில்லை. மறுநாள் கீர்த்திகா தனது பிள்ளைகள் மூவரையும் அழைத்துச் சென்று எங்கோ விட்டுவிட்டு வந்து - அவளும் பயண 'பாக்'குடன் வெளியே போக ஆயத்தமானாள்.

அதைப்பார்த்த மருதிப்பாட்டி - கொழும்பு போகிறாயா? திரும்பி எப்ப வாறது? பிள்ளைகள் எங்கே? என்று கேட்டாள். பிள்ளையள் எனி இங்கை வரமாட்டினம். நீங்கள் வீடு மாறிய பிறகுதான் வருவேன் என்று கீர்த்திகா கூறவும் - கொப்பன் ஒரு விசரன். என்னோடையும் உப்பிடித்தானே கதைக்கிறவன்? இதுக்காக நீ ஏன் பிள்ளையளை வேறு வீட்டிலே விட்டனீ? என்று கேட்டுக் கொண்டிருந்த சமயம் வாகனம் வந்து நின்று கோண் அடித்தது. கிருத்திகா எதுவும் பேசாமல் எழுந்து போய்விட்டாள்.

மருதிப்பாட்டி மருதையரை ஏசினாள். உனக்குப் பிள்ளையளோடை கதைக்கத் தெரியாதே? என்னோடை கதைக்கிறமாதிரி அவளோடை சவால் பேச்சுப் பேசினியே? எல்லாரையும் துரத்திப் போட்டியே? நானும் உப்பிடியே போறன் - நீ இருந்து கொள்ளு. மூதேவி - சனியன் - என்று.

அவள் பாசமாய் வளர்த்த பிள்ளைகள் தன்னை விட்டுப் போனதில் அவள் பெரிதும் மனவேதனை அடைந்தாள். அதன் தாக்கமே அந்த ஏச்சுக்கள். இரவு அவளுக்கு நித்திரை வரவில்லை எப்படி வரும்? பெற்றவள் மகளே தவிர வளர்த்தவள் அவள் அல்லவா? ஆமாம்! பன்னிரண்டு வருடங்கள் எப்படி உருண்டோடி விட்டன?

அது சரி - "அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல்" என்று புது மொழியல்லவா இப்போ வழக்கத்திலும் பழக்கத்திலும் வந்துவிட்டது.

இதற்காகத்தான் பந்த பாசங்களை அறுங்கள் - எல்லாமே அநித்தியம் என்று வேதங்கள் கூறுகின்றனவோ, பாசம் இல்லை என்றால் வாழ்க்கை ஏது? உலகம் ஏது? இது என்ன குழப்பம்? அநித்தியம் - என்று மருதிப்பாட்டி கத்திக்கொண்டிருக்கிறாள். பாட்டனோ அழுது கொண்டிருக்கிறான்.

## 44. ஓடி வருவார்

அன்று வடமராட்சிப் பக்கம் போக வேண்டியிருந்தது. காலை பத்தரை மணிக்கு பருத்தித்துறை இ.போ.ச.வைப் பிடிக்க வேண்டும். அதனால் விரைவாக காலை - நண்பகல் உணவைச் சமைத்து முடித்தாள் ஞானசூரி. வாகனத் தரிப்பிடத்தில் வந்து நின்றுகொண்டாள். அதே சமயம் வாகனமும் வந்து விட்டது. உள்ளே ஏறியதும் டிக்கட் என்றார் நடத்துனர். கவிதை ஒன்று என்று கூறிய படியே பணத்தைக் கொடுத்தாள் ஞானசூரி.

கலிகையில் இறங்கி நடையில் சென்றாள். அப்போது வழியில் அவளுடைய பாடசாலை சினேகிதி சந்திராணி வீட்டின் கேற்றடியில் நின்றாள். ஞானசூரியைப் பார்த்ததும் முகமலர்ச்சியோடு - வாரும் உள்ளே போவோம் என்று அழைத்துச் சென்றாள். உள்ளே போனதும் அவளை இருக்கும்படி கூறிவிட்டு தேநீர் போட்டு எடுத்து வந்து கொடுத்துக் கொண்டே - அப்பம் சாப்பிடுங்கோவென் என்று கேட்டாள் சந்திராணி.

கேட்டதற்கு நன்றி - இன்று நான் விரதம் அதனால் சாப்பிட முடியாது - என்றாள் ஞானசூரி. "இவர்" இருந்தால் சாப்பிடுவர் - அவரும் இல்லை என்றாள் - சந்திராணி.

ஏன் அவர் எங்கே? ஏன்று கேட்டதற்கு - அவர் தன்னுடைய ஊருக்குப் போய்விட்டார் - என்னுடன் கோபம். எனது வங்கிக்கணக்கில் இருந்த பணத்தையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார். இங்கே இருக்கும்போது பென்சன் எடுத்து என்னிடம் ஒருசதமேனும் தரமாட்டார். மீன் வியாபாரியிடம் மீன் வாங்கி அவரிடம் காட்டி விலையைச் சொன்ன பிறகுதான் பணம் கொடுப்பார் - அயல் வீட்டார் யாரும் வந்தால் தேநீர் கொடுக்க விடமாட்டார். சின்னப் பிள்ளைகளுக்கு கூட ஏதும் இனிப்புவகை கொடுக்க விடமாட்டார்.

இப்ப கடிதம் எழுதியிருக்கிறார் - இரண்டு கையையும் நீட்டி அழைக்கிறேன் இங்கே வந்து சேர்ந்துவிடு என்று. இங்கே வீட்டிலேயே இப்படிப்பட்டவர் - அங்கே போனால் எப்படியோ? அங்கே யார் ஆதரவும் இல்லையே - இங்கேயென்றால் எனக்கு சகோதரம் - இனசனம்

என்றிருக்கும். உங்கடை அவர் சரியான சுடுதண்ணியெல்லே? எப்படிச் சமாளிக்கிறியள்! எனக்கும் கொஞ்சம் புத்தி சொல்லித்தாருங்கோ - சீவியத்துக்கும் பணம் அவர் தருவதில்லை - வழக்குப் போடட்டோ? என்று சந்திராணி தனது நிலைபற்றிக் கூறினாள்.

அவளுடைய கணவர் பிரதேச செயலகத்தில் சீவ் கிளாக்காக இருச்தவர் - பெயர் நரசிங்கம். அங்கே ஞானசூரியின் கணவன் சம்பளப்பணம் வாங்குவதற்கு இருந்தார் - யாருடைய காரிலோ போயிருந்ததால் - சம்பளத்தைக் கேட்டிருக்கிறார். உம்முடைய முறை வரட்டும் தருகிறேன் - ஏன் அவசரப்படுகிறீர் என்றார் நரசிங்கம்.

வழமையாக அப்படித்தான் அவர் காத்திருந்து தனது முறை வந்தபின் வாங்குவார். மற்றவருடைய காரை மினைக்கெடுத்தக் கூடாதென்று தான் அன்று பணத்தைக் கேட்டிருக்கிறார். நரசிங்கத்தின் பதில் கோபத்தை வரவழைக்கவே - கோபத்துடன் ஞானசூரியின் கணவன் பலராமன் "விசுக்" என்று வெளியேறினான். பின்பு தனக்குச் சம்பளப் பணம் தரவில்லையென்று நரசிங்கத்தற்கு எதிராகப் புகார் கொடுத்தார் பலராமன். நரசிங்கம் பணம் கொண்டு வந்தால் நீர் வாங்க வேண்டாம் என்று மனைவியிடமும் கூறிவிட்டார் பலராமன். சாயந்தரம் நரசங்கம் பணம் கொண்டு வந்து நீட்டினார் - ஞானசூரியிடம் - அவரிடம் கொடுக்கும்படி . அப்போது ஞானசூரி கூறினாள் - பலராமனும் மனைவியும் எங்கோ வெளியே பேயிருக்கிறார்கள் என்று நரசிங்கம் பணத்துடன் திரும்பிச் சென்றார்.

ஒருசமயம் "பாட்டி" நடைபெற இருந்தது. "கேக்" வாங்கிவர நரசிங்கம் போயிருந்தார். நேரம் போய்க்கொண்டிருந்தபோது - கேக் வரவில்லையென்று கதைத்துக்கொண்டிருந்த போது - நரசிங்கம் வந்து சேர்ந்தார் கேக்குடன். ஆ! கேக் வந்தாச்சு - என்று ஒருவர் கூறினார். அன்று தொடக்கம் அவருக்கு "கேக்" பட்டம் சூட்டி கேக் என்றே நரசிங்கத்தை அழைத்தனர்!

அந்த "கேக்" சொல்லியிருப்பார் தன் மனைவியிடம் - பலராமன் சரியான சுடுதண்ணியென்று! கேக் முதல் தரம் செய்த மனைவி இறந்துவிடப் பிள்ளைகளின் வற்புறுத்தல் என்று கூறி சந்திராணியைக் கல்யாணம் செய்தார். அவருக்குச் சலரோகம் - ஆளைக்கடத்திவிடுவம் என்றுதான் பிள்ளைகள் அவரைக் கல்யாணத்திற்கு வற்புறுத்தினர்! கடைசி காலம் தங்களுக்கு கரைச்சல் இல்லாமற் போகட்டும் என்று சந்திராணியும் வயது கூடிய பின் தான் திருமணம் செய்தார் அதனால் பிள்ளைகளும் இல்லை.

சந்திராணி தன்நிலை பற்றிக்கூறி அறிவுரைகேட்டபோது - எனது கணவர் சுடுதண்ணி - அதற்குள் கொஞ்சம் குளிர் நீர் ஊற்றிவிடுகிறேன்! சரியாகிவிடும் என்று சிரித்துக்கொண்டே கூறிய ஞானசூரியிடம் சந்திராணி தன் கணவரின் கடிதத்தைக் காட்டினாள் வாசித்துப் பார்க்கும்படி! ஞானசூரியும் அதை வாங்கிப்படிப்பது போல் பாவனை செய்து விட்டுத்திருப்பிக் கொடுத்தபடியே கூறினாள் - நீங்கள் என்னை நோக்கி நீட்டிய கைகள் கண்ணுக்குத் தென்படவில்லை - இன்னும் சிறிது நீட்டவும் - என்று கடிதம் எழுதிப்போடும். நீர் கோட்டில் வழக்கொன்று போடத்தேவையில்லை - ஆள் கெதியிலை இங்கே வீட்டுக்கு வந்து சேருவார் - என்று கூறிய ஞானசூரி சந்திராணியிடம் விடைபெற்றாள்.

"கேக்" நரசிங்கத்திற்கு நீரிழிவு காரணமாகக் காலில் புண்ணுண்டாகியிடுந்தது - இன்னும் சில மாதங்களில் அவரால் நடக்க இயலாமலும் வரலாம் . பிள்ளைகள் அவரைப் பராமரிக்கமாட்டார்கள் - ஓடு - உன் பெண்டாட்டியிடம் என்று தான் துரத்துவர்! இதுதான் ஞானசூரியின் கண்டுபிடிப்பு!

சில மாதங்களின் பின்பு ஞானசூரியைச் சந்தித்தபோது சந்திராணி கூறினாள் - நீங்கள் சொன்ன வாக்குப் பலித்து விட்டது - "இவர்" எனது வீட்டிற்கு வந்துவிட்டார்! என்று ஞானசூரியின் வாக்குப் பொய்க்காதே!

## 45. இனி வருவேனோ?

வீட்டுக்கு வரும்போது கூடவே ஒரு நபரையும் அழைத்து வந்தான் சந்திரன். மெல்லிய உயரமான தோற்றம் - சந்திரலேகா புதிய நபரை வரவேற்றாள். அவர் ஓர் சோதிடர் என்று அறிமுகப்படுத்தினான் சந்திரன். பெயர் ராமநாதன் தேநீர் கொடுத்து உபசரித்த சந்திராவிடம் - சாதகக் குறிப்பைக் கொண்டு வரும்படி கூறினார் சந்திரன். சந்திரலேகா உள்ளே சென்று சாதகக்குறிப்புகளை எடுத்துவந்து கொடுத்தாள். அவரும் கணக்கு வழக்கு எல்லாம் போட்டுப்பார்த்துவிட்டுப் பலன்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாம் நல்ல பலன்களேதான்! சந்திரனுக்கு உச்சி குளிர்ந்தது! முடிவில் சோதிடருக்குப் பணம் கொடுத்து அனுப்பி வைத்தான்.

இதன் பின்னர் சோதிடர் இடையிடையே வீட்டுக்கு வருவதும் சோதிடம் சொல்வதும் வழக்கமாயிற்று. ஒரு சமயம் தனது வரலாற்றையும்

கூறினார் - "பைலட்" டாக வேலை செய்தவர். மனைவி பிள்ளைகள் சகிதம் இருந்தபோது - ஒருநாள் தனது நண்பர் ஒருவர் சோதிடம் கேட்க அச்சுவேலி போவதாகவும் தன்னை வரும்படி கேட்க தானும் போனதாகக் கூறினார். தனக்கு அப்போத சோதிட விடயத்தில் நம்பிக்கையில்லை யென்றாலும் நண்பன் வரும்படி கேட்டதற்காக அவருடன் போனார். நண்பன் சோதிடர் வீட்டினுள் போய்விட தான் வெளியே நின்று கொண்டார்.

சோதிடம் முடிந்து நண்பரும் சோதிடரும் வெளியே வந்த போது - சோதிடர் 'பைலட்'டிடம் நட்சத்திரம் - பிறந்ததேதி கேட்டறிந்த சில நிமிடங்களில் கூறினார் - இரண்டு வாரங்களில் தெருவில் நிற்பீர் என்று.

நானா? தெருவில் நிற்பதா? ஏன் நிற்க வேண்டும்? ஏனக்கென்னகுறை? சம்பளம் வருகிறது - மனைவி - பிள்ளை இருக்கிறார்கள் - என்னும் எண்ணத்தில் வீட்டுக்குப்போனபோது - அவரது மனைவி வெள்ளைக்கார ஆடவனுடன் சல்லாபத்தில் இருந்ததைப் பார்த்தார். அன்று வீட்டை விட்டு வெளிக்கிட்டவர் சோதிடம் படிக்க வேண்டும் என்று படித்தார் - பைலட் வேலையையும் விட்டுவிட்டார். எங்கேயும் நிலையாக இருப்பதில்லை - நாடோடிபோல் திரிவதும் சோதிடம் சொல்லித்தன் வயிற்றுப்பாட்டைப் பார்ப்பதுமாக இருந்தார். எண்கணித முறை - அங்கலட்சணம் - எல்லாமே சோதிடத்தில் படித்திருந்தார்.

சந்திரனுடன் மிகவும் பழகிவிட்டதில் - சோதிடம் சொல்லவரும் போது சோற்றுப் பாசல் ஒன்றும் சோதிடருக்கு கொடுக்கப்பட்டது. கிடைக்கும் பணத்தில் கள்ளு - சாராயம் குடிப்பார்! ஒரு சமயம் தனது படத்தைக் கொண்டு வந்து காட்டினார் "இதுதான் இந்தக் கழுதை" என்று கூறியபடி! படத்தில் மிடுக்காக நின்றுகொண்டிருந்தார்!!

ஒருநாள் யாரோ கொடுத்த உணவை சந்திரன் விட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சந்திரனின் மகன் சந்திரகாசன் - சிறுபையன் எட்டிப் பார்த்தான் - அடே! வங்காளிக் கள்ளா! என்ன எட்டிப் பார்க்கிறாய் என்றார். இன்னொரு சமயம் காலை வேளை - சந்திரனிடம் ஏதோ அலுவலாக பெண்மணி யொருவர் வந்திருந்தார். அப்போது சோதிடர் இருந்தார். அவர் சாப்பிட நினைத்தார்போலும். மற்றவர் பார்க்க அவர் சாப்பிட விரும்புவதில்லை. அதனால் அந்தப்பெண்மேல் சினம் வந்தது - விடிகாலையில் வந்திருக்கிறது சனியன்! என்றார்.

அந்தப் பெண்ணுக்குக் காது கேட்பது குறைவு - அதனால் அப் பெண்கூறினார் - எனக்குக் காது கேட்பது குறைவு என்று. அதுதான் நல்லது!

என்று கூறிவிட்டுப் பேசாமலிருந்தார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரலேகாவுக்குச் சிரிப்பு வந்தது!

அன்று சனிக்கிழமை பதினொருமணி. பலாக்கொட்டை வெட்டிக் கொண்டிருந்தான் வேலைக்காரப் பையன். அதைப் பார்த்துக் கொண்டிருந்த சோதிடர் கூறினார். பலாக்கொட்டையோடு முருங்கைக்காய் போட்டுக் கறி வைத்தால் நன்றாக இருக்கும் - என்று. உடனே வேலைக்காரப் பையன் கூறினான் - நல்லாய்ச் சாப்பிடலாம் என்று! சோதிடர் கையில் எப்போதும் தடி ஒன்று வைத்திருப்பார் - பையன் அப்படிச் சொன்னதும் தடியை எடுத்துக்கொண்டு பையன் பக்கம் வந்தார். பையன் எழுந்து ஓடியபடியே - அம்மா? இங்கே பாருங்கோ - அடிக்க வாறார் என்றான். சந்திரலேகா எட்டிப்பார்க்கவும் சோதிடர் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

சோதிடர் கூறும்போது ஒவ்வொரு விடயம்தான் கூறுவார் - முழுவதும் கூறமாட்டார். முழுவதும் கூறிவிட்டால் அடிக்கடி வந்து எதைச் சொல்வது - எப்படிப் பணம் கேட்பது!

பின்னர் கிழமைக்கு ஒரு தடவை வரத்தொடங்கினார். பணம் வேணும் கள்ளுக்குடிப்பதற்கு. சந்திரன் இல்லாத சமயங்களில் சந்திரலேகா பணம் கொடுக்க வேண்டியிருந்தது. ஒருநாள் சாப்பாட்டுப் பாசல் மட்டும் கொடுத்தாள். காசுவேணும் என்று நின்று கொணடார் - சோதிடர். பணம் இல்லையென்றபோது - உணவுப்பாசலை வீசுவேன் என்றார் - அதற்கென்ன வீசலாம் என்றாள் சந்திரலேகா. உணவுப்பாசலை வெளியே வீசிவிட்டு நடையைக்கட்டினார் சோதிடர்! சில நாட்களாக வரவில்லை. பின்னர் வந்து சேர்ந்தார். அப்போது இந்தியன் ஆமியும் வந்து சேர்ந்த சூழல். சோதிடர் தூய ஆங்கிலம் பேசக் கூடியவர்.

சந்திரன் கேட்டான், ஆமியள் உங்களுடன் பிரச்சனைப் படவில்லையா? என்று. இதுவரையில் அப்படி ஏதும் ஏற்படவில்லையென்று கூறிவிட்டு "குடி"ப்பதற்குப் பணம் கேட்டார். இருபது ரூபா பணம் கொடுத்த போது அதைவாங்கிக்கொண்டு - இனி நான் எங்கே வரப்போகிறேன் என்றபடி வெளியேறினார். அடுத்தநாள் செய்தி கேள்விப்பட்டனர் சந்திரன் குடும்பம் - கள்ளுக்குடிக்கப்போன இடத்தில் இந்தியன் ஆமி சுட்டு சோதிடர் இறந்துவிட்டதாக.

பாவம் அந்த மனிசன்! தன்னுடைய இறுதி காலத்தைத் தெரிந்து கொண்டுதான் - "இனி நான் எங்கே வரப்போகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். எனக்கென்ன குறை என்றிருந்தவர் நிலை இப்படியானதே?

# 46. எவரின் வேலையோ?

அவள் வேலைக்காரியாக அமர்த்தப்பட்டாள் அந்த வீட்டுக்கு. பணக்கார வீடு. சிறுகுழந்தைகள் நிறைந்த குடும்பம். அவளும் அதே ஊரைச்சேர்தவள் தான் - அதுவும் அயலில் உள்ளவள்.

முத்துப் பற்கள் என்றால் அவளின் பற்கள்தான் உவமை கூறவேண்டும் - அடுக்கான முத்துப் பற்கள் - பளீர் சிரிப்பு. அள்ளிச் செருகிய கொண்டை சட்டைபோடாத - குறுக்குக்கட்டுச்சேலை. அதாவது சட்டைபோடாமல் சேலை மார்பில் குறுக்காகக் கட்டுதல். அப்படி அணிவதைக் "குறுக்குக்கட்டு" என்பர். சிறிது கருமையான உடல் - பார்ப்பவர் மனதைச் சுண்டியிழுக்கும் உடல்வாகு.

பெண்களே பார்த்து பொறாமைப்படக்கூடியவள்! ஆண்களின் கண்களுக்கு எப்படியிருக்குமோ!! சிறுகுழந்தை முதல் பெரியோர்வரை அன்புடன் பழகுவாள். பெற்றோர் வள்ளி என்று பெயரிட்டனர் அவளுக்கு. அந்த வீட்டில் ஓர் ஆண்மகனும் வீட்டுக் காவலுக்கு என்று இருந்தான். இரவில் தனி அறையில் அவனுக்கு படுக்கை வசதி கொடுக்கப்பட்டிருந்தது. வீட்டுத்தலைவர் "குடி"ப்பதில் வீரர். முல்லைத்தீவில் வேலை - காடியர் என்று அழைப்பர். வாரம் ஒரு தடவை வீட்டுக்கு வந்து போவார். அவரின் பேச்சு வார்த்தைகள் ஒரு மாதிரியிருக்கும் - அதாவது கிறக்கமான(!) பேச்சாக இருக்கும்.

இடிச்செய்தி ஒன்று அன்று பரவலாகப் பேசப்பட்டது. "வள்ளி என்னும் கன்னிப்பெண் நஞ்சு குடித்து தற்கொலை செய்து கொண்டாள்" என்பதே. அச்செய்தி எல்லோரும் மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயப்பட்டனர். வள்ளி வயிற்றில் குழந்தை! கல்யாணம் ஆகாமல்.


பொலிசுக்கு காசைக்கட்டி விடயத்தை அமுக்கி விட்டனர். காடியர் குடும்பம். ஏன் - என்ன நடந்தது? வீட்டில் இருக்கும் ஆண்மணிகளில் யார் செய்த வேலை என்பது யாருக்குத் தெரியும்? ஆண்டவனைத்தவிர - ஆண்டவன் வந்து சாட்சி சொல்வானா? ஆண்டவன் சாட்சி சொல்வானாயிருந்தால் உலகில் பாபச் செயல்கள் நடக்குமா? ஆண்டவன் நடனமாடிக் கொண்டிருக்கிறான் - பத்திரகாளிக்குப் போட்டியாக!

நமது வள்ளி போயே போய் விட்டாள். எவ்வளவு இன்பச் சுமைகளை மனத்தில் சுமந்திருந்தாளோ? காமுகன்களை ஈவிரக்கமின்றி வெட்டிச் சரியுங்கள் - இல்லாவிட்டால் நம் வள்ளிபோல் ஆயிரம் வள்ளிகள் நஞ்சு குடித்துத் தற்கொலை செய்வர்.

ஆண்டவன் நின்றறுக்கும் வரை தாமதியாதீர்!

---

முற்றும்





பதிப்பு : மெகா டிஜிற்றல் 101, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 7538305